
சுவடி : 42
ஏடு : 7
சனவரி 2018
*
ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**
*
ஆசிரியர் குழு
**க. முகிலன்**
**தமிழேந்தி**
**வாலாசா வல்லவன்**
**வையவன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**தி.துரைசித்தார்த்தன்**
**ஆ. முத்தமிழ்ச்செல்வன்**
*
அலுவலக
நிருவாகப் பொறுப்பு
**ப. வடிவேலு**
94441 05892
*
அனைத்துத் தொடர்புகளுக்கும்
**'சிந்தனையாளன்'**
2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர்,
எம்.டபிள்யூ.பி. 2ஆம் குறுக்குத் தெரு,
அம்பத்தூர், சென்னை - 53.
தொடர்புக்கு :
94448 04980
044-2625 2119
மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly
@gmail.com
*
இதழ் வடிவமைப்பு :
**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179
*
இணையத்தில் படிக்க
**www.keetru.com**
*

# தந்தை பெரியாரின் குறிக்கோளை வென்றெடுத்திட, உண்மையான இந்தியக் கூட்டாட்சியே ஏற்ற வழி!



**த**ந்தை பெரியார் ஈ.வெ. இராமசாமி அவர்களின் பள்ளிப் படிப்பு, வெறும் நான்காம் வகுப்பு மட்டுமே.

அவர் 1912இல் பொது வாழ்வில் ஈடுபட்டார். 1907இல் காங்கிரசில் நாட்டங்கொண்ட அவர் உண்மையான காந்தியவாதியாக 1925 நவம்பர் வரை விளங்கினார்.

1924 மார்ச்சில், கேரளத்தில் தீண்டாமை ஒழிப்புப் போரில் ஈடுபட்ட அவர், தம் துணைவியார், உறவினர்கள் ஆகியோருடன் ஓராண்டுக்குமேல் போராடினார்.

அப்போது, சென்னை மாகாணத்தை 17.12.1920 முதல் நீதிக்கட்சி என்னும், "பார்ப்பனர் அல்லாதார் கட்சி" ஆண்டது. அக்கட்சி சட்டமன்றப் பதவிகளையும், அரசு நிருவாகப் பதவிகளையும் கைப்பற்றுவதிலேயே நாட்டம் கொண்டது. இத்துறைகளில் பார்ப்பன ஆதிக்கத்தைக் குலைத்திட, டாக்டர் சி. நடேசனாரும், டாக்டர் டி.எம். நாயரும், பிட்டி. தியாகராயரும் வழிகண்டனர்.

மாகாண சட்டப்பேரவையில் "பார்ப்பனர் அல்லாதாருக்கான தனித் தொகுதிகளை" 1919இல் டாக்டர் நாயர் பெற்றார்.

அரசு வேலைகளில் 100 விழுக்காடு இடங்களையும் 5 வகுப்புகளுக்கும் பங்கிடும் கொள்கையை உருவாக்கி, பார்ப்பனரல்லாதாருக்கும், தீண்டப்படாதாருக்கும் இந்தியாவிலேயே முதன்முதலாக இடஒதுக்கீடு ஆணையை, பனகல் அரசர் அரசு 1921இல் பிறப்பித்தது. அது 1926 வரை நடப்புக்கு வரவில்லை.

1926 சென்னை மாகாண சட்டப் பேரவைத் தேர்தலில் நீதிக்கட்சி தோற்றது ஏன்?

பார்ப்பனர் சட்டமன்றத்திலும் அரசு வேலையிலும் ஆதிக்கம் பெற்றிருந்ததோடு, இந்துச் சமுதாயத்தில் மதகுருவாகவும், புரோகிதராகவும், அர்ச்சகராகவும் ஏகபோக ஆதிக்கம் பெற்றிருந்தனர். பிறவியில் பார்ப்பனர் உயர்ந்தவர் - பிறவியில் பார்ப்பனர் அல்லாதார் எல்லோரும் தாழ்ந்தவர் என்கிற பேராதிக்கத்தை, கி.பி.8ஆம் நூற்றாண்டு முதல் பெற்றிருந்தனர். இதை அரசர்களின் ஆட்சிகள் காப்பாற்றின. இந்தியா முழுவதிலும் இந்து மதத்தில் இப்படிப்பட்ட பார்ப்பனர் ஆதிக்கம் நிலை கொண்டிருந்தது.

அத்துடன் பார்ப்பனரல்லாத பெருந் தலைவர்களுள், டாக்டர் நாயரைத் தவிர்த்த மற்றெல்லோரும், பார்ப்பானை மதகுருவாக, வீட்டுப் புரோகிதராக அடக்கத்தோடு ஏற்றவர்கள்.

இந்தப் பிறவி உயர்வு - தாழ்வைக் காப்பாற்றுபவை, மனுநீதியும், இராமாயணமும் ஆகும் என்ற கருத்தை, முதன்முதலாக 21.12.1922இல் திருப்பூரில், காங்கிரசுப் பொதுக் கூட்டத்தில் ஈ.வெ.ரா. பேசினார்.

இப்போது, "பார்ப்பனரல்லாதார் சுயமரியாதையைக் காப்பாற்ற ஓர் தனி இயக்கம் தேவை" என்பதை, 1926 நவம்பரில் தேர்தலில் தோற்றுப்போன பார்ப்பனரல்லாத தலைவர்களிடம் 1926 நவம்பரில், திசம்பரில் ஈ.வெ.ரா.

புகட்டினார். எல்லாத் தலைவர்களின் ஆதரவுடன், மதுரையில், ஏ. பரசுராம் பாத்ரோ தலைமையில், 26.12.1926இல் பத்தாவது பார்ப்பனரல்லாதார் மாகாண மாநாட்டில், சென்னை மாகாணப் ''பார்ப்பனரல்லாதார் சுயமரியாதைச் சங்கம்'' நிறுவப்பட்டது.

**அதன் தலையான கொள்கைகள் : [1] பிறவியில் உயர்வு-தாழ்வு ஒழிப்பு, பிறவியில் பார்ப்பான் மட்டும் மதகுருவாக-புரோகிதனாக-கோவிலில் அர்ச்சகனாக - இந்துவின் வீடுதோறும் இறப்பு, பிறப்பு, நன்மை, தீமை பற்றிய சடங்குகளைச் செய்பவனாக-தீ வளர்த்து, சடங்கு செய்பவனாக இருப்பதை ஒழிக்க வேண்டும்; [2] தீண்டாமையை ஒழிக்க வேண்டும்; [3] பெண் தாழ்ந் தவள் என்பதை ஒழிக்க வேண்டும் என்பவையாகும்.**

1) சென்னை மாகாணத்தில் நீதிக்கட்சி ஆட்சி 1920 திசம்பர் முதல் 1937 வரை நடந்தது; 2) காங்கிரசுக் கட்சி ஆட்சி 1937 முதல், விட்டு விட்டு, 1967 வரை நடந்தது; 6.3.1967 முதல் 31.12.2017 முடிய 50 ஆண்டுக்காலம் தி.மு.க., அ.தி.மு.க. என்கிற திராவிடக் கட்சி ஆட்சி மாறி மாறி நடந்தது. தொடர்ந்து நடக்கிறது.

**இவ்வளவு நெடியகால ஆட்சிகளில், சென்னை மாகா ணத்தில்-தமிழ்நாட்டில் மேலே கண்ட சுயமரியாதைக் கொள்கைகளை வென்றெடுத்துவிட்டோமா? இல்லை; இல்லை; இல்லை. ஏன்?**

இச்செய்திகள் பற்றிப் பின்வரும் கருத்துகளை, தந்தை பெரியார், 26.11.1928இல் சென்னையில் நடை பெற்ற, ''தென்னிந்திய சீர்திருத்தக்காரர்கள் மாநாட்டுத்'' தலைமை முடிவுரையில் கூறியவை கோடி பொன் பெறும் கருத்துக்களாகும்.

இதோ, படியுங்கள் :

''**தீவிர சீர்திருத்தங்களைப் பற்றிப் பிரச்சாரம் செய்வதன் மூலம் மக்களுக்கு எடுத்துச் சொல்லி முழுவதையும் சரிப்படுத்திவிடலாம் என்று எண்ணுவ தும் மிகுதியும் பைத்தியக்காரத்தனமாகும்.**

**ஏனெனில், நமது பிரச்சாரத்தைச் செய்வதற்கு நமக்குள்ள சந்தர்ப்பத்தைக் காட்டிலும் - நமது சீர்திருத் தத்திற்கு எதிரிகளான வைதிகர்கள், பண்டிதர்கள், சுயநலப் பார்ப்பனர்கள், அவர்களது கூலிகள் ஆகிய வர்களுக்கே மிகுதியும் சந்தர்ப்பங்களும் சவுகரியங் களும் அதிகமாய் இருக்கின்றன. எப்படியெனில், கோயில்கள், புராணங்கள், சித்திரப்படங்கள் ஆகியவை களும்; அவைகளின் உற்சவம், காலட்சேபம், பஜனை, சம்பிரதாயம் ஆகியவைகளும்; பள்ளிக்கூடப் படிப்பு, பாடப் புத்தகம் முதலியவைகளும் யாருடைய பிரயத் தனமும் இல்லாமல் மக்களுக்குள் சீர்திருத்தத்திற்கு விரோதமான விஷயத்தைப் புகுத்தி விடுகின்றன. இதுதவிர, கோடிக்கணக்கான ரூபாய்கள் வருவாய் கொண்ட மக்களும் மடாதிபதிகளும் ஸ்தாபனங் களும் வெட்டி ஆள்களும் இருக்கின்றனர்.**

**அன்றியும், ஜனப்பிரதிநிதித்துவமான ஓட்டுகள் பெற்று அதன்மூலம் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களால் சட்டங்கள் செய்யப்பட்டு, முழு சீர்திருத் தங்களையும் செய்துவிடலாம் என்று எண்ணுவதும் அறியாமையே ஆகும். ஏனெனில், ஜனப்பிரதிநிதித் துவமான ஓட்டுகள் என்பன பெரிதும் பாமர மக்களி டையே இருக்கின்றன. பிரதிநிதிகளாக வருபவர்களும் பெரிதும் சீர்திருத்த விரோதிகளுக்குப் பயந்தவர்களா கவும், சரியான சீர்திருத்த அறிவு இல்லாதவர்களா கவுமே இருக்கிறார்கள்.**

**சர்க்காரும் நம்முடைய கேவல நிலையினால் வாழ வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். அதனால், உண்மையானதும் முடிவானதுமான சீர்திருத்தம் ஒரு நாட்டிற்கு வரவேண்டுமானால், ஏகச் சக்ராதிபத்தியத் தன்மை கொண்ட ஒரு வீரனின் ஆட்சியில்தான் முடியும்.**

**அதாவது, 'இந்தப் பொதுக் கோயிலுக்குள் செல்ல எல்லோருக்கும் உரிமை உண்டு' என்று விளம்பரம் செய்ய வேண்டும். யாராவது ஆட்சேபித்தால் அவர் களைச் சிறையிலிட வேண்டும். இதைப் பொது ஜனங் கள் கூட்டம் போட்டுக் கண்டிக்க ஆரம்பித்தார்களா னால் உடனே இடித்தெறிந்து விடவேண்டும்.**

**சாதி வித்தியாசமோ உயர்வு தாழ்வோ கற்பிக் கின்ற புத்தகங்களைப் படிக்கக் கூடாது என்று சொல்லிவிட வேண்டும்; மீறிப் படிக்க ஆரம்பித்தால் அவற்றைப் பறிமுதல் செய்ய வேண்டும். உயர்வு-தாழ்வு வித்தியாசம் முதலியவை கொண்ட மடாதி பதிகளை எல்லாம் சிறையில் அடைத்துவிட வேண்டும். பொது ஜனங்கள் கிளர்ச்சி செய்தால் மடாதிபதி களைத் தீவாந்தரத்திற்கு அனுப்பிவிட வேண்டும். சாமிகளுக்கு உள்ள நகைகள், வாகனங்கள், பூமிகள் எல்லாவற்றையும் பறிமுதல் செய்து, அவை களை விற்றுப் படிப்பில்லாதவர்களுக்குப் படிப்பும், தொழில் இல்லாதவர்களுக்குத் தொழிலும் ஜீவனமும் ஏற்படுத்த உபயோகப்படுத்திவிட வேண்டும்.**

**இதுபோன்ற காரியங்கள் செய்யத்தக்க உரம் கொண்ட வீர ஆட்சிக்கு நாட்டைக் கொண்டுவர வேண்டும். அப்பேர்ப்பட்ட வீரர்களின் ஆட்சிக்குட்பட்ட நாடுகள்தான் இன்று சுயமரியாதையும் சீர்திருத்த மும் பொலிந்து விளங்குகின்றன.**

**அப்பேர்ப்பட்ட வீர ஆட்சிக்கு நாட்டைக் கொண்டு வரவேண்டுமானால், அநேக சீர்திருத்தக்காரர்கள்**

**உயிர் துறக்கத் தயாராயிருந்து கொண்டு பாமர மக்களிடையில் உண்மையைப் பரப்ப முன்வர வேண்டும்.''**

இக்கருத்துகளை, நாம் எல்லோரும் ஆய்வுசெய்து, செயல்படுத்த வேண்டும்.

இந்தியாவிலுள்ள பல மதங்களைச் சார்ந்த 130 கோடி மக்களுக்கும் உரிய அரசு, இந்திய அரசே.

இவர்களுக்கான உரிமை இயல் சட்டங்களை இயற்றும் அதிகாரம் படைத்தது, இந்திய அரசே.

தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கமோ, ''திராவிடர்'' என்ற பேரால் உள்ள இயக்கங்களோ இன்று வரையில் இந்தியா முழுவதையும் செயல்படுகளமாகக் கொள்ளவில்லை; எல்லா மாநிலங்களிலும் பரப்புரை செய்யவில்லை; பல் மொழிகளிலும் ஏடுகளையும் நூல்களையும் வெளியிட முன்வரவில்லை.

**எல்லாவற்றுக்கும் மேலாக, எல்லா உயர் அதிகாரங்களையும் கொண்ட இந்திய அரசைக் கைப்பற்ற வேண்டும்; இந்திய அரசமைப்புச் சட்டத்தை அடியோடு மாற்றினால்தான், சுயமரியாதை இயக்கக் கொள்கைகள் பரவுவதற்கு உள்ள சட்டத் தடைகளை நீக்க முடியும் என்கிற புரிதல் இவர்களுக்கு அறவே இல்லை.**

இந்நிலையில், இப்போது உள்ள அரசமைப்புச் சட்டத்தில் இருக்கிற பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டை எல்லா வடமாநிலங்களிலும், மற்றும் இந்திய மய்ய அரசிலும் நடப்புக்குக் கொண்டுவரவே, 29.4.1978 முதல் 30.6.2016 வரையில், 38 ஆண்டுகளாக, மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியும், அதன் கிளை அமைப்பான ஒடுக்கப்பட்டோர் பேரவையும் மட்டுமே தில்லியில் தங்கிச் செயல்படுகிறோம்; எல்லா மாநிலங்களுக்கும் பயணம் போகிறோம் என்பதை எல்லோரும் அறியவேண்டும்.

இக்கட்சியின் அரசியல் குறிக்கோள், ''இந்தியாவில் மதச்சார்பற்ற சமதர்மக் குடிஅரசுகள் ஒருங்கிணைந்த உண்மையான கூட்டாட்சியை அமைப்பது'' ஆகும்.

19.10.1991 முதல், கடந்த 27 ஆண்டுகளாக இக்குறிக்கோளை அடைய மனமார முயற்சிக்கிறோம்.

''நம்மால் இதெல்லாம் முடியுமா?'' என்று ஒருவரும் மலைக்காதீர்கள்.

முயன்றால், முடியாதது ஒன்றுமில்லை.

**எனவே, இந்தியாவை ஒரு உண்மையான கூட்டாட்சியாக அமைத்திட ஆவன செய்ய, 7.1.2018 சென்னை மாநாட்டுக்கு வாருங்கள்! வாருங்கள்! என அன்புடன் அழைக்கிறோம்.**

**01.01.2018** **வே. ஆனைமுத்து**

## முதன்மையான அறிவிப்பு

## சிந்தனையாளன் அலுவலகம்

### 15-01-2018 முதல் கீழ்க்காணும் புதிய முகவரியில் இயங்கும்

**தற்போது சிந்தனையாளன் அலுவலகம்**

2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர், எம்.டபிள்யூ.
2ஆம் குறுக்குத் தெரு, அம்பத்தூர்,
சென்னை - 600 053
என்கிற முகவரியில் இயங்கி வருகிறது.

**15-01-2018 முதல் சிந்தனையாளன் அலுவலகம்**

**கீழ்க்குறிப்பிட்டுள்ள முகவரியில் இயங்கும்**

**சிந்தனையாளன்**

**மனை எண்.277/2, சென்னை-திருவள்ளூர்**
**நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை-600 098**

என்கிற புதிய முகவரியில் இயங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம். எனவே 15-01-2018 முதல் சிந்தனையாளன் இதழுக்கு அனுப்பும் மடல்கள், கட்டுரைகள், பணவிடை, செய்திகள் முதலானவற்றைப் புதிய முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

கைப்பேசி : **9444804980, 9597526990**

*- ஆசிரியர்*

## இராசபாளையத்தில் தந்தை பெரியார் 139ஆவது பிறந்த நாள் விழா

இராசபாளையத்தில் பெரியாரியல் ஆய்வு நடுவம் தந்தை பெரியாரின் பிறந்த நாள் விழாவை 17.9.2017 ஞாயிறு அன்று சிறப்பாக நடத்தியது. ஆ. நெடுஞ்சேரலாதன் வரவேற்புரையாற்றினார். அ. பன்னீர்ச்செல்வம் தலைமைத் தாங்கினார். குறிஞ்சி கபிலன் தொடக்கவுரையாற்றினார். பு.சு. மாறன் அறிக்கை வாசித்தார். வழக்குரைஞர் ஆ. ரூசோ, எ.இராசகுரு, க.கனகராசு, அ.மதியழகன் ஆகியோர் கருத்துரை வழங்கினர். மருத்துவர் சாந்திலால் மதிப்புரையாற்றினார். அ.இளங்கண்ணன் எழுச்சியுரையாற்றினார். எழுத்தாளர்கள் பார்வையில் பெரியார் : பாவலர் ம. முத்தரசு, பெரியாரால் பெருமை பெற்றோர் என்ற தலைப்பிலும் சங்கீதா, இரா. கண்ணன், பெரியாரால் வாழ்ந்தோம் என்ற தலைப்பிலும் உரையாற்றினர். ஓவியர் வண்ணப் பூங்கா வாசன் அவர்களுக்குப் ''பெரியாரியலாளர்'' விருது வழங்கப்பட்டது. விருதினை பெற்றுக்கொண்டு சிறப்புரையாற்றினார்.

வடக்கநந்தல் வளர்மதி மருத்துவமனை
என் உடல்நிலையை வளப்படுத்தியது

# இதயநோய் ஆய்வறிஞர் மருத்துவர் க.மகுடமுடி என் உடலில் சத்து தங்க எல்லாம் செய்தார்

என் வாழ்நாளில் முதன்முறையாக வலப்புறக் குடல் இறக்கத்துக்கு 1992-இல் சென்னையில் இசபெல் தனியார் மருத்துவமனையில் மருத்துவர் நா.மோகன் அவர்களிடம் அறுவை மருத்துவம் செய்துகொண்டேன். அதற்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்தவர், இப்போது மா.பெ.பொ.க. துணைப் பொதுச் செயலாளராக இருக்கின்ற தோழர் சி.பெரியசாமி ஆவார்.

அடுத்து, 2006-ல் சென்னை அரசு தலைமை மருத்துவமனையில், அப்போது தலைவராக இருந்த மருத்துவர் கலாவதி பொன்னிறைவன் அவர்களின் கணவர் திருச்சி. பொன்னிறைவன் பரிந்துரையின் பேரிலும், சென்னை தமிழ்நாடு கல்வித்துறை அலுவலர் அ.மதிவாணன், அன்னாரின் துணைவியார் டெய்சி இராணி இருவரின் அறிமுகத்துடனும் நான் இடப்பக்கம் குடல் இறக்கத்துக்கு அறுவை செய்து கொண்டேன்.

2006 முதல் இன்றுவரை அரசு மருத்துவமனையிலோ, தனியார் மருத்துவமனையிலோ மருத்துவம் செய்துகொள்ள, எப்போதும் அ.மதிவாணன் மற்றும் டெய்சி இராணி இவர்களின் துணையையே நாடுகிறேன்.

2017 மார்ச்சில், சென்னை அரசு மருத்துவமனையில், மருத்துவர் சாந்தி அம்மையார் உதவியுடன் 8 நாள் மருத்துவம் பெறவும் அவர்கள் உதவினர். இரவில், கலச.இராமலிங்கம், தமிழேந்தி, எஸ்.அழகன் நிற்க.

27.05.2017 இரவு எழும்பூரில் மலைக்கோட்டை விரைவுத் தொடர்வண்டியில் புறப்பட்டு, இரவு 2.45 மணியளவில் அரியலூரை அடைந்தேன். என்னை அழைத்துப்போக, கட்சித் தோழரும் புத்தக விற்பனையாளருமான இளவரசன், காலை 3.45க்கு நிலையத்துக்கு வந்தார். நேரே, அரியலூர் பேருந்து நிலையத்துக்குப் போய், இரண்டு பிஸ்கட்டும் தேநீரும் சாப்பிட்டேன். அன்று காலை 4 மணிக்கு உடல்நிலை கெட்டது.

29.05.2017லும் மா.பெ.பொ.க. துணைப் பொதுச் செயலாளர் 28.05.2017லும் தோழர் தி.துரை சித்தார்த்தனின் மகிழுந்தில் முறையே மருதூர் திருமணத்திற்கும், பொன்பரப்பி திருமணத்திற்கும் சென்று, இரண்டு இரவுகள் அரியலூர் தங்கம் மருத்துவமனையில் தங்கி தோழர். மருத்துவர் பெ.இளங்கோவன் அவர்களிடம் மருத்துவம் பெற்றேன்.

சென்னைக்கு 29.05.2017 இரவு தொடர்வண்டியில் புறப்பட்டு, 30.05.2017 காலை எழும்பூரில் இறங்கி, அம்பத்தூருக்குச் சென்றேன். 30-ஆம் நாள் இரவு அம்பத்தூரில் உடல்நிலை மேலும் கெட்டது. உடனே உடனிருந்த தோழர்களின் வழியாக, பொறிஞர் இரா.சிவப்பிகாசத்துக்குப் பேசினேன்.

அவர், மிகவும் பொறுப்பாக, அயல்நாட்டிலிருந்து அப்போதுதான் வானூர்தி மூலம் மீனம்பாக்கம் வந்தடைந்த தன் மகள் கண் மருத்துவர் வெற்றிச்செல்வி அவர்களை, நேரே அம்பத்தூருக்கு பெரியார்-நாகம்மை அறக்கட்டளைக்கு அனுப்பி வைத்தார். தாம்பரத்துக்குப் போக முடிவு செய்தேன்.

என் துணைவியார் ஆ.சுசீலா அவர்களுக்கு வயது 82. என் துணைவியாரிடம் சென்றால், அவரால் எனக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்ய முடியாது என்பதாலும், அவரும் நோயாளி என்பதாலும், என் இளைய மகன் ஆனை.கோவேந்தன் அரசு நூலகராக இருப்பதால் இவ்விருவருக்கும் சுமையாக இருக்க விரும்பாமல், என் மூத்த மகன் ஆனை.பன்னீர் செல்வம் வீட்டுக்கு 30.05.2017 இரவு 12.00 மணிக்கு வந்து சேர்ந்தேன். மகன் ஆனை.பன்னீர் செல்வமும், மருமகள் போதம்மாளும், பேத்தி ஆசுபளும் அன்புடன் வரவேற்றனர்.

31.05.2017 காலை ஏ.ஜி. மருத்துவமனைக்குப் போய் மலம் வெளியேறுவதற்காக எனிமா வைத்துக் கொண்டேன். ஓரளவே பயன்பட்டது. எனவே, என் மகனும் மருமகளும் முடிவு செய்து, உடனே குளோபல் ஹெல்த் சிட்டி என்கிற மிகப்பெரிய தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர்.

ஒரு நாள் இரவு முழுவதும் நானே இருபது தடவை நடந்துபோய் மலங்கழிக்க ஏற்பாடு செய்தார்கள். 3.6.2017 வரை அங்கு இருந்தேன். 4.6.2017 முதல் இன்றுவரை, என் மூத்தமகன் வீட்டில் நல்ல உணவும், கவனிப்பும், வேண்டிய மருந்துகளும் பெற்று உடல் நலம் தேறிவருகிறேன்.

இந்நிலையில் 24.09.2017இல் தந்தை பெரியார் 139ஆம் பிறந்தநாள் விழாவை அம்பத்தூர் அறக்கட்ட

ளையில் நடத்தினோம். அவ்விழாவுக்குத் தோழர் அ.மதிவாணன் அவர்களும் வந்திருந்தார்.

அவர், ''கச்சிராயர்பளையம் மருத்துவர். மகுடமுடி இன்று மாலை 5 மணிக்கு உங்கள் நலனை உசாவிட அறக்கட்டளைக்கு வருகிறார். அவர் வருகிற வரையில் இருங்கள்'' என்று அறிவுறுத்தினார்.

மருத்துவர் க.மகுடமுடி சரியாக மாலை 5.30 மணிக்கு பெரியார்-நாகம்மை அறக்கட்டளைக்கு வருகை தந்தார்.

நான், ஏற்கெனவே மகுடமடி அவர்களை மூன்று தடவைகள் சந்தித்துப் பேசியிருக்கிறேன்.

கச்சிராயர்பாளையத்தைச் சேர்ந்த நெய்வேலி ஆறுமுகம் என்கின்ற இளைஞர், என் தலைமையில் திருமணம் செய்து கொண்டவர்; நெய்வேலியில் வாழ்பவர். அவர், திராவிட இயக்கங்களோடு நெருங்கிய தொடர்புடையவர்.

நான் 1984இல், மா.பெ.பொ.க. மாநாடு தொடர்பாக, கள்ளக்குறிச்சிக்கு நன்கொடை திரட்டப் போகிறேன் என்று அவரிடம் சொன்னேன். உடனே, ''நீங்கள் அங்கிருந்து கச்சிராயர்பாளையத்துக்குப் போய், எங்கள் தமையனாரைப் பாருங்கள். அவரும் மாநாட்டுக்கு உதவுவார்'' என்று கூறினார். அவருடைய தமையனார் பெரியசாமி தையல் கடை வைத்திருந்தார். அவருடைய கடைக்குப் பக்கத்தில், 1984லேயே, ஒரு சிறு மருத்துவமனையை நிறுவி க.மகுடமுடி நடத்தி வந்தார். அதுவே அவருடன் முதலாவது சந்திப்பு விழுப்புரம் பனப்பாக்கத்தைச் சேர்ந்தவரும், இப்போது குடும்பத்தோடு தியாகதுருகத்தில் வாழ்பவருமான கவிஞர் புலவர் கு.சீத்தா அவர்கள், தம்முடைய இல்லத்தில் பதித்துள்ள குடும்ப வரலாற்றுக் கல்வெட்டைத் திறந்துவைக்க, 23.11.2014இல் என்னை அழைந்திருந்தார். நான் கல்வெட்டைத் திறந்துவைத்தேன். நானும், மருத்துவர் க.மகுடமுடி அவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களும் அந்நிகழ்ச்சியில் உரையாற்றினோம். இது இரண்டாவது சந்திப்பு.

2015இல் சிந்தனையாளன் பொங்கல் மலர் வெளியீட்டுக்காக விளம்பரம் திரட்ட, மா.பெ.பொ.க. விழுப்புரம் மாவட்டச் செயலாளர் சென்னக்குணம் ஆ.கு.ஆறுமுகம் அவர்களுடன் வடக்கநந்தல் மருத்துவமனைக்குப் போனேன். விளம்பரம் பெற்றோம். இது மூன்றாவது சந்திப்பு.

இதயநோய் ஆய்வறிஞர் க.மகுடமுடி 24.09.2017 இல், அறக்கட்டளையில் என் இடதுகை நாடியையும் உடல்நிலையையும் ஆய்வு செய்தார். ''நீங்கள் மே திங்களுக்குப் பிறகு உண்ட உணவும் எடுத்துக் கொண்ட மருந்துகளும் குருதியோடு கலக்கவில்லை; உடம்பில் ஒட்டவில்லை. காரணம், வயிற்றில் அழுக்கு இருக்கிறது. மேலும், அழுக்கை நீக்கிவிட்டுப் பல மருந்துகளைக் கலந்து நேரிடையாக ஊசி மூலம் செலுத்தவேண்டும். ஒரு நான்கைந்து நாள்களுக்கு எங்கள் மருத்துவ மனையில் வந்து தங்குங்கள்'' என்று அறிவுறுத்தினார். உடனிருந்த தோழர்களுடன், பெரியார்-நாகம்மை நூலகத்தையும் அறக்கட்டளை கட்டடங்களையும் சுற்றிப் பார்த்தார்; விடைபெற்றுச் சென்றுவிட்டார்.

அதன்படி, 02-10-2017 காலை வே.ஆனைமுத்து, அ.மதிவாணன், அவருடைய துணைவியார் டெய்சி இராணி, ஆ.முத்தமிழ்ச்செல்வன், கு.தொல்காப்பியன் ஆகியோர் ஒரு குழுவாகப் புறப்பட்டு, மதியம் வளர்மதி மருத்துவமனையை அடைந்தோம்.

முதலில், இயந்திரம் மூலம் வயிற்றில் நீரைச் செலுத்தி அழுக்கை வெளியேற்றினார்கள். அத்துடன், குடலில் ஓசோனைச் (Ozone) செலுத்தித் தூய்மைப் படுத்தினார்கள். நாள்தோறும் இரண்டு வேளைகளிலும் ஊசி மூலம் மருந்து ஏற்றினார்கள். ஏழு மருந்துகள் கலந்த ஊசியை, 26-10-2017 வெள்ளிக்கிழமை காலை ஊசி மூலம் ஏற்றினார்கள். அடுத்த நாளில், உடலுக்குப் புதுத்தெம்பு வந்தது.

மீண்டும் 20-11-2017இல் வாருங்கள் என்று அறிவுறுத்தி விடைதந்தார். அங்குள்ள மருத்துவர்கள் எம்.நளினி, எம்.மனோபாலா, மருத்துவ உதவியாளர்கள், பெ.இளங்கோ, அருள்வடிவு ஆகியோர் மிகவும் பரிவுடன் என்னை நடத்தினர்

அங்கு, என்னுடன் தங்கியிருந்தவருக்கும் சேர்த்து அன்புடன் மூன்று வேளைகளிலும் நல்ல வீட்டு உணவை அளித்தனர். அங்கு, தங்கியிருந்தபோது, மகுடமடியுடைய தமையனார் க.நடராசன், தம்பி விலங்கியல் மருத்துவர் க.இரத்தினவேலு, எடுத்த வாய் நத்தம் மூத்த ஆசிரியர் த.பெரியசாமி, தியாக துருகம் புலவர். கு.சீத்தா, துரைமுருகன், திராவிட இயக்கத்தைச் சேர்ந்த பல இளைஞர்கள் கள்ளக் குறிச்சி தி.க. தோழர் செயராமன் ஆகியோர் என்னைச் சந்தித்து அளவளாவினர். வாழ்த்துத் தெரிவித்தனர். திருக்கோவிலூர் தணிகை கலைமணி, பா.கார்த்திகேயன் இருவரும் வந்து பார்த்தனர்.

ஏற்கெனவே, மருத்துவர் 6.10.2017 அன்று அறிவுறுத்தியபடி, 24-11-2017 அன்று காலை வே.ஆனைமுத்து, அ.மதிவாணன், அவருடைய துணைவியார் டெய்சி இராணி ஆகியோர் நேரே, வடக்கநந்தலுக்குப் பகல் 2.00 மணிக்குப் போய்ச் சேர்ந்தோம். எனக்குத்

துணையாக இருக்க வேண்டி விழுப்புரம் மாவட்ட மா.பெ.பொ.க. செயலாளர் சென்னைக்குணம் ஆ.கு.ஆறுமுகம் ஏற்கெனவே அங்கு வந்துவிட்டார்.

24.11.2017 முதல் 03.12.2017 ஞாயிறு வரை 10 நாள்கள், அன்றாடம், இரண்டு வேளைகளிலும் எனக்கு ஊசி மூலம் மருந்து ஏற்றினார்கள். ஏற்கெனவே, அளித்ததுபோல், எனக்கும் தோழர் ஆறுமுகத்துக்கும் அங்கே வயிறு புடைக்க உணவு படைத்தனர். 3-12-2017 அன்று சேலம் மாவட்ட மா.பெ.பொ.க. செயலாளர் செ.ஆனையப்பன், ஓய்வு பெற்ற பொறியாளர் தாதம்பட்டி கு.வெங்கடேசன் இருவரும் வருகை தந்து நலன் உசாவி விடை பெற்றனர்.

கள்ளக்குறிச்சி வட்டம், எடுத்தவாய்நத்தம் பெருநிலக்கிழார் கண்ணுசாமி-பொன்னம்மாள் இணையர்க்கு மகன்கள் மூவர்; ஆசைக்கு ஒரு மகள்; அவர் பெயர் தான் வளர்மதி.

நான் வடக்கநந்தலில் இருந்து புதுச்சேரிக்குச் செல்லும் விருப்பத்தை என் மகனிடம் தெரிவித்து, அவருடைய மகிழுந்தை அனுப்ப வேண்டாம் என்று கேட்டுக் கொண்டேன். அதற்கு மாற்றாக, உளுந்தூர்பேட்டை களமருதூர் மருத்துவர் தோழர். சா.மா.அன்புமணி அவருடைய மகிழுந்தை இரவலாகத் தரும்படி கேட்டுக் கொண்டேன். அவர், திராவிடர் கழகத் தோழர் முத்து என்பவர் மூலம் தன்னுடைய மகிழுந்தை வடக்கநந்தலுக்கு அனுப்பி வைத்தார். 02.12.2017 அன்றுதான், தன்னுடைய முதுகுத்தண்டு அறுவையை முடித்துக்கொண்டு வீட்டு வந்த அன்புமணியை, 03-12-2017 மாலை 6.00 மணிக்குச் சென்று கண்டு பேசிவிட்டு, இரவு 9.00 மணிக்குப் புதுவையை அடைந்தோம்.

புதுவையில், என் இரு மகன்கள், இரு மகள்கள் நலன் அறிந்ததுடன், 10 நாள்கள் ஓய்வாக-நலமாக இருந்தேன்; 4 நாள்கள் நடைப்பயிற்சி சென்றேன். 16.12-2017 சனிக்கிழமை இரவு அம்பத்தூர் அறக்கட்டளையை அடைந்து 17, 18 அங்கேயே தங்கியிருந்தேன். இயக்கப் பணிகளைப் பார்த்தேன்.

இவ்வளவு உதவிகளையும் செய்த மருத்துவர் க.மகுடமடி அவர்களுக்கும், அவருடைய துணைவியர் இருவருக்கும், அவருடைய தாயார் பொன்னம்மாள் அவர்களுக்கும், மருத்துவ உதவியாளர் பெ.இளங்கோ, செவிலியர் அருள்வடிவு மற்றும் மருத்துவமனைப் பணியாளர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியை இதன் வழியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வளர்க மருத்துவர் மகுடமடி.**

## மானுடத்திற்கு அறைகூவல்

உழவுத் தொழிலே உயர்வு
ஒப்புமையில் படிப்புக்குத்தான் உயர்மதிப்பு
வண்மையில் உழைப்புத்தான் உச்சம்
உடல் உழைப்புத்தான் உச்சத்தின் உச்சம்
மிச்ச மெல்லாம் அதன் எச்சம்
உடல் உழைப்பின் உயர்வை உணர்க, உரைக்க
உடல் உழைப்புக்கு உயர்வு அளிக்க
உடல் உழைப்புத்தான் உயர் வாதியத்திற்கு உற்றது
உழைப்பின் மாண்பை மார்க்சின்றி
மற்றோர் மறந்தனர், மறைத்தனர், மறுத்தனர்
உடல் உழைப்பைப் பழித்த உலுத்தர்கள்
உற்றனர் உயர் வளவாழ்வு
உணவின்றேல் உயிரில்லை, உலகில்லை
உழவனின்றேல் உணவில்லை, உழவன்
உற்ற விளை பொருளுக்கு உரிய விலையில்லை
உணவின்றி உழல்கின்றான் வாடுகின்றான் வதைகிறான்
உற்ற கடனுக்காக உயிரை மாய்க்கின்றான்.
கொத்துக் கொத்தாய் இலக்கங்களில்,
உற்றவை செய் உடனே செய் உழவன் உயிர் மீட்க
உணர்ந்து கொள் உலகே!
உழவனின் உயர் வாழ்வை உறுதி செய்
உண்டே வாழ்வு உலகோர்க்கெல்லாம்-அன்றேல்
உழவன் வீழ்ந்தால், வீழ்த்தினால்
உலகே வீழும், மாளும் மானுடம்.

**- இரா. பச்சமலை**

## சென்னை மாணவர் மன்றம் 86ஆம் ஆண்டு விழா

சென்னை மாணவர் மன்றத்தின் 86ஆம் ஆண்டு விழா 16.12.2017 சனிக்கிழமை காலை 10 மணிக்கு மாணவர் மன்றத் தலைவர் புலவர் ப.கி. பொன்னுசாமி தலைமையில் நடைபெற்றது. சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி க. ஞானப்பிரகாசம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு விருதுகளை வழங்கினார். மாணவர் நடத்திய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும், மாணவர் மன்றத் தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவருக்குப் பரிசுப் பொருளும் கேடயமும் வழங்கினார். அ. அருள்மொழி தலைவர்களின் படங்களைத் திறந்து வைத்து உரையாற்றினார்.

புலவர் கி.த. பச்சையப்பன், புலவர் த. இராமலிங்கம், அரிமா. த.கு. திவாகரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். திருக்குறள் பேரொளி விருது முனைவர் கு. மோகனராசு அவர்களுக்கும் பைந்தமிழ்ச் செல்வர் விருது முனைவர் சு. திருநாவுக்கரசு அவர்களுக்கும் வழங்கப்பட்டது. புலவர் வே. பக்தவத்சலம் நன்றியுரையுடன் விழா இனிதே முடிவுற்றது.

# குமரி மீனவர்களைக் கடலில் சாகவிட்ட இந்திய அரசு

- க. முகிலன்

திசம்பர் 25 கிறிஸ்துமஸ் நாளில் இக்கட்டுரை எழுதப் படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தின் தூத்தூர் பகுதியில் உள்ள எட்டு மீனவக் குடும்பங்களில் மட்டும் நவம்பர் 30 அன்று அதிகாலைத் தாக்கிய ஓகி சூறாவளிப் புயலால் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தவர்களில் 104 பேர் மாண்டனர். 376 பேர் கரை திரும்பவில்லை. இம்மீனவ மக்கள் அனைவரும் கிறித்துவர்கள். கடலில் ஆயிரம் கிலோ மீட்டர் தொலைவுக்குச் சென்று மீன்பிடிக்கும் இம்மீனவர்கள் கிறிஸ்துமஸ் விழாவைக் குடும்பத்தினருடன் கொண்டாடு வதற்காகத் திசம்பர் 23க்குள் வீடு திரும்புவது வழக்கம். அதனால் பெண்களும் குழந்தைகளும் தங்கள் குடும்பத் தலைவர்கள் கடலிலிருந்து கரை திரும்பிவிடுவார்கள் என்று கனத்த நெஞ்சத்துடன் காத்திருந்தனர். திசம்பர் 21 அன்று 47 மீனவர்கள் மட்டும் கரை திரும்பினார்கள். மற்றவர்கள் சூறாவளியால் படகுகள் தகர்க்கப்பட்டு, சில நாள்கள் கடலில் தத்தளித்து, பிறகு பிணமாக மிதந்து, மீன்களுக்கு இரை யாகி, தங்களுக்கு வாழ்வளித்து வந்த கடலிலேயே கரைந்து போய் இருப்பார்கள். எனவே கிறிஸ்துமஸ் நாளில் தூத்தூர் பகுதியின் வீடுகளில் பெண்களின் ஓயாத ஒப்பாரி ஒலித்துக் கொண்டேயிருக்கிறது.

குமரி மாவட்டத்தின் 62 கிலோ மீட்டர் நீளம் கொண்ட கடற்கரையில் 48 மீனவக் கிராமங்கள் உள்ளன. இவ்வூர் களில் 80,000 பேர் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். தமிழகத்தின் பிற பகுதிகளில் உள்ள மீனவர்கள் ஓரிரு நாள்களில் கடலிலிருந்து திரும்புவார்கள். ஆனால் குமரி மீனவர்களில் பெரும்பாலோர் அரபிக் கடலிலும் இந்தியப் பெருங்கடலிலும் ஆயிரம் கிலோ மீட்டருக்கும் அப்பால் சென்று மீன்பிடிப்பார்கள். 45 நாள்கள் வரையில் கடலில் இருப்பார்கள். இலட்சத்தீவுகள், டி-கோ கார்சியா தீவு, ஆப்பிரிக்கக் கண்டத்தில் வடக்குப் பகுதி, மேற்கு ஆசிய நாடுகள் ஆகிய கடற்பகுதிகள் வரையில் சென்று மீன்பிடிப் பார்கள்.

ஓகி புயல் தாக்கிய போது கடலில் மீன்பிடித்துக் கொண்டி ருந்த குமரி மாவட்ட மீனவர்களில் 400க்கும் மேற்பட்டவர் கள் காணாமல் போய்விட்டனர் என்று தமிழக அரசு சொல்கிறது. மீனவர்கள் சார்பில் 700க்கும் மேற்பட்டவர்கள் கரை திரும்பவில்லை என்று சொல்லப்படுகிறது. இத்தனை பேரின் சாவுக்கு யார் காரணம்? ஓகி சூறாவளியா? இல்லை! தமிழக அரசின் பொறுப்பற்ற போக்கும், இந்திய அரசின் தமிழினப் பகை உணர்வும் காரணங்களாகும்.

36 மணிநேரத்திற்கும் முன்பாகவே புயல் முன்னறி விப்பு செய்யக்கூடிய அளவிற்குத் தொழில்நுட்ப ஆற்றல் வளர்ந்திருக்கிறது. ஆனால் இந்திய வானிலை ஆராய்ச்சி நிலையம் நவம்பர் 29 மாலை தான், 30ஆம் நாள் அதிகாலையில் புயல் வீசும் என்று அறிவித்தது. ஆனால் தமிழ்நாட்டின் தனியார் வானிலை ஆய்வாளரான பிரதீப்ஜான்



*கரை திரும்பாத மீனவர்களை நினைத்துக் கதறி அழும் பெண்கள்*

நவம்பர் 29 அன்று பகல் 11.30 மணிக்கே புயல் பற்றிய எச்சரிக்கையை வெளியிட்டார். இது வெகுமக்களைச் சென்ற டைய வாய்ப்பில்லை. தமிழ்நாடு அரசு நவம்பர் 29 மாலை 6 மணிக்குக் குமரி மாவட்ட மீனவக் குப்பங்களில் புயல் பற்றிய அறிவிப்பைச் செய்து, கடலுக்கு மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்று எச்சரித்தது. ஆனால் நவம்பர் 29 அன்று பகலிலேயே விசைப்படகுகளில் மீனவர்கள் கடலுக்குச் சென்றுவிட்டனர்.

மீனவர்களிடம் உள்ள ஒயர்லெஸ் கருவிகள் 20 கி.மீ. தொலைவுக்கு மட்டுமே தொடர்பு கொள்ளக் கூடிய திறன் கொண்டவை. கடலில் 50 கி.மீ.க்கு அப்பால் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களுக்குப் புயல் குறித்து எச்சரிக்கை செய்திருந்தால் அவர்கள் அருகில் உள்ள குட்டித் தீவுகளில் கரை ஒதுங்கியிருப்பார்கள். சூறாவளியின் கடுந்தாக்கு தலிலிருந்து தப்பி இருப்பார்கள். ஆனால் இதற்கான ஏற் பாடுகள் ஏதும் நடைமுறையில் இல்லை என்பது மீனவர் களின் உயிரை அரசுகள் ஒரு பொருட்டாகக் கருதுவதில்லை என்பதையே காட்டுகிறது.

சிங்கள மீனவர்கள் வளைகுடாக் கடல் பகுதியிலிருந்து தங்கள் குடும்பத்துடன் பேசிக் கொள்ளும் வகையில் அவர் களுக்குச் சாட்டிலைட் தொலைப்பேசிகளை அனுமதித்திருக் கிறது சிங்கள அரசு. குமரி மாவட்ட மீனவர்கள் ஆழ்கடலில் பல நாள்கள் மீன்பிடித் தொழில் செய்வதால், கடலோரக் காவல் படையின் கப்பல்களுடன் சாட்டிலைட் அலைவரிசை மூலம் தொடர்பு கொள்ளக்கூடிய கைப்பேசிக் கருவிகளைத் தங்களுக்கு வழங்க வேண்டும் என்று நீண்டகாலமாகக் கோரி வந்தனர். தேசப் பாதுகாப்புக்கு இது எதிராகப் பயன் படுத்தப்படக் கூடும் என்ற காரணத்தைக் காட்டி மீனவர்களின் இக்கோரிக்கை மறுக்கப்பட்டது. கடலில் நெடுந்தொலைவில் உள்ள மீனவர்களுடன் கடலோரக் காவல் படையின் கப்பல்களிலிருந்து தொடர்பு கொள்ளும் வசதி இருந்திருந்தால், ஓகி புயல் குறித்து அவர்களுக்கு எச்சரிக்கை செய்திருக்க



*நீரோடி கிராமத்தில் ஒகி புயலில் கடலில் இறந்த 36 மீனவர்களின் புகைப்படங்களைத் தாங்கி நிற்கும் பதாகை. கடலில் காணாமல் போகும் மீனவரை 7 ஆண்டுகள் கழித்தபிறகே இறந்தவராக அறிவிக்கும் நடைமுறையை மாற்றவேண்டும் என்று மீனவர்கள் கோருகின்றனர்.*

முடியும். அவர்களின் உயிரையும் படகுகளையும் காப்பாற்றி இருக்க முடியும்.

புயலின் தாக்குதலிலிருந்து உயிர் பிழைத்து நவம்பர் 30 மாலையும், திசம்பர் முதல் நாள் அன்றும் கரை திரும்பிய குமரி மீனவர்கள், 250க்கும் மேற்பட்ட படகுகளில் நடுக் கடலில் மீனவர்கள் தத்தளித்துக் கொண்டிருப்பதாகவும் அவர்களைக் காப்பாற்றுமாறும் கடலோரக் காவல் படையி னரிடம் மன்றாடினர். 3.12.2017 அன்று துணை முதல மைச்சர் பன்னீர்செல்வமும் மற்ற இரண்டு அமைச்சர்களும் நாகர்கோயிலுக்கு வந்தனர். பாதிக்கப்பட்ட பகுதிகளில் மக்களைச் சந்திக்காமல் அதிகாரிகளுடன் மட்டும் பேசிவிட்டுத் திரும்பிவிட்டார்கள். அதே நாளில் பாதுகாப்புத் துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் குமரிக்கு வந்தார். கடலில் தத்தளித்துக் கொண்டிருக்கும் மீனவர்களைக் காப்பாற்ற உடனே நடவடிக்கை எடுக்குமாறு மீனவர்கள், நிர்மலா சீதாராமனிடம் வலியுறுத்தினார்கள். ஆனால் நிர்மலா சீதாராமன் உருப்படியாக எதையும் செய்யவில்லை.

நவம்பர் 30 அன்று ஒகி புயல் தாக்கியது. சூறாவளியால் படகுகள் தகர்க்கப்பட்டு, அவற்றின் உடைந்த பாகங்களைப் பிடித்துக் கொண்டு தத்தளித்த மீனவர்களால் மூன்று, நான்கு நாள்கள் மட்டுமே தாக்குப்பிடித்து உயிர் வாழமுடியும். அதற்குள் இந்திய அரசின் கடலோரக் காவல் படையும், கடற்படையும் வானூர்திகளும் அவர்களைத் தேடிக் கண்டு பிடித்துக் காப்பாற்றியிருக்க வேண்டும். ஆனால் இந்திய அரசு இத்தகைய நடவடிக்கை எதையும் எடுக்காமல் நடுக்கடலில் தமிழ் மீனவர்கள் துடிதுடித்துச் சாவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.

குமரியில் மீனவர்கள் ஆர்ப்பாட்டம், பேரணி, உண்ணா நிலைப் போராட்டம், குழித்துறை தொடர்வண்டி நிலையத்தில் பத்து மணிநேரம் தண்டவாளத்தில் அமர்ந்து போராட்டம் என்று தங்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்திய பிறகுதான் கடலோரக் காவல் படையின் கப்பல்கள் தேடுதல் பணியில் ஈடுபடுத்தப்பட்டன. ஆனால் 60 கடல் மைல்களுக்கு அப்பால் செல்வதற்குத் தங்களுக்கு அனுமதியில்லை என்று கடலோரக் காவல் படையினர் கூறி, அதற்கு அப்பால் ஆழ்கடல் பகுதியில் உள்ள மீனவர்களைத் தேடும் பணியில் ஈடுபட மறுத்து விட்டனர். அதேபோல் ஒன்றரை மணிநேரம் பறக்கக்கூடிய எரிபொருள் மட்டுமே கொண்டுள்ள ஹெலிகாப்டர்கள் தேடுதல் பணியில் ஈடுபடுத்தப்பட்டன. எனவே இந்திய அரசின் தேடுதல் பணி என்பது வெறும் கண்துடைப்பு நாடகமாகவே இருந்தது.

இந்திய அரசு உண்மையான அக்கறையுடன் இருந்தி ருக்குமானால் விமானந்தாங்கிய கப்பல்களை உடனடியாக ஆழ்கடல் பகுதிக்கு அனுப்பி குமரி மீனவர்களைத் தேடி மீட்டிருக்க வேண்டும். ஆழ்கடல் பரப்பில் ஒரு சதுர மீட்டர் பகுதியில் என்ன இருக்கிறது என்பதைச் சாட்டிலைட் மூலம் கண்டறியும் தொழில்நுட்ப ஆற்றல் இந்தியக் கடற்படைக்கு இருக்கிறது. ஆனால் இந்த ஆற்றலைப் பயன்படுத்தி ஆழ்கடலில் சூறாவளியில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த தமிழ் மீனவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற பொறுப்பும் கவலையும் இந்திய அரசுக்கு இல்லை என்பதே கொடிய உண்மையாகும். திசம்பரில் நடந்த உலக வணிக அமைப்பு மாநாட்டில் மீனவர்களுக்கு அளிக்கப்படும் அனைத்து மானி யங்களையும் நிறுத்திவிடுவதாக இந்தியா ஒப்புக்கொண்டது. இதனுடைய நோக்கம் தமிழக - இந்திய மீனவர்களின் ஆழ்கடல் மீன்பிடித் தொழிலைப் பன்னாட்டு நிறுவனங் களுக்குத் தாரை வார்ப்பதேயாகும்.

குமரி பகுதியைத் தாக்கிய ஒகி புயல் அரபிக் கடலில் வடதிசை நோக்கிச் சென்றதால், அரபிக் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த குமரி மீனவர்களின் படகுகள் திசைமாறி அடித்துச் செல்லப்பட்டு, கோவா, மகாராட்டிரம், குசராத் கடற்கரைகளில் ஒதுங்கின. இவ்வாறு படகுகள் சேதமடைந்து கரை ஒதுங்கிய ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்களை அவர்களின் சொந்த ஊர்களுக்கு அனுப்பிட, கடலோரக் காவல் படையினர் உதவினார்கள். ஆனால் இந்திய அரசு இம்மீன வர்களை நடுக்கடலிலிருந்து கடலோரக் காவல் படையினர் மீட்டதாகப் பொய்யான அறிக்கையை வெளியிட்டது.

குமரி மாவட்டத்தை ஒகி புயல் தாக்கியதில் ஆயிரக் கணக்கான ஏக்கரில் தென்னை, வாழை, இரப்பர், பலா முதலான மரங்கள் அடியோடு சாய்ந்தன. மின் கம்பங்கள் அனைத்தும் அடியோடு வீழ்ந்தன. வீடுகள் பெருமளவில் சேதமாயின. ஆனால் நான்கைந்து நாள்கள் வரையில் கிராம நிர்வாக அலுவலர்கள்கூட பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் செல்லவில்லை. புயலுக்கு முன் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற வர்கள் எத்தனை பேர், புயலுக்குப்பின் கரை திரும்பியவர்கள் எத்தனை பேர், கரை திரும்பாதவர் எத்தனை பேர், இறந்த வர்கள் எத்தனைப் பேர் என்கிற விவரத்தைக் கண்டறிவதில் கூட தமிழக அரசு அக்கறை காட்டவில்லை. மாறாக முதல




*ஒகி புயலின் போது காணாமல் போன மீனவர்களை மீட்கக்கோரி குமரி மாவட்டம் குழித்துறை இரயில் நிலையத்தில் 7-12-2017 அன்று மறியல் செய்யும் மக்கள்*

மைச்சர் எடப்பாடி பழனிச்சாமி எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா நடத்துவதிலும், ஆர்.கே. நகர் இடைத்தேர்தலில் பரப்புரை செய்வதிலும் மூழ்கியிருந்தார். கேரள மாநில அரசு இறந்த மீனவர்களுக்கு ரூ.20 இலட்சம் நிவாரணம் அறிவித்த பின், முதலமைச்சர் ரூ.10 இலட்சம் இழப்பீடு வழங்கப்படும் என்று அறிவித்ததுடன் தன் கடமை முடிந்து விட்டதாகக் கருதிச் சென்னையிலேயே முடங்கிக் கிடந்தார்.

முதலமைச்சர் குமரிக்குச் சென்று பாதிக்கப்பட்ட மீனவக் குடும்பங்களைச் சந்திக்க வேண்டும் என்கிற நெருக்குதல் முற்றிய பிறகுதான் திசம்பர் 12 அன்று குமரிக்குச் சென்றார். தூத்தூர் கல்லூரி வளாகத்தில் மீனவர்களின் சில பிரதிநிதி களை மட்டும் சந்தித்தார். இறந்த மீனவர் ஒவ்வொருவர் குடும்பத்துக்கும் ரூ.20 இலட்சம் இழப்பீடும் அவருடைய குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலையும் அளிப்பதாக அறிவித்துவிட்டுத் திரும்பிவிட்டார். இதைவிடக் கொடுமை, குமரியின் நாடாளுமன்ற உறுப்பினரும், நடுவண் அரசில் இணை அமைச்சராக இருப்பவருமான பொன். இராதா கிருட்டிணன் பத்து நாள்கள் கழித்துதான் புயலால் பாதிக் கப்பட்ட தன் தொகுதி மக்களைச் சந்திக்க சென்றார் என்பதாகும்.

தமிழக அரசு போர்க்கால அடிப்படையில் கடலுக்குச் சென்று திசம்பர் 31க்குள் கரை திரும்பாத மீனவர்கள் பற்றி துல்லியமாகக் கணக்கெடுத்து, அவர்களை இறந்தவர்களாக அறிவித்து, அவர்களின் குடும்பங்களுக்கு ரூ.20 இலட்சம் நிதி உதவி அளிக்க வேண்டும். கடலில் காணாமல் போகும் மீனவர்களை ஏழு ஆண்டுகள் கழித்துதான் இறந்தவர்களாக அறிவிக்கும் நடைமுறை தற்போது இருக்கிறது. கன்னியா குமரி மாவட்டத்தில் 1992 முதல் 2016 வரையில் 188 மீனவர்கள் கடலில் காணாமல் போயிருக்கின்றனர். ஏழு ஆண்டுகள் கழித்து இறந்தவராக அறிவிக்கப்பட்ட பிறகுதான் நிவாரண உதவி பெறமுடியும் என்று இருக்கின்ற நிலையை ஒழிக்க வேண்டும். ஒகி புயலில் இறந்தவர்களைக் கணக் கெடுத்து அவர்களின் குடும்பங்களுக்கு உடனடியாக இழப்பீடு வழங்க வேண்டும். இதில் ஊழல் நடைபெறாமல் தன்னார்வ அமைப்புகள் கண்காணிக்க வேண்டும். இறந்த மீனவர் களின் குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை வழங்குவதை யும் விரைந்து மேற்கொள்ள வேண்டும்.

ஒகி புயல் பாதிப்பைத் தேசியப் பேரிடராக அறிவித்து, அதன் அடிப்படையிலான உதவிகளை நடுவண் அரசும் மாநில அரசும் வழங்க வேண்டும். ஒகி புயலால் கிட்டத்தட்ட ஆயிரம் மீனவர்கள் இறந்த நிலை மீண்டும் ஏற்படாமல் தடுக்க, மீனவர்களின் நீண்ட நாளையக் கோரிக்கையின்படி, சாட்டிலைட் மூலம் உடனுக்குடன் தொடர்பு கொள்ளக்கூடிய ஒயர்லெஸ் கருவிகளை மீனவர்களுக்கு வழங்க வேண்டும். வானிலை முன்னறிவிப்புத் தொழில்நுட்பத்தை வளர்ந்த நாடுகளின் நிலைக்கு உயர்த்த வேண்டும்.

தென்னை, வாழை, இரப்பர் மற்றும் பிற பயிர்களின் இழப்புக்கு உரிய தொகையை உடனடியாக வழங்கிட தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மீனவர்களின் துயரத்தை ஒட்டுமொத்தத் தமிழர்களின் துயரமாகக் கருதி, அவர்கள் மீண்டும் மறுவாழ்வு பெறும் வரையில் எல்லா வகையிலும் அவர்களுக்குத் துணையாக விளங்க வேண்டி யது தமிழரின் கடமையாகும்.

# 2ஜி அலைவரிசை ஊழல் வழக்கிலிருந்து, இந்திய அரசு முன்னாள் அமைச்சர் ஆ. இராசா மாநிலங்களவை உறுப்பினர் மு.க. கனிமொழி

## விடுதலை

பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த தி.மு.க.வின் கொள்கைப் பரப்புச் செயலாளர் ஆ. இராசா அவர்கள் மத்திய செய்தி மற்றும் தொலைத்தொடர்பு அமைச்சராக, 2007 மே 16ஆம் நாள் பொறுப்பேற்றார்.

அவரால் அலைவரிசை உரிமம் முறைகேடாக ஒதுக்கீடு செய்யப்பட்ட வகையில் 2007ஆம் ஆண்டு இந்திய அரசுக்கு 1.76 இலட்சம் கோடி ரூபா வருவாய் இழப்பு ஏற்படுத்தியதாக, சி.பி.ஐ. குற்றஞ்சாட்டி வழக்குத் தொடுத்தது. இந்த வழக்கில் 2011 பிப்பிரவரி 2இல் முன்னாள் அமைச்சர் ஆ. இராசா கைது செய்யப்பட்டார். 15 மாதங்கள் அவர் தில்லி திகார் சிறையில் இருந்தபின் 15.5.2012இல் பிணையில் விடுவிக் கப்பட்டு வெளியில் வந்தார்.

2ஜி ஒதுக்கீடு காரணமாக, டாக்டர் கலைஞர் பேரால் இயங்கும் "கலைஞர் தொலைக்காட்சி"க்கு அவருடைய மகளும், மாநிலங்களவை உறுப்பினருமான கனிமொழி வழியாக 200 கோடி ரூபா பெற்றுள்ளதற்கு, கனிமொழி கூட்டுச் சதிகாரராகச் செயல்பட்டார்என்று குற்றஞ்சாட்டப்பட்டு, 2011 மே 20ஆம் நாள் கைது செய்யப்பட்டு, தில்லி திகார் சிறையில் அடைக்கப்பட்டார். ஆ. இராசா, கனிமொழி ஆகிய இருவர் பேரிலும் நடைபெற்ற ஊழல் வழக்கில் சோழவந்தான் சுப்பிரமணிய சுவாமியும் தன்னை இணைத்துக் கொண்டார்.

**எந்தப் பகுதியில் ஊழல் வழக்கு நடந்தாலும், அதில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் இந்து பார்ப்பனரல்லாதாராக இருந்தால், பார்ப்பன ஊடகங்கள் அந்த ஊழல் வழக்கு களைப் பெரிய அளவில் தொடர்ந்து அம்பலப்படுத்தும்.**

அதிலும், தென்னாட்டுப் பார்ப்பனரல்லாதார் 1918 முதலும், 1927 முதலும் பார்ப்பனரல்லாதாருக்கும் ஆதிதிரா விடருக்கும் அரசு வேலைகளில் - அரசுப் பதவிகளில் இடஒதுக் கீடு தரப்பெற்றதால்-அந்த ஒரே காரணத்தால் பார்ப்பனரல் லாதாரைத் தவறான கோணத்தில் படம் பிடிப்பதையே பார்ப்பன அச்சு ஊடகங்களும், தொலைக்காட்சி ஊடகமும், திரைப்பட ஊடகமும் 1918 முதல், அந்தந்த மாகாண அரசின் பேரில் பார்ப்பனர் எரிச்சலையும் அவதூறுகளையும் உமிழ்வதை மேற்கொண்டனர்.

முதலாவதாக, மைசூர் சுதேச மன்னர் ஆட்சியில் ஆறாவது கிருஷ்ணராஜ உடையார் என்கிற மன்னர், 1918இல் தன்னுடைய ஆட்சியின்கீழ் இடஒதுக்கீட்டை முதன்முதலாக அமல்படுத்தினார். அப்போது மைசூர் அரசில் திவானாக இருந்த - தலைசிறந்த பொறியாளராக விளங்கிய எம்.



விசுவேசரய்யா என்கிற பார்ப்பனர் மன்னரின் இடஒதுக்கீட்டு ஆணையை எதிர்த்து திவாண் பதவியிலிருந்து விலகினார். அப்போது, ஆறாவது கிருஷ்ணராஜ உடையார், மேலும் ஒரு தப்படி மேலே போய், நீதிபதி மில்லர் குழுவின் பரிந்துரைப் படி, "**எந்த உள்சாதியில் நூற்றுக்கு 5 பேருக்கு ஆங்கிலம் தெரியாதோ, அப்படிப்பட்ட உள்சாதிகள் எல்லாம் பிற்படுத்தப் பட்ட உள்சாதிகள்" என்று புதிய ஆணை பிறப்பித்தார்.**

அடுத்து, சென்னை மாகாணத்தில், 17.12.1920இல் பார்ப்பனரல்லாதார் கட்சி என்கிற தென்னிந்திய நல உரிமைச் சங்கம் பதவி ஏற்றது. 1921இல் சென்னை மாகாணத்தின் முதலாவது அமைச்சரான பனகல் அரசர், 1921இல் சென்னை மாகாண அரசு வேலையில் உள்ள 100 விழுக்காடு இடங் களையும் 5 வகுப்புகளுக்கும் பங்கிட்டு, அதன் வழியாக, இந்து பார்ப்பனரல்லாதாருக்கு 44 விழுக்காடும், ஆதித்திரா விடருக்கு 8 விழுக்காடும் இடஒதுக்கீடு கிடைக்கும்படி ஏற்பாடு செய்தார். அந்த ஏற்பாட்டை எதிர்த்த "சுதேசமித்திரன்", "இந்து" பார்ப்பன நாளேடுகள், "உலகமே அழிந்துவிடப் போகிறது" என்று கூக்குரலிட்டன.

**அந்தக் காலத்தில்தான் மதுரை சோழவந்தான் சுப்பிர மணியசாமி என்கிற பார்ப்பனரின் முன்னோர்களும், மயிலாடுதுறை மணிசங்கர் அய்யரின் முன்னோர்களும் தமிழ்நாட்டை விட்டே வெளியேறினார்கள். பார்ப்பனர் கொண்டுள்ள இந்த வகுப்பு வெறி உணர்ச்சி வரலாற்றை நாம் மறத்தல் கூடாது.**

**மேலே சொன்ன 1921ஆம் ஆண்டின் வகுப்புவாரி இடஒதுக்கீடு ஆணை, டாக்டர் வி. சுப்பராயன் ஆட்சியில்,**

**பெரியார் ஈ.வெ.ரா.வின் ஆதரவுடன், எஸ். முத்தையா முதலியாரால் 1927இல்தான் செயல்படுத்தப்பட்டது, நிற்க.**

இனி ஆ. இராசா அவர்களும், மு.க. கனிமொழி அவர்களும் 21.12.2017 காலை 10.30 மணிக்கு, 2ஜி அலைக்கற்றை ஊழல் வழக்கிலிருந்து, மேற்கண்ட இருவர் உட்பட எல்லோரும் முற்றிலுமாக விடுதலை செய்யப்பட்டது பற்றி நாம் பார்ப்போம்.

இவ்வழக்கில் தீர்ப்பளித்த சி.பி.ஐ. நீதிமன்றச் சிறப்பு நீதிபதி மதிப்புமிகு ஓ.பி. சைனி அவர்கள் மிகவும் தெளிவாகத் தன்னுடைய கருத்தைப் பதிவு செய்துள்ளார்.

அ) இந்த வழக்கிற்காக காலை 9 மணிக்கே நீதிமன்றத்துக்கு வந்துவிடுவேன்; மாலை 5 மணிவரை இருப்பேன். கோடை விடுமுறையின்போது கூட நீதிமன்றத்துக்கு வந்தேன்.

ஆ) சரியான-வலுவான ஆதாரங்கள் மற்றும் ஆவணங்களுடன் எவரேனும் வருவர் என, இந்த வழக்கிற்காக நானும் ஏழு ஆண்டுகளாகக் காத்திருந்தேன். கடைசிவரை அது நடக்கவில்லை.

இ) ஆ. இராசா இவ்வழக்கில் சதி செய்தார்; ஊழல் செய்தார்; குற்றச்செயல்களில் ஈடுபட்டார் என்பதற்கான எந்த ஆதாரமும் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்படவில்லை.

ஈ) இந்த வழக்கில் பிரதான சதிகாரர் ஆ. இராசா என்னும் குற்றச்சாட்டு, முற்றிலும் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்படுகிறது.

உ) வழக்கின் தொடக்கத்தில் உற்சாகம் காட்டிய சி.பி.ஐ. - போகப்போக எச்சரிக்கை உணர்வு தலைதூக்கி, எதை நிரூபிக்கப் போகிறோம் என்பதே தெரியாமல் தடுமாறியது.

ஊ) வாதங்கள் அனைத்துமே சீர்குலைந்து திக்குத்திசை தெரியாமல் தவிக்கும் நிலைக்கு சி.பி.ஐ. ஆளானது.

எ) இறுதியாக தாங்கள் முன்வைத்த குற்றச்சாட்டுகளை இயன்ற அளவுகூட நிரூபிக்க முடியாமல், பரிதாபகரமான வகையில் சி.பி.ஐ. தோல்வி அடைந்துள்ளது.

ஏ) ஆ. இராசாவோ அவருடைய உறவினர்களோ முறைகேடான வழியில் சொத்து சேகரிக்கவில்லை என, இந்நீதிமன்றத்தில் சி.பி.ஐ. வெளிப்படையாக ஒப்புக்கொண்டது.

அடுத்து, இவ்வழக்கில் பிணைக்கப்பட்டு, கைது செய்யப்பட்டு, ஐந்து மாதங்கள் தில்லி திகார் சிறையிலிருந்த தி.மு.க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதியின் மகள் கனிமொழிக்கு பெண் என்ற அடிப்படையில் பிணையில் விடுதலை கேட்டபோது, கண்டிப்பாகப் பிணை கிடைத்துவிடும் எனப் பலரும் நினைத்தனர். ஆனால், “கனிமொழி அரசியல் அதிகாரம் உள்ளவர் என்பதால், கனிமொழி சாட்சிகளைக் கலைத்துவிடுவார்” என்று கூறி, பிணையில் விடுதலை செய்ய இதே நீதிபதி சைனி மறுத்தார். அதேபோல் கலைஞரின் மனைவி தயாளு அம்மாள் மனுச் செய்தபோதும் அதை ஏற்க மறுத்து, நேரில் நீதிமன்றத்துக்கு வர ஆணையிட்டார். இவை நிற்க.

2014, 2015, 2016ஆம் ஆண்டுகளில் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பிலும், அனைத்திந்திய ஒடுக்கப்பட்டோர் பேரவையின் சார்பிலும் விகிதாசார வகுப்புவாரி இடப்பங்கீட்டு மாநாடுகளைப் புதுதில்லியில் தமிழ்ச்சங்கத்தில் நடத்தினோம்.

2015இல் புதுதில்லியில், அம்மாநாட்டு அழைப்பை நேரில் கொடுக்க வேண்டி, புதுதில்லியில் “குல்மொகார் பார்க்” என்ற பகுதியில், ஆ. இராசா அவர்கள் குடியிருக்கும் வீட்டிற்கு நேரில் நான் போனேன். அரை மணிநேரம் அவருடன் பேசிக் கொண்டிருந்தேன்.

அப்போது, “2ஜி வழக்கின் நிலைமை எப்படி இருக்கிறது என அறிய விரும்புகிறேன்” எனத் தெரிவித்தேன்.

உடனே அவர், ஊக்கமாக, “நானோ, என் குடும்பத்தினரோ, உறவினர்களோ முறைகேடான வகையில் சொத்து சேர்த்ததாக-மயிரிழை அளவுக்குக்கூட சி.பி.ஐ. நிரூபிக்கவில்லை என நானே நீதிபதியிடம் பதிவு செய்துள்ளேன். எனவே நான் விடுதலை ஆவது உறுதி” என்று திடமாகச் சொன்னார்.

அவருடைய விடுதலையை முன்னிட்டு, எங்கள் கட்சி அடைந்த மகிழ்ச்சியை நேரில் தெரிவிக்க வேண்டி, 25.12.2017 காலை 9.30 மணிக்கு இராதாகிருட்டிணன் சாலையில் உள்ள அவரது இல்லத்துக்கு நானும், கலச. இராமலிங்கம், முனைவர் ஆ.முத்தமிழ்ச்செல்வன், பொறியாளர் பகுத்தறிவாளன் ஆகியோர் சென்றோம்.

சென்னை அலுவலக உதவியாளர் விவேகானந்தன் எங்களை வரவேற்றார்.

மதிப்புமிகு ஆ. இராசா அவர்களிடம் மேலே கண்ட எல்லா விவரங்களையும் அப்போதும் நினைவூட்டினேன்.

**வளர்க ஆண்டிமுத்து இராசாவின் தொண்டு!**

**27.12.2017** **- வே. ஆனைமுத்து**

## சீதாலட்சுமி அம்மையார் மறைந்தார்

கடலூர் மாவட்டம், புவனகிரி வட்டம், மஞ்சக்கொல்லை கிராமத்தைச் சேர்ந்த திருமதி. சீதாலட்சுமி ஆறுமுகம் (87) அவர்கள் 27.10.2017 அன்று இயற்கை எய்தினார். அவரது மூத்தமகன் ஆறு. இராமநாதன், தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் முதல்வராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். ஓய்வுபெற்ற மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியரும், பகுத்தறிவு எழுத்தாளரும், சிதம்பரம் பெரியார் படிப்பகத் துணைத் தலைவருமான ஆறு. கலைச்செல்வன் இவரது இரண்டாவது மகன் ஆவார். மூன்றாவது மகன் ஆறு. இரவிச்சந்திரன் தஞ்சையில் கண்காணிப்பாளராகப் பணியாற்றி வருகிறார். இவருக்கு 4 மகன்களும் உள்ளனர்.

இவரது கண்கள் புதுச்சேரி அரவிந்தர் கண் மருத்துவ மனைக்குக் கொடையாக அளிக்கப்பட்டது.

# அகிலாவாக இருந்த ஹாதியாவுக்கு இழைக்கப்பட்ட அநீதி

- க. முகிலன்

கலைஞர் கருணாநிதி கதை-வசனம் எழுதிய பராசக்தி திரைப்படத்தில் நீதிமன்றத்தில் சிவாஜிகணேசன், “இதுபோன்ற விசித்திரமான வழக்கை இந்த நீதிமன்றம் சந்தித்ததில்லை” என்று பேசுவார். அதுபோல் உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா 27.11.2017 அன்று உச்சநீதிமன்றத்தில், “இதுபோன்ற விசித்திரமான வழக்கைச் சந்தித்ததில்லை” என்று கூறினார்.

அப்படியென்ன விசித்திரமான வழக்கு அது? கேரளத்தில் வைக்கத்தைச் சேர்ந்த அகிலா என்ற இந்துப் பெண் இசுலாம் மதத்திற்கு மாறினார்; ஹாதியா என்று பெயரை மாற்றிக் கொண்டார்; ஷபின் ஜகான் என்ற இசுலாமிய இளைஞரைத் திருமணம் செய்து கொண்டார். இருபது அகவையைக் கடந்த ஒரு பெண், தான் நம்புகின்ற ஒரு மதத்தைப் பின்பற்றுவதும், தான் விரும்புகின்ற ஒருவரைத் திருமணம் செய்து கொள்வதும் அரசமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமையாகும். இதில் என்ன விசித்திரம் இருக்கிறது? ஆனால் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக ஆர்.எஸ்.எஸ்., பாரதிய சனதாக் கட்சி முதலான சங் பரிவாரங்கள் உருவாக்கியுள்ள “முசுலீம் வெறுப்பு” உணர்வும் சிந்தனையும் உயர் அதிகார வர்க்கத்திலும் உயர்நீதித்துறையிலும் ஊடுருவியிருப்பதால், இது விசித்திரமான வழக்காக மட்டுமின்றி, பயங்கரவாத வழக்காகவும் மாற்றப்பட்டிருக்கிறது.

கேரளத்தைச் சேர்ந்த அகிலா 2010ஆம் ஆண்டில் சேலத்தில் உள்ள ஒரு தனியார் ஓமியோபதி மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தார். உடன் படிக்கும் நான்கைந்து பெண்களுடன் வாடகை வீட்டில் தங்கியிருந்தார். உடன் பயின்ற இசுலாமியப் பெண்களின் நட்பால் இசுலாமிய மதக்கருத்துகளால் ஈர்க்கப்பட்டார். 2015ஆம் ஆண்டில் இசுலாமிய மதத்திற்கு மாறி, தன் பெயரை ஹாதியா என்று மாற்றிக் கொண்டார். அந்நிலையில் சேலத்தில் தன்னைச் சந்திக்க வந்த தன் தந்தையைச் சந்திக்காமல் தவிர்த்தார்.

அகிலா (ஹாதியா)வின் தந்தை அசோகன் இராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். தன் மகளின் மதமாற்றத்தைத் தடுக்கும் நோக்கத்துடன் 2016 சனவரி 19 அன்று அசோகன் கேரள உயர்நீதிமன்றத்தில் தன் மகள் காணவில்லை என்று ஆட்கொணர்வு விண்ணப்பம் செய்தார். கேரளக் காவல் துறையினர் ஹாதியாவை சேலத்திலிருந்து அழைத்து வந்து உயர்நீதிமன்றத்தில் நேர் நிறுத்தினர். தன் சொந்த விருப்பத்தின் பேரில் தான் இசுலாமிய மதத்தைத் தழுவியதாக ஹாதியா நீதிமன்றத்தில் தெரிவித்தார். அதனால் ஹாதியாவின் தந்தையின் விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்டது.

ஆயினும் அசோகன் 2016 ஆகத்து 17 அன்று கேரள உயர்நீதிமன்றத்தில் தன்மகள் குறித்து மீண்டும் ஒரு மனு கொடுத்தார். அம்மனுவில், தன் மகளை வெளிநாட்டுக்குக் கடத்திச் சென்று, இசுலாமியர் ஒருவருக்குத் திருமணம் செய்து கொடுத்து, அவரைத் தீவிரவாத அமைப்பில் சேர்க்க முயற்சி



நடப்பதாக அசோகன் குற்றம் சாட்டியிருந்தார். ஹாதியா வெளிநாட்டுக்கு அழைத்துச் செல்லப்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக அவரைக் காவல் துறையின் கண்காணிப்பு வளையத்துக்குள் வைக்குமாறு உயர்நீதிமன்றம் ஆணையிட்டது.

அதன்பின் 2016 திசம்பர் 19 அன்று ஹாதியா, ஷபின் ஜகான் என்ற இசுலாமிய இளைஞரை முறைப்படி திருமணம் செய்து கொண்டார். 2017 மே 24 அன்று கேரள உயர்நீதிமன்றத்தில் ஹாதியா வழக்கின் விசாரணை நடந்தது. இசுலாமிய இளைஞருக்குத் திருமணம் செய்வித்து, வெளிநாட்டில் தீவிரவாத இயக்கத்தில் ஹாதியா சேர்க்கப்படுவார் என்று அவருடைய தந்தை வழக்குத் தொடுத்துள்ள நிலையில், ஹாதியா, ஷபின் ஜகானைத் திருமணம் செய்து கொண்டது குறித்து ஹாதியாவிடம் கேள்விகளைக் கேட்டது, உயர்நீதிமன்றம். அதன்பின், ஹாதியா - ஷபின் ஜகான் திருமணத்தை இரத்து செய்வதாக அறிவித்தது. ஹாதியா அவருடைய தந்தையின் பாதுகாப்பில் இருக்க வேண்டும் என்று ஆணையிட்டது.

சிறையில் இருப்பவரை அல்லது ஒரு தீவிரவாதியை ஒரு பெண் திருமணம் செய்வதற்குச் சட்டப்படியான தடை எதுவும் இல்லை என்று உச்சநீதிமன்றம் பல தீர்ப்புகளில் கூறியுள்ளது. அதேபோன்று ஒருவர் தீவிரவாத இயக்கத்தில் இருந்தாலும் அவர் தீவிரவாதக் குற்றச் செயல்களில் ஈடுபடாத வரையில் அவரைக் குற்றவாளியாகக் கருத முடியாது என்றும் உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. எனவே ஷபின் ஜகான் - ஹாதியா திருமணம் செல்லாது என்று கேரள உயர்நீதிமன்றம் கூறியதற்கு ஒரே காரணம் அகிலா என்கிற இந்துப் பெண் ஒரு இசுலாமிய இளைஞரைத் திருமணம் செய்து கொண்டதைத் தடுக்க வேண்டும் என்கிற இந்துத்துவ சிந்தனைக்கு ஆட்பட்டுவிட்டதே ஆகும்.

மேலும் கேரள உயர்நீதிமன்றம் தன்னுடைய தீர்ப்பில், ஹாதியா 24 அகவையினராக உள்ள போதிலும் பெண் என்பதால் மனஉறுதி இல்லாதவர் என்றும் மற்றவர்களால் எளிதில் ஏமாற்றப்படக் கூடிய நிலையில் இருப்பவர் (Weak and

Vulnerable Person) என்று கூறியிருக்கிறது. மேலும், இந்திய நாட்டின் மரபுப்படி, ஒரு பெண்ணை முறைப்படித் திருமணம் செய்துகொடுக்கும் வரையில், அப்பெண் பெற்றோரின் கட்டுப்பாட்டில் இருப்பதே முறையானதாகும் என்றும் உயர்நீதிமன்றம் கருத்துரைத்துள்ளது. ஒருபெண் திருமணத் துக்குமுன் தந்தைக்கும், திருமணத்திற்குப்பின் கணவனுக் கும், கட்டுப்பட்டவளாக இருக்கவேண்டும் என்று மனுஸ் மிருதி இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் வகுத்த ஆணாதிக்க விதியைத் தீர்ப்பாக வழங்கும் அளவுக்கு உயர்நீதித் துறையில் இந்துத்துவச் சிந்தனைக் கோலோச்சுகிறது.

இந்தியா என்பது இந்துக்களின் நாடு; எனவே இது இந்து மத சாத்திரங்களின் சட்டங்களால் ஆளப்பட வேண்டும் என்கிற சங்பரிவாரங்களின் குறிக்கோளை நிறைவேற்றுவது போன்று உயர்நீதித்துறையின் பல தீர்ப்புகள் இருக்கின்றன. பெண்கள் சுதந்தரமாகச் சிந்தித்து முடிவு எடுக்கும் தகுதியில்லாதவர்கள் - 'பலவீனமானவர்கள்' என்று எல்லா மதங்களும் சொல்கின்றன. இதை வழிமொழிவதுபோல் கேரள உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு இருக்கிறது. 24 அகவை கொண்ட ஒரு ஆண், இவ்வாறு மதம் மாறியிருந்தாலோ, மற்றொரு மதத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டிருந்தாலோ கேரள உயர்நீதிமன்றம் இதுபோன்ற தீர்ப்பை வழங்கியிருக்குமா?

ஹாதியாவைத் திருமணம் செய்து கொண்டது செல்லாது என்கிற கேரள உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து ஷபின் ஜகான் உச்சநீதிமன்றத்தில் முறையீடு செய்தார். இசுலாமிய தீவிரவாதிகள் 'காதல் புனிதப் போர்' (லவ் ஜிகாத்) மூலம் தன் மகளை மதிமயக்கி, சிரியாவின் போர் முனைக்கு அனுப்பப் பார்க்கிறார்கள் என்று ஹாதியாவின் தந்தை குற்றம் சாட்டியிருந்தார். அதனால் உச்சநீதிமன்றம் "லவ் ஜிகாத்" குறித்து விசாரிக்குமாறு தேசிய புலனாய்வு முகமைக்கு ஆணையிட்டது. தேசிய புலனாய்வு முகமை உச்சநீதிமன்றத் தில் அதனுடைய அறிக்கையை அளித்தது. ஹாதியா உள்ளிட்ட 11 இந்துப் பெண்களை "லவ் ஜிகாத்" மூலம் இசுலாமிய தீவிரவாதிகளாக மாற்றுவதற்கு முயற்சிகள் நடப்பதாகவும், கேரள காவல்துறையின் விசாரணையில் இதுபோன்ற 89 வழக்குகள் இருப்பதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கேரள மக்கள் தொகையில் இசுலாமியர்கள் 25 விழுக்காட்டினராக உள்ளனர். நூறு விழுக்காடு எழுத்தறிவு நிலையை எய்திவிட்ட கேரளாவில், கல்வி, வேலை வாய்ப்பு முதலான பல்வேறு தளங்களில் இந்து-இசுலாமிய-கிறித்துவ இளம் பெண்களும் ஆண்களும் ஒருவரோடு ஒருவர் கலந்து பழகும் சூழல் நிலவுகிறது. அதனால் வேறு மதத்தவரைக் காதலித்துத் திருமணம் செய்து கொள்வது இயல்பாக நிகழக்கூடியதாகும். இவ்வாறு வேறு மதத்தவரைக் காதலிப்ப தையும் திருமணம் செய்து கொள்வதையும் 'லவ் ஜிகாத்' என்கிற தீவிரவாதமாகக் காட்ட முயல்வது கடைந்தெடுத்த கயமையாகும்.

கேரள உயர்நீதிமன்றத்தின் தவறான தீர்ப்பினால், ஹாதியா அவருடைய விருப்பத்துக்கும், உரிமைக்கும் எதிரான வகையில் அவருடைய பெற்றோர் வீட்டில் சிறைக்கைதி போல் அடைக்கப்பட்டார். ஹாதியாவை வேறு எவரும் சந்திக்கவிடாமல் தடுப்பதற்காக வீட்டைச் சுற்றிலும் காவல் துறையினர் நிறுத்தப்பட்டனர். அவருடைய தொலைப் பேசியும் உயர்நீதிமன்றத்தால் பறிக்கப்பட்டதால் வேறு எவருடனும் தொடர்பு கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப் பட்டார். ஹாதியாவைச் சந்திக்க ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. மாநில மனித உரிமை ஆணையத் தினர் ஹாதியாவைச் சந்திப்பதற்கு, தேசிய புலனாய்வு முகமை அனுமதி மறுத்துவிட்டது. ஆனால் ஆர்.எஸ்.எஸ். ஆதரவாளர் ஒருவர் ஹாதியாவைச் சந்தித்து அவரை மீண்டும் இந்துவாக மாறும்படி கேட்டதற்கு அனுமதிக்கப் பட்டார். அதேபோல் தேசிய மனித உரிமை ஆணையத்தின் தலைவர் (ஒரு பெண்) ஹாதியாவைச் சந்திக்க தேசிய புலனாய்வு முகமை அனுமதித்தது. "காதல் மிட்டாய்" காட்டி ஹாதியாவை மயக்கிவிட்டார்கள் என்று அவர் செய்தியாளர் களிடம் கூறினார். அரசு நிர்வாகமும், நீதித்துறையும் இந்துத்துவச் சாய்வு மனப்பான்மையுடனே செயல்படுகின்றன என்பது ஹாதியாவின் செய்தியில் அப்பட்டமாகத் தெரிகிறது.



*உச்சநீதிமன்றத்தில் நேர்நிறுத்துவதற்காக கேரளாவிலிருந்து அழைத்துச் செல்லப்படும் ஹாதியா*

2017 அக்டோபர் 30 அன்று இவ்வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா, நீதிபதிகள் எ.எம். கன்வில்கர், டி.ஒய். சந்திரசூட் ஆகியோர் நவம்பர் 27 அன்று ஹாதியாவிடம் நேரில் விசாரணை செய் வதற்காக அவரை அழைத்து வருமாறு ஆணையிட்டனர். அதன்படி, கேரளக் காவல் துறையினர் ஹாதியாவைத் தில்லிக்கு அழைத்துச் சென்ற போது, கொச்சி வானூர்தி நிலை யத்தில் செய்தியாளர்களை நோக்கி ஹாதியா, "இசுலாமிய மதத்திற்கு மாற என்னை யாரும் கட்டாயப்படுத்தவில்லை; ஷபின் ஜகான் என் கணவர்; அவருடன் வாழ விரும்பு கிறேன்; நான் ஒரு முசுலீம்; எனக்கு நீதி வேண்டும்" என்று உரக்கக் கத்தினார்.

27.11.2017 அன்று உச்சநீதிமன்றத்தில் ஹாதியா நேர் நிறுத்தப்பட்டார். அப்போது நடுவண் அரசின் கூடுதல் தலைமை வழக்குரைஞர் மனிந்தர் சிங், "தேசிய புலனாய்வு முகமை யின் அறிக்கையின்படி, மூளைச்சலவைச் செய்யப்பட்டு இசுலாமிய தீவிரவாத மனநிலையில் இருக்கும் ஹாதியாவிடம் பேசுவது பயனற்றது; அப்படிப் பேசுவதாக இருந்தாலும், தேசிய புலனாய்வு முகமையின் அறிக்கையை முதலில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்" என்று வாதிட்

டார். தேசிய புலனாய்வு முகமையின் வழக்குரைஞரும் இதே கருத்தை முன்வைத்தார். ஒருமணிநேரத்திற்குமேல் நடந்த இந்த விவாதம் தன்னைப் பற்றியதாக இருந்தபோதிலும் ஹாதியா வாய்திறந்து பேச வாய்ப்பில்லாமல் நின்று கொண்டிருந்தார்.

ஹாதியாவிடம் நேரில் அவருடைய கருத்தைக் கேட்டறிய வேண்டும் என்பதற்காக அவரை அழைத்துவரச் சொன்ன நீதிபதிகளுக்கு முதலில் ஹாதியாவின் கருத்தைக் கேட்கும் வகையில் வழக்கை நடத்த வேண்டும் என்பதுகூட தெரியாமல் தடுமாறினார்கள். இந்த நிலையில்தான் தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா, "இதுபோன்ற விசித்திரமான வழக்கைச் சந்தித்ததில்லை" என்று சொன்னார். நீதிபதி டி.ஒய். சந்திரசூட் தலையிட்ட பிறகே ஹாதியாவின் கருத்தைக் கேட்டனர்.

ஹாதியாவின் விருப்பம் என்ன என்று நீதிபதிகள் கேட்ட போது, "நான் என் கணவருடன் சுதந்தரமாக வாழ விரும்புகின்றேன்" என்று சொன்னார். "வேறு மதத்தைப் பின்பற்றுவது, படிப்பைத் தொடருவது ஆகியவற்றில் ஒரே நேரத்தில் கவனம் செலுத்த முடியுமா?" என்று நீதிபதிகள் கேட்டதற்கு, ஹாதியா, "இந்த நாட்டின் நல்ல குடிமகள் என்ற முறையில் நான் விரும்பும் இசுலாம் மதத்தைப் பின்பற்ற முடிவு செய்துள்ளேன்; அதேநேரத்தில் தொடர்ந்து என் படிப்பை முடித்து நல்ல மருத்துவராக இருப்பேன்" என்று கூறினார்.

உச்சநீதிமன்ற நீதிபதிகள், ஹாதியா சேலம் ஓமியோபதி மருத்துவக் கல்லூரியில் நிலுவையிலுள்ள பத்து மாத பயிற்சிக் காலத்தை முடித்திட உரிய ஏற்பாடுகளைச் செய்துதர வேண்டும் என்றும், கல்லூரியின் முதல்வர் ஹாதியாவின் பாதுகாவலராக இருப்பார் என்றும் ஆணையிட்டனர். இந்த வழக்கின் அடுத்த விசாரணை 2018 சனவரி மாதம் மூன்றாம் கிழமையில் நடைபெறும் என்று அறிவித்தனர்.

உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஹாதியா - ஷபின் ஜகான் திருமணத்திற்கு ஒப்புதல் அளிக்காமல் அதை மேற்கொண்டு விசாரணைக்கு உட்பட்டதாக ஆக்கியிருப்பது அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளுக்கு எதிரானதாகும். ஹாதியாவோ, ஷபின் ஜகானோ தீவிரவாதக் குற்றச் செயலில் ஈடுபட்டிருந்தால் தண்டிப்பது என்பது வேறு செய்தி. அதற்காக அவர்களின் திருமணத்தை இரத்து செய்யப்பட்ட நிலையிலேயே நீடிக்க விடுவது அநீதியாகும். கேரள உயர்நீதிமன்றம் ஹாதியாவை வீட்டுச் சிறையில் அடைத்தது. அதிலிருந்து மட்டும் விடுதலை அளித்துள்ளது உச்சநீதிமன்றம். ஆனால் தனியொருவரின் மத உரிமையை, திருமண உரிமையை, சனநாயக உரிமையைப் பாதுகாக்க வேண்டிய இடத்தில் இருக்கும் உச்சநீதிமன்றம், இந்துத்துவ ஆட்சியில், ஹாதியா வழக்கில் என்ன மாதிரியான முடிவை எடுக்கப் போகிறது என்பது கேள்விக்குறியாக நிற்கிறது.

இராஜஸ்தான் மாநில உயர்நீதிமன்றம் 15.12.2017 அன்று மதமாற்றத்தை அனுமதிப்பதற்காகப் பத்து வழிகாட்டி நெறிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று அறிவித்துள்ளது. திருமணத்திற்காகக் கட்டாய மத மாற்றம் செய்வதைத் தடுப்பதற்காகவும், சமூகத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்காகவும் இந்தப் பத்து விதிகளை அறிவித்திருப்பதாக உயர்நீதிமன்றம் கூறியுள்ளது. மத மாற்றம் குறித்த விதிமுறைகளை அரசு வகுக்கும் வரையில் இந்த வழிகாட்டி நெறிமுறைகள் நடப்பில் இருக்கும் என்று தெரிவித்துள்ளது.

ஜோத்பூரைச் சேர்ந்த 22 அகவையினரான ஆரிஃபா முசுலீமாக மதம் மாறி, ஒரு இசுலாமிய இளைஞரைத் திருமணம் செய்து கொண்டார். அகிலா மதம் மாறிய போது ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்யப்பட்டது போலவே இதிலும் செய்யப்பட்டது. நவம்பர் மாதம் ஆரிஃபா பர்தா அணிந்து கொண்டு உயர்நீதிமன்றத்திற்கு வந்து, தன் சொந்த விருப்பத்தின் பேரில் மதம் மாறியதாகவும், திருமணம் செய்து கொண்டதாகவும் கூறினார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் கோபால் கிருஷ்ணன் வியாஸ், வி.கே. மாத்தூர் ஆகியோர் ஆரிஃபாவை முதலில் பெண்கள் காப்பகத்துக்கு அனுப்பினர். இறுதியில் அவருடைய கணவருடன் செல்ல அனுமதித்தனர்.

இந்த வழக்கின் 38 பக்கங்கள் கொண்ட இறுதித் தீர்ப்பில் திருமணத்திற்காகக் கட்டாய மதமாற்றம் செய்வதைத் தடுப்பதற்காக நீதிபதிகள் பத்து வழிகாட்டி நெறிமுறைகளை அறிவித்துள்ளனர். ஒரு பெண்ணோ அல்லது ஆணோ மதம் மாற விரும்பினால் அதுகுறித்து மாவட்ட ஆட்சியருக்குத் தெரிவிக்க வேண்டும். மாவட்ட ஆட்சியர் அதைப் பற்றி அறிவிப்பு பலகையில் வெளியிடுவார். அவ்வாறு அறிவிக்கப்பட்ட ஒரு கிழமை கழித்துதான் மதம் மாறியவர் திருமணம் செய்து கொள்ள வேண்டும்.

மதம் மாறியவருக்குத் திருமணம் செய்து வைக்கும் மதப்புரோகிதர், மதமாற்றம் குறித்து மாவட்ட ஆட்சியருக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றதா என்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும். இந்த வழிகாட்டி முறைகளைப் பின்பற்றாத நிலையில், இதனால் பாதிக்கப்பட்டவர் புகார் அளித்தால், அத்திருமணம் செல்லாததாக அறிவிக்கப்படும் என்று அத்தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

தான் விரும்புகின்ற மதத்தைப் பின்பற்றுவதற்கான உரிமை அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமை பகுதியில் உறுதிசெய்யப்பட்டுள்ள போதிலும், இந்து மதத்திலிருந்து வேறு மதத்திற்கு மாறுவதைத் தடுப்பதே இராஜஸ்தான் உயர்நீதிமன்றத்தின் நோக்கமாக உள்ளது.

இந்தியாவில் இன்று 130 கோடி மக்கள் உள்ளனர். இவர்களில் 30 கோடிப் பேர் இசுலாமியர்கள்; 3 கோடிப் பேர் கிறித்தவர்கள். மற்றவர் இந்துக்கள். எனவே ஒரு மதத்தைச் சேர்ந்தவர் இன்னொரு மதத்தைச் சேர்ந்தவரைக் காதலிப்பதும், திருமணம் செய்து கொள்வதும் இயல்பாக நிகழ வாய்ப்பு உள்ளது. இதை மதங்கள் சார்ந்த பிரச்சனையாக மதவெறி சக்திகள் பார்க்கின்றனர்.

எனவே திருமணம் என்பதை மத அதிகாரத்தின் பிடியிலிருந்து விடுதலை செய்ய வேண்டும். எல்லாத் திருமணங்களும் அரசு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட வேண்டும் என்பதைச் சட்டமாக்க வேண்டும். திருமணங்களைப் பதிவு செய்வது என்பது கட்டாயம் என்ற நிலை ஏற்படும்போது, மதச் சடங்குகளின்படி திருமணம் செய்வது என்பது படிப்படியாகக் குறையும். சாதி மாறி, மதம் மாறி திருமணம் செய்து கொள்ளும் நிலையும் பெருகும்.

## அந்தோ! புரட்சியாளர் கு. கலியபெருமாள் மகன்

# தோழர் கு.க. வள்ளுவன் மறைந்தார்!



பெண்ணாடம் அடுத்த சௌந்தர சோழபுரம் புலவர் கு. கலியபெருமாள் பெண்ணாடம் உயர் நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். அவர் திருவட்டத்துறை யில் பிறந்த வாலாம்பாளை 1948இல் மணந்து கொண்டார். கலியபெருமாள்-வாலாம்பாள் திருமணத்தில் நான் பேசினேன்.

முதன்முதலில் பெண்ணாடத்தில் கரும்பு அரைவை ஆலையை நிறுவுவதில் அவரும் நானும் அக்கறை காட்டி னோம். பின்னர் வேளாண்மை செய்வோரையும், சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களையும் அவர் அணிதிரட்டினார்.

மூத்தமகன் வள்ளுவன் 21.4.1950இல் பிறந்தார். பல்கலையில் புகுமுக வகுப்பு வரை படித்தார். அவருடன் பிறந்தவர்கள் நம்பியார், தமிழரசி, கண்ணகி, அஞ்சுகம் ஆகியோர் ஆவர். தமிழரசி திருமணத்தில் நான் பங்கேற்றேன்.

கு.கலியபெருமாள் தம்பி கு.மாசிலாமணி, என் தனிப் பயிற்சிக் கல்லூரியில் படித்தவர்.

1958 வாக்கில் இரண்டு தடவைகள் கு. கலியபெருமாள் வீட்டுக்குப் போய்த் தங்கியிருந்தேன்.

புலவர் கலியபெருமாள் நக்சல்பாரி இயக்கத்தில் வீரியத் தோடு பணியாற்றியதால், அவரது குடும்பமே பாதிக்கப் பட்டது. இதில் 1972ஆம் ஆண்டு, காவல்துறை உளவாளி ஐயம்பெருமாள் கொலை வழக்கில், கு. கலியபெருமாளுக்கும், வள்ளுவனுக்கும் கடலூர் செசன்ஸ் நீதிமன்றத்தில் தூக்குத் தண்டனை வழங்கப்பட்டது.

வள்ளுவன் தம்பி நம்பியார், வள்ளுவன் சிற்றப்பா கு. மாசிலாமணி, பங்காளிகள் இராசமாணிக்கம், ஆறுமுகம், வாலாம்பாளின் மூத்த சகோதரியும், செயங்கொண்டம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், கொ.இரா. விசுவநாதன் அவர்களின் மனைவியும் ஆன ஆனந்தநாயகி ஆகியோருக் கும் ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது.

பின்னர் உயர்நீதிமன்றத்தில் வள்ளுவனுக்கு ஆயுள் தண்டனை என்றும், மற்றவர்களுக்கு அதே தண்டனை என்றும் உறுதி செய்யப்பட்டது.

கருணை மனு அளிப்பது தான்கொண்ட கொள்கையில் இருந்து பின்வாங்குவதாக ஆகும் என்று கருதி, கலியபெரு மாள் கருணை மனு அளிக்காத நிலையில், தோழர் எம். கல்யாணசுந்தரம், சென்னை முன்னாள் மேயர் கிருஷ்ண மூர்த்தி மற்றும் பிற சனநாயக சக்திகளின் முயற்சியால் மக்கள் திரள் கோரிக்கை மனுவை ஏற்றுத் தமிழக அரசே அவருக்கு ஆயுள் தண்டனையாகக் குறைத்தது.

வள்ளுவன் திருச்சி சிறையில் இருந்தபோது, சிறைத் துறையினரின் தடியடிக்கு ஆளாகி உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்து மீண்ட வரலாறும் உண்டு.

12 ஆண்டுகளுக்குப் பிறகு, கன்ஷியாம் பர்தேசி என்ற ஆங்கிலப் பத்திரிகை நிருபரின் முயற்சியால், உச்சநீதிமன்றத் தால் நீண்டநாள் பரோலில் விடுவிக்கப்பட்டனர்.

பின்னர், அதே நீதிமன்றத்தின் அறிவுறுத்தலின் பேரில், எல்லோரும் சில ஆண்டுகளுக்குப் பிறகு முழுமையாக விடுதலை செய்யப்பட்டனர். பரோல் காலத்தில் வழக்கறிஞர் கள் இப்ராகிம், சங்கரசுப்பு, இன்னும் சில மனித உரிமை ஆர்வலர்களின் முயற்சியால் கடலூரைச் சேர்ந்த அகிலா என்ற பெண்மணியை வள்ளுவன் திருமணம் செய்து கொண்டார்.

பின்னாளில் பாவலேறு பெருஞ்சித்திரனார் தலைமை யில் வரவேற்பு நடைபெற்றது. இவ்விணையருக்கு ஊர்மிளா, லெனின் என்ற இரு பிள்ளைகள் உள்ளன; பேரப்பிள்ளை களும் உண்டு.

சிறையிலிருந்து வெளியில் வந்ததும் பொதுவாழ்வில் ஈடுபட்டார். சமூக மாற்றத்திற்காகத் தொடர்ந்து களப்பணி ஆற்றினார். தன் பிள்ளைகளின் பொருளாதார வாழ்வை உயர்த்தக் கடைசிவரை போராடிச் சோர்வுற்றவர்.

இந்நிலையில் 21.12.2017 வியாழன் மாலை 7.30 மணி அளவில் திடீர் உடல்நலக்குறைவால், சென்னையில் உயிரிழந்தார். 22.12.2017 அன்று பெண்ணாடம் அவரது சகோதரி அஞ்சுகத்தின் இல்லத்தில் பொது மக்களின் அஞ்சலிக்காக உடல் வைக்கப்பட்டது. அன்று மாலையே சொந்த ஊரான ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள சௌந்திர சோழபுரத்தில் பெருவாரியான மக்கள் பங்கேற்க, அவரது உடல் எரியூட்டப்பட்டது.

என் தோழர் கு.க. வள்ளுவனை இழந்து, துயருக்கு ஆளாகியிருக்கும் அவரது சிற்றப்பா கு. மாசிலாமணி, தம்பி கு.க. நம்பியார், உடன்பிறந்த தமிழரசி, கண்ணகி, அஞ்சுகம், துணைவியார் அகிலா, மகள் ஊர்மிளா, லெனின், தம்பி கொ.வி. புகழேந்தி ஆகியோர்க்கும் என் சார்பிலும், என் குடும்பத்தார் சார்பிலும், மா.பெ.பொ.க. சார்பிலும் ஆழ்ந்த வருத்தத்தையும் மனங்கசிந்த இரங்கலையும் உரித்தாக்கு கிறேன்.

**வாழ்க கு.க. வள்ளுவன் புகழ்!**

**- வே. ஆனைமுத்து**

# மாவீரர் நாள் உரைகள் - 2017

குட்டுவன்

தமிழர்கள் அனைவரும் மாவீரர் நாளை என்றும் நினைவுகூறுதல் அவசியம். தங்களின் இன்னுயிரை ஈந்து பெரும் தியாகங்களைப் புரிந்து ஈழத்தின் விடுதலைக்காக உயிர் நீத்த மாவீரர்களை நாம் இன்று நினைவு கூர்கிறோம். தமிழீ ழத்தின் தேசியத் தலைவர் மேதகு பிரபா கரன் உலகத் தமிழர்களின் தலைவராக இன்றும் போற்றப்படுகிறார். தமிழீழத்தில் மட்டுமல்ல தமிழகத்திலும் தமிழர்கள் வாழ்கின்ற உலகில் உள்ள அனைத்து நாடுகளிலும் இன்று மாவீரர் தினம் பின் பற்றப்படுகிறது. சங்கக் காலத்தில் போரில் உயிர் நீத்த மாவீரர்களுக்கு நடுகல் வணக் கம் செய்யும் மரபு பின்பற்றப்பட்டது. இதைப் பற்றிய விளக்கங்கள் பல சங்க இலக்கியங் களில் பரந்து காணப்படுகின்றன. இந்த உயரிய தமிழ் மரபை மீட்டெடுத்து ஈழப் போரில் உயிர்நீத்த ஈகிகளுக்கு வீர வணக்கம் செலுத்தும் நாளைத் தமிழ் மரபாக மாற்றி 1989 முதல் மேதகு பிரபாகரன் மாவீரர் நாள் உரையை முதன்முதலாக நிகழ்த்தினார். அன்று முதல் இந்த மாவீரர் நாள் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படுகிறது.



26.11.2017 நியுயார்க் நகரில் அமைந்துள்ள அறிஞர் தாமஸ் பெயின் நினைவிடத்திற்குச் சென்றேன். இங்கிலாந் தில் இருந்து அமெரிக்காவிற்கு குடிப்பெயர்ந்து அமெரிக்க விடுதலைக்காக முழக்கமிட்ட உலகப் பெரும் அறிஞர்களில் ஒருவர்தான் தாமஸ் பெயின். இந்திய விடுதலைப் போர் வரலாற்றை எடுத்துக்கொண்டால்கூட காங்கிரசு என்ற இயக்கத்தை உருவாக்கியவர் இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த ஹியும், என்பவர் ஆவார். விடுதலைப் போராட்டத் தலைவர் காந்தியார் இந்தியாவினுடைய தேசியத்திற்கு வித்திட்டவர்கள் ஹியும் வெடர்பர்ன் என்கிற இரு இங்கிலாந்து அறிஞர்களைக் குறிப்பிட்டுள்ளார். அதே போன்றுதான் தேசிய என்ற கருத் துருவாக்கத்திற்கு வித்திட்டவர் தாதாபாய் நௌரோஜி என்று குறிப்பிட்டுள்ளார். அவ்வகையில்தான் தாமஸ் பெயினும் அமெரிக்க விடுதலைப் போருக்குத் துணை நின்றவர். அவர் வாழ்ந்த எளிமையான இல்லத்தை நினைவுச்சின்னமாக அமெரிக்க அரசு சிறப்பான முறையில் அமைத்துள்ளது. “எங்கே மோதல் கடுமையாக உள்ளதோ அங்கேதான் வெற்றியும் புகழ்மிக்கதாக இருக்கும்” (The harder of the conflict, the more glorious the triumph) என்று அறிஞர் தாமஸ் பெயின் குறிப்பிட்டார். இதே நிலைதான் ஈழத்திற்கும் பொருந்துவதாக உள்ளது. சிங்கள பேரினவாத இராணுவ அரசிடம் கடுமையான மோதல்களைத் தொடர்ந்து சந்தித்து வரும் தமிழினம் ஒருநாள் ஈழத்தை வென்று புகழ்மிக்க தமிழர் அரசை உருவாக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

தமிழர்கள் உலகின் மூத்த குடிமக்கள் ஆவர். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கடலால் நாம் பிரிக்கப்பட்டோம். இன்றைக்கும் பல ஆய்வு நூல்கள் இதைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. குமரிக்கண்டம் என்ற பெரும் நிலப்பரப்பு தமிழர்களின் தாயகமாக அமைந்து புகழோடு வாழ்ந்த தற்கான சான்றுகள் தொடர்ந்து கிடைத்து வருகின்றன.

2016ஆம் ஆண்டு புள்ளிவிவரப்படி இலங்கையில் சிங்களவர்களின் எண்ணிக் கை ஏறக்குறைய ஒரு கோடி என்று குறிப் பிடப்பட்டுள்ளது. தமிழர்கள் 30 இலட்சம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் தமிழர்கள் கண்டத்திற்குக் கண்டம் இன்று பரந்து வாழ்கின்றனர். தமிழர்களின் ஒட்டு மொத்த எண்ணிக்கை ஏறக்குறைய 10 கோடிக்கு மேல் உள்ளது. அமெரிக்க சுதந்திரப் போரின் போது தாமஸ் பெயின் மற்றொரு முதன்மையானக் கருத்தைப் பதிவு செய்தார். ஒரு சிறிய தீவு அமெரிக்கக் கண்டத்தை நிரந்தரமாக அடக்கி ஆள முடியாது என்றார். அதுபோல்தான் கண்டங்கள் கடந்து வாழும் 10 கோடி தமிழர்களை ஒரு கோடி சிங்களவர்கள் நிரந்தரமாக ஆள முடியாது என்பதை சிங்கள இனவெறி ஆட்சியாளர்களும் அவர்களுக்குத் துணை நிற்பவர்களும் உணரும் காலம் வெகுதொலைவில் இல்லை.

தமிழ் மொழியும் மிகத் தொன்மையான உலக மொழி களில் மூத்த மொழியாகப் பிறந்து இன்றைக்கு உலகில் வாழும் தமிழர் அனைவருக்கும் தாய்மொழியாக உயர்ந்து வருகிறது. தமிழ்மொழியைப் பொறுத்த வரை பல காலக் கட்டங்களில் தன்னோடு இணைந்த பல சமயப் பிரிவுகளை அணைத்துக்கொண்டது.

வரலாற்றின் காலக்கட்டங்களில் பல சமயப் பிரிவினரிடம் மோதல்கள் இருந்துள்ளன. ஆனால் தமிழ் மொழி ஒன்று தான் அனைத்துச் சமயப் பிரிவினரையும் தன்னுள் இணைத் துக் கொண்ட உலகின் மொழியாக (Inclusive Language) உள்ளது. 2000 ஆண்டுகளுக்கு முந்தைய சமணம், பௌத்தம், கிறித்தவம், சைவம், வைணவம் ஆகிய அனைத்து சமயங் களின் காப்பியங்களும் தமிழில் உள்ளன. இசுலாமியக் காப்பியமும் தமிழில் உள்ளது. இந்தச் சமயப் பிரிவினருக்கு இடையில் பல காலக்கட்டங்களில் பெரும் சண்டைகள் நடந்து உயிர்கள் இழப்புகள் ஏற்பட்டதும் உண்மை. ஆனால் 20ஆம் நூற்றாண்டில் அனைத்துச் சமயப் பிரிவினரும் தங்களைத் தமிழர் என்று பறைசாற்றிக் கொள்வதில் பெருமை கொள்கின்றனர்.

இத்தகைய வரலாற்று பெருமை கொண்ட தமிழினத்தின் மீது இலங்கையில் கடந்த 68 ஆண்டுகளாகத் தொடர்ந்து

தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. தந்தை செல்வா தலைமையில் அமைதி வழியில் போராட்டமும் நாடாளுமன்ற சனநாயக முறையும் முன்னிறுத்தப்பட்டன. தந்தை செல்வாவின் நாடாளுமன்ற உரைகள் இதற்குத் தக்க சான்றுகளாக உள்ளன. ஆனால் தொடர்ந்து தமிழர்களின் மொழியுரிமையும் வாழ்வுரிமையும் மறுக்கப்பட்டதால்தான் தனி ஈழம் என்ற கோரிக்கையைத் தந்தை செல்வா அறிவித்தார். தந்தை செல்வா தளம் அமைத்தார் தலைவர் பிரபாகரன் களம் அமைத்தார் என்று கவிஞர் காசி ஆனந்தன் அருமையாகக் குறிப்பிட்டுள்ளார்.

நான் ஓர் ஆய்வாளராகப் பல நாடுகளுக்குச் சென்றுள்ளேன். அங்குள்ள அரசியல் தன்மைகளை ஆய்வு செய்திருக்கிறேன். அதனடிப்படையில் இலங்கையில் இருப்பது ஒரு சனநாயக அரசே இல்லை என்பதை உறுதியாகக் குறிப்பிடலாம். அங்கிருப்பது ஒரு இராணுவ அரசாகும். இலங்கையின் பொருளாதார வளர்ச்சியையும் வீழ்ச்சியையும் ஒப்பிட்டுப் பார்த்தால் மக்கள் நலத் திட்டங்களுக்குச் செலவிடுவதைவிட இராணுவத்தின் செலவுதான் பெருகி வருகிறது.

இதன் காரணமாக இலங்கையின் உள்நாட்டு வெளிநாட்டு கடன்கள் நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்திக்கு (Gross National Product) சமமாக கடனளவு உள்ளது. அண்மையில் வந்த சில தரவுகள்-சிங்கள குழந்தைகளின் ஊட்டச்சத்து குறைபாடு அதிகரித்து வருவதாகக் குறிப்பிடுகின்றன. கிழக்கு மாநிலங்களில் வாழும் தமிழர் குழந்தைகள் சிங்கள குழந்தைகளைவிட ஊட்டச்சத்து குறைவில் அதிகம் உள்ளனர். ஆகவே சிங்கள அரசினை இராணுவ அரசு என்றே குறிப்பிட வேண்டும்.

2009இல் முள்ளிவாய்க்கால் போரில் தமிழர்கள் இலட்சக்கணக்கில் கொல்லப்பட்டனர். அவர்களுக்கான நீதியை ஐக்கிய நாடுகள் மன்றத்தின் மனித உரிமை ஆணையம் வலியுறுத்தியும் பன்னாட்டு விசராணையைத் தள்ளிப் போட்டுக் கொண்டே வருகின்றனர். இப்பன்னாட்டு விசாரணையைத் தொடர்ந்து மறுத்து வந்த போதிலும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் ஐக்கிய நாடுகள் மன்றத்தின் மனித உரிமை ஆணையத்தில் உரிய முறையில் முறையிட்டு ஒரு நீதியரசரின் தலைமையில் விசாரணைக் குழுவை அமைத்துள்ளது மிகவும் பாராட்டுக்குரியது. போர்க்குற்றவாளிகளை அடையாளம் கண்டு உரிய தண்டனைகளை வழங்குவதற்கு இந்த விசாரணைக் குழு முதல் படி என்று கருதுகிறேன்.

தமிழீழப் போராட்டம் ஒரு தொடர்ச்சியான போராட்டமாகும். போரில் ஏற்பட்ட ஒரு பின்னடைவு இந்தப் போராட்டத்தின் நீண்ட கால வெற்றியைத் தடுத்து நிறுத்த இயலாது. உலகின் விடுதலைப் போர்களை அறிந்தவர்கள் இதை நன்றாக உணர்வர்.

ஈழ விடுதலையை விரைவில் அடைவதற்குத் தமிழர்கள் அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டும். தமிழர்களிடம் உள்ள குறையே ஒற்றுமை இன்மை என்பதை பல காலக்கட்டங்கள் உணர்த்தியிருக்கின்றன. அந்தச் சிறுசிறு வேறுபாடுகளை எல்லாம் களைந்துவிட்டு ஒரே அணியில் தமிழர் நின்று ஈழ விடுதலைக்குப் பாடுபட வேண்டும். பல அரசியல் கருத்துகள் இன்றைய உலகில் முன்வைக்கப்படுகின்றன. அதைத்தான் “புவிசார் அரசியல்” (Geocentric Politics) என்று குறிப்பிடுகின்றனர்.

ஆனால், புவிசார் அரசியல் காலத்திற்குக் காலம் மாறி வரும் சூழலும் உள்ளது. எனவே உலகில் வாழும் தமிழர்கள் அனைவரும் ஒன்றிணைந்து அந்ததந்த நாடுகளில் உள்ள அரசியல் தலைவர்களைச் சந்தித்துத் தமிழர்களுக்கான உரிமையையும் நீதியையும் பெற வேண்டும். அதற்குரிய அழுத்தத்தையும் நாம் அளிக்க வேண்டும். அப்படிப்பட்ட தொடர் அழுத்தத்தின் காரணமாகத்தான் அரசியல் சூழல்கள் நமக்கு சாதகமாக மாறும். இலங்கை இராணுவ அரசு நிரந்தரமாகப் பொய்யைக் கூறிப் பல நாடுகளின் தலைவர்களை ஏமாற்றி ஈழத்தின் விடுதலையைத் தடுத்துவிட முடியாது. ஈழத்தை வென்றெடுப்பதற்கு இந்த மாவீரர் நாளில் நாம் ஒற்றுமையுடன் செயல்படுவோம் என்ற உறுதி ஏற்க வேண்டும். அதுவே அந்த மாவீரர்களுக்கு நாம் செலுத்தும் உண்மையான காணிக்கையாகும்.

*(நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசின் நாடாளுமன்ற அவையின் சார்பில் அமெரிக்காவின் நியுயார்க் நகரில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வில் கட்டுரை ஆசிரியர் ஆற்றிய உரை)*

## காஞ்சியில் பேராசிரியர் மா.நன்னன், அரங்க. சானகிராமன் படத்திறப்பு விழா



முற்போக்கு சமூகநீதிப் பேரவை, காஞ்சிபுரம் கிராமிய இந்தியா, சமூக, கலை-பண்பாட்டு மையம், கன்னியாகுமரி திருவள்ளுவர் அறக்கட்டளை இணைந்து நடத்திய தமிழறிஞர், பேராசிரியர் மா.நன்னன் மற்றும் மக்கள் மேம்பாட்டு ஆர்வலர் அரங்க. சானகிராமன் படத்திறப்பு-நினைவேந்தல் நிகழ்வு, 24-12-2017 ஞாயிறு காலை 10.00 மணிக்கு, காஞ்சிபுரம் அருகில் உள்ள அப்துல்லாபுரம் ‘ரிஸ்க்’ உரையரங்கில், டாக்டர் விமுனாமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. தமிழ்முகிலன், க.கோதண்டன் முன்னிலை வகித்தனர். இல முனுசாமி வரவேற்புரையாற்றினார். காஞ்சிக் கலைக்குழுத் தோழர்கள் பாவெல், சம்பத்குமார், உலகஒளி ஆகியோர் பாடல்களைப் பாடினர்.

புஞ்சை பூ.வில்லவன், காரை கு.அருளானந்தம் ஆகியோர், முறையே பேரா.நன்னன், அரங்க.சானகிராமன் படத்தைத் திறந்துவைத்தனர்.

சக்தி.கமலாம்பாள், பூ.கா.பொன்னப்பன், மு.செயப்பிரகாசு, இ.இரவீந்திரன், வ.வெங்கடேசன் ஆகியோர் மறைந்தவர்களைப் பற்றி நிறைவுரையாற்றினர். சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன் நினைவேந்தல் நிறைவுரை ஆற்றினார். மா.முத்துக்குமார் நன்றியுரையுடன் நிகழ்வு இனிதே நிறைவடைந்தது.

# உணவுப் பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தல்

**- க. முகிலன்**

உலக வணிக அமைப்பு (World Trade Organisation - WTO) நாடுகளின் அமைச்சர்கள் நிலையிலான மாநாடு தென்அமெரிக்காவில் உள்ள அர்ஜென்டைனா நாட்டின் தலைநகரில் 2017 திசம்பர் 10 முதல் 13 வரையில் நான்கு நாள்கள் நடைபெற்றது. உலக வணிக அமைப்பில் 164 நாடுகள் உள்ளன. இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இம்மாநாடு நடைபெறுகிறது. உலக வணிக அமைப்பின் விதிகளின்படி, அதன் உறுப்பு நாடுகளுக்கு இடையிலான வணிக நடைமுறைகள் குறித்து விவாதித்து முடிவு எடுப்பதே இம்மாநாட்டின் நோக்கம்.

இன்னும் சரியாகச் சொல்வதானால் தொழில் வளர்ச்சி பெற்ற நாடுகளும் அவற்றின் பன்னாட்டு நிறுவனங்களும் தங்கள் மறுகாலனியாதிக்கத்தை விரிவுபடுத்தி, மூன்றாம் உலக நாடுகளின் இயற்கை வளங்களையும், மக்களின் உழைப்பையும் மலிவு விலையில் சுரண்டுவதற்கான வழிமுறைகளை வகுப்பதே இம்மாநாடுகள் நடத்தப்படுவதன் உண்மையான நோக்கமாகும்.

அய்க்கிய நாடுகள் மன்றத்தில் 193 நாடுகள் உள்ளன. இவற்றுள், தொழில் வளர்ச்சி பெற்றுள்ள 35 நாடுகள் தவிர, மற்ற நாடுகள் மூன்றாம் உலக நாடுகள் எனப்படுகின்றன. இந்த 35 நாடுகளில் ஆசியாவில் உள்ள நான்கு நாடுகள் தவிர, மற்றவை வடஅமெரிக்காவும் மேற்கு அய்ரோப்பிய நாடுகளுமாகும். உலக மக்கள் தொகையில் 20 விழுக்காடு மக்களைக் கொண்ட இந்நாடுகள் உலக வருவாயில் 80 விழுக்காட்டைப் பெறுகின்றன. உலக மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கு மக்களைக் கொண்டுள்ள இந்தியாவும், சீனாவும் மூன்றாம் உலக நாடுகளின் பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

அர்ஜென்டைனாவில் திசம்பரில் நடைபெற்ற மாநாட்டில், மூன்றாம் உலக நாடுகளின் அரசுகள், உணவு தானியங் களுக்குக் குறைந்தபட்ச ஆதரவு விலையை (Minimum Support Price - MSP) ஆண்டுதோறும் நிர்ணயிப்பது, அதன் அடிப்படையில் உழவர்களிடம் கொள்முதல் செய்வது, தானியங்களைச் சேமித்து வைப்பது, குறைந்த விலையில் பொது விநியோக முறையில் மக்களுக்கு வழங்குவது, இவற்றுக்காக அரசுகள் மானியத் தொகையைச் செலவிடுவது ஆகியவற்றைக் கைவிட வேண்டும். ஏனெனில் இவை உலக வணிக அமைப்பின் வேளாண்மை குறித்த ஒப்பந்தத்திற்கு (Agreement on Agriculture - AoA) எதிரானவை; வணிகக் குலைவு (Trade - distarting) நடவடிக்கைகள் என்று தொழில் வளர்ச்சி பெற்ற நாடுகள் வலியுறுத்தின.

ஆனால் இந்தியா - சீனாவின் தலைமையிலான 120க்கும் மேற்பட்ட மூன்றாம் உலக நாடுகள், தங்கள் நாட்டு



*அரசு, உழவர்களிடம் தானியங்களைக் கொள்முதல் செய்து, சேமித்து வைத்து, நியாய விலைக் கடைகள் மூலம் வழங்குவதைக் கைவிட வேண்டும் என்று இந்தியாவைப் பணக்கார நாடுகள் வற்புறுத்துகின்றன.*

மக்களின் உணவுப் பாதுகாப்பு, உழவர்களின் வாழ்வாதாரம் ஆகியவற்றைப் பேணுவதற்காக உணவு தானியங்களின் கொள்முதல் - சேமிப்பு - பொது விநியோகம் முதலான நடவடிக்கைகளைக் கைவிட முடியாது என்று உறுதியுடன் மறுத்தன. மேலும் தொழில் வளர்ச்சி பெற்ற பணக்கார நாடுகள் 160 பில்லியன் டாலர் (ரூ.10.72 இலட்சம் கோடி) தொகையை ஆண்டுதோறும் வேளாண் மானியமாக அளிப் பதை முதலில் நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தின.

இந்தியாவில் 60 விழுக்காடு மக்கள் வேளாண்மைத் தொழிலைச் சார்ந்து வாழ்கின்றனர். வறுமை நிலையில் இருக்கும் 85 கோடி மக்கள் தங்கள் உணவுத் தேவைக்காக நியாய விலைக் கடைகளையே பெரிதும் நம்பி உள்ளனர். இவ்வாறு பல கோடி மக்களின் வாழ்க்கையைப் பாதிக்கக் கூடிய செய்தி உலக வணிக அமைப்பு மாநாட்டில் விவாதிக் கப்பட்டது பற்றி 'தி இந்து' ஆங்கில நாடு தவிர, "தமிழ் - தி இந்து" நாளேடு உள்ளிட்ட தமிழ் நாளேடுகளில் செய்தி வெளியிடப்படவில்லை. தொலைக்காட்சிகளின் செய்திகளிலோ, விவாதங்களிலோ இது இடம்பெறவில்லை என்பது ஊடகங் களின் சமூகப் பொறுப்பற்ற தன்மையையே காட்டுகிறது.

உலக வணிக அமைப்பின் தாய் அமைப்பான 'காட்' எனப்பட்ட "ணிகம் மற்றும் காப்பு வரி குறித்த பொது ஒப்பந்தம்" (General Agreement on Trade and Tariff - GATT) என்கிற அமைப்பு 1947ஆம் ஆண்டு அமெரிக்காவின் தலை மையிலான பணக்கார முதலாளிய நாடுகளின் முன்முயற்சி யால் உருவாக்கப்பட்டது. இரண்டாம் உலகப் போரின் முடிவில் சோவியத் நாடு பெரும் வல்லரசாக உருவானது. பல கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் சோசலிச ஆட்சி ஏற்பட்டது. அதனால் தொழில் வளர்ச்சி பெற்றிருந்த முதலாளிய நாடுகள், தங்கள் சந்தை ஆதிக்கத்தையும் சுரண்டலையும் நிலைநாட்டுவதற்காகவே காட் அமைப்பை ஏற்படுத்தின.

1970களில் பெட்ரோலிய எண்ணெய் விலை உயர்வாலும், தேசிய இனங்களின் எழுச்சிப் போராட்டங்களாலும் முதலாளிய உற்பத்தி நெருக்கடிகளைச் சந்தித்தது. எனவே 1980களில் முதலாளியம், உற்பத்தியில் புதிய தொழில்நுட்பங்களைப் புகுத்தியது. சோவியத் நாட்டில் சோசலிச நடைமுறைகளில் சரிவும் முதலாளிய ஆதரவுப் போக்கும் ஏற்பட்டன. இந்த அரசியல், பொருளாதாரச் சூழலில் அமெரிக்காவின் தலைமையிலான தொழில் வளர்ச்சி பெற்ற முதலாளிய நாடுகள் மூன்றாம் உலக நாடுகளில் தங்கள் பொருளாதார ஆதிக்கத்தையும் சுரண்டலையும் தங்குதடையின்றி விரிவுபடுத்துவதற்காக 'காட்' அமைப்பைப் பயன்படுத்தத் திட்டமிட்டன.

இதற்காக, 1986இல் தென்அமெரிக்க நாடான உருகுவேயில் காட் அமைப்பில் உள்ள நாடுகளுடன் வணிகம் தொடர்பான விதிகளில் மாற்றம் செய்வது குறித்து, பேச்சுவார்த்தை தொடங்கியது. இதை அடுத்து, 1990இல் சோவியத் நாட்டில் சோசலிச ஆட்சி முறை வீழ்ச்சியுற்றதுடன், 15 தேசிய இனங்களைக் கொண்ட நாடுகளாகச் சிதறுண்டது. உலக அரங்கில் எல்லாத் தளங்களிலும் அமெரிக்காவுக்குக் கடும் போட்டியாக இருந்த சோவியத் நாட்டின் வீழ்ச்சியால் அமெரிக்கா ஒற்றை அதிகார ஏகாதிபத்தியமாக உருப்பெற்றது. அதனால் காட் ஒப்பந்த விதிகள் அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனங்களில் செயல் தலைவர்களால் (CEOs) முதலாளிய நிறுவனங்களின் நலன்களுக்கு ஏற்ப வகுக்கப்பட்டன. காட் ஒப்பந்தம் 1994இல் ஏற்கப்பட்டது. 1995 சனவரி 1 முதல் காட் ஒப்பந்தம் உலக வணிக அமைப்பு என்ற பெயரில் செயல்பாட்டுக்கு வந்தது.

உலக வணிக அமைப்பின் விதிகள் சுருக்கமாக, தாராளமயம், தனியார் மயம், உலக மயம் என்று கூறப்படுகின்றன. இதன்படி மூன்றாம் உலக நாடுகள் தங்கள் நாடுகளின் பொருளாதார நடவடிக்கைகள் மீது கொண்டுள்ள கட்டுப்பாடுகளைக் கைவிட வேண்டும். எல்லாத் துறைகளிலும் தனியார் மயத்தை அனுமதிக்க வேண்டும். தனியார் மயமும், சந்தையில் தடையற்ற போட்டியும் உற்பத்தியைப் பெருக்கும்; தரமான, விலைகுறைவான பொருள்களைக் கிடைக்கச் செய்யும்; தொழில்கள் வளர்ச்சியடைவதால் வேலை வாய்ப்புப் பெருகும்; நாட்டின் வளர்ச்சி அதிகரிக்கும் என்று உலக வணிக அமைப்பின் புதிய பொருளாதாரக் கொள்கை கூறியது.

இந்தியாவில் எல்லாத் துறைகளும் தனியாருக்குத் திறந்துவிடப்பட்டன. தற்போது கல்வியில் 50 விழுக்காடும் மருத்துவத்தில் 70 விழுக்காடும் தனியாரிடம் இருக்கின்றன. கல்வியும் மருத்துவமும் இலவயமாக அளிக்கப்பட வேண்டியது மக்கள் நல அரசின் (Welfare State) கடமையாகும். ஆனால் இவை தனியாரின் கொள்ளைக்குத் திறந்து விடப்பட்டுள்ளன. அதுபோல் வேளாண்மையையும் தனியாரின் கொள்கைக்குத் திறந்துவிட வேண்டும் என்று உலக வணிக அமைப்பின் அர்ஜென்டைனா மாநாட்டில் பணக்கார நாடுகள் வலியுறுத்தின.



*85 கோடி மக்களை பட்டினியில் இருந்து காக்கும் நியாய விலைக் கடைகள்*

1994இல் காட் ஒப்பந்தத்தில் வேளாண்மை புதியதாகச் சேர்க்கப்பட்டது. வேளாண்மை குறித்த ஒப்பந்தத்தில், வடஅமெரிக்கா, மேற்கு அய்ரோப்பிய நாடுகள் போன்ற தொழில் வளர்ச்சி பெற்ற நாடுகள், அந்நாடுகளின் வேளாண்மைக்கு அளிக்கும் மானியங்கள் வணிகக் குலைவு அல்லாதவை (Non-trade distorting) என்று வகைப்படுத்தப்பட்டன. அந்நாடுகளில் பயிர்களின் உற்பத்திச் செலவில் 40 விழுக்காடு அளவுக்கு வெவ்வேறு பெயர்களில் அரசு நிதி உதவி செய்கிறது. வடஅமெரிக்காவில் 2 விழுக்காட்டினர், அய்ரோப்பிய நாடுகளில் 5 முதல் 10 விழுக்காட்டினர் மட்டுமே வேளாண் தொழிலில் ஈடுபட்டுள்ளனர் என்பது இங்கு நினைவில் கொள்ளப்பட வேண்டியதாகும். எனவே இந்நாடுகளில் வணிகத்திற்கான வேளாண்மை என்ற நிலைதான் இருக்கிறது.

ஆனால் இந்தியா உள்ளிட்ட மூன்றாம் உலக நாடுகளில் 50 விழுக்காட்டிற்கும் மேற்பட்ட மக்கள் வேளாண் தொழிலைச் சார்ந்து வாழ்கின்றனர். எனவே இந்நாடுகளில் வேளாண்மை என்பது மக்களின் வாழ்வாதாரத்திற்கானதாக இருக்கிறது. ஆனால் இந்நாடுகளில் 1986-88களில் ஓராண்டில் மொத்த விளைச்சல் மதிப்பில் பத்து விழுக்காடு அளவுக்கு மட்டுமே வேளாண்மைக்கும் உணவுப் பாதுகாப்புக்கும் மானியம் தரவேண்டும் என்று காட் ஒப்பந்தம் கூறுகிறது. இந்த மானியம் வணிகத்தைக் குலைக்கும் மானியம் என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் 1986இல் நிலவிய விலையில் பத்து விழுக்காடு என்று மதிப்பிடப்பட்ட தொகையின் அளவுக்கு மட்டுமே 2017ஆம் ஆண்டிலும் இந்தியாவின் மானியத் தொகை இருக்க வேண்டும் என்று உலக வணிக அமைப்பு வலியுறுத்துகிறது. கடந்த முப்பது ஆண்டுகளில் இடுபொருள்கள் விலையும், வேளாண் தொழிலாளர்களின் கூலியும் பல மடங்கு உயர்ந்திருக்கிறது. அதனால் 1986இல் அளித்த மானியத் தொகையைவிட அதிகமாக மானியத்தை இந்தியாவும் மற்ற நாடுகளும் அளிக்க வேண்டியுள்ளது.

1999இல் அமெரிக்காவின் சியாட்டில் நகரில் உலக வணிக அமைப்பின் அமைச்சர் நிலையிலான மாநாடு

கூட்டப்பட்டது. உலக வணிக அமைப்பின் விதிகள் உழவர்கள், தொழிலாளர்கள் முதலான உழைக்கும் மக்களுக்கு எதிராக இருக்கின்றன என்று கூறி பல இலட்சம் பேர் சியாட்டில் நகரில் மாநாடு நடைபெறவிருந்த இடத்தை முற்றுகையிட்டனர். அதனால் அம்மாநாட்டை நடத்த முடியாத நிலை ஏற்பட்டது. எனவே 2001இல் அரபு நாடுகளில் ஒன்றான கத்தாரின் தலைநகரான தோஹாவில் உலக வணிக அமைப்பின் மாநாடு நடந்தது. தோஹா நகருக்கு எளிதில் எவரும் வரமுடியாது என்பதால் மாநாடு அங்கு நடத்தப்பட்டது. சியாட்டில் நகரில் ஏற்பட்ட எதிர்ப்புப் போராட்டத்தின் விளைவாக தோஹா மாநாட்டில் மூன்றாம் உலக நாடுகளின் கோரிக்கைகள் சில ஏற்கப்பட்டன. இதன்படி மூன்றாம் உலக நாடுகளின் வணிகநலன் தொடர்பான கோரிக்கைகளை முதலில் விவாதித்து முடிவு செய்வது என்று தீர்மானிக்கப்பட்டது. இதுவே தோஹா வளர்ச்சித் திட்டம் எனப்படுகிறது.

2017 திசம்பரில் அர்ஜென்டைனாவில் நடைபெற்ற மாநாட்டில் பணக்கார நாடுகள், இணைய வணிகம் (e-commerce) முதலீட்டை ஊக்குவித்தல் முதலானவை குறித்து விவாதிக்க வேண்டும் என்று கோரின. ஆனால் இந்தியா, சீனா உள்ளிட்ட 120 நாடுகள் தோஹா வளர்ச்சித் திட்டம் குறித்த பேச்சுவார்த்தையில் முடிவு ஏற்படாதவரையில் புதிய விடயங்கள் குறித்து 2019இல் நடைபெறும் மாநாட்டில் பேசலாம் என்று தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

மூன்றாம் உலக நாடுகள் 1986இல் நிர்ணயிக்கப்பட்ட பத்து விழுக்காடு தொகைக்குமேல் மானியம் வழங்குவதால் உலக வணிக அமைப்பில், தகராறுகளைத் தீர்க்கும் மன்றத்தில் (Dispute Settlement Mechanism) வழக்குத் தொடுக்கப் போவதாக 2013இல் இந்தோனேசியாவின் பாலித்தீவில் நடந்த மாநாட்டில் பணக்கார நாடுகள் மிரட்டின. இந்தியா போன்ற நாடுகளின் அரசுகள் தானியங்களைக் கொள்முதல் செய்து சேமிக்கும் நடைமுறையை அடியோடு கைவிட வேண்டும் என்று வலியுறுத்தின.

இதை மூன்றாம் உலக நாடுகள் கடுமையாக எதிர்த்தன. பணக்கார நாடுகள் அளித்துவரும் 160 பில்லியன் டாலர் மானியத்தை முதலில் நிறுத்த வேண்டும் என்று போர்க்குரல் எழுப்பின. இருதரப்பையும் சமரசம் செய்யும் வகையில் “இடைக்காலத் தீர்வு விதி” (Peace Clause) என்பது உருவாக்கப்பட்டது. இதன்படி, ஏற்கெனவே கொள்முதல் - சேமிப்பு நடைமுறையைக் கொண்டுள்ள நாடுகள் அவ்வாறே தொடர்ந்து செய்து கொள்ளலாம். புதியதாக எந்த நாடும் கொள்முதல்-சேமிப்பு நடைமுறையை மேற்கொள்ளக்கூடாது. மேலும் சேமித்து வைத்துள்ள தானியத்திலிருந்து ஏற்றுமதி செய்யக்கூடாது. 2017க்குள் இடைக்காலத் தீர்வு விதியை நீக்கும் வகையில் நிரந்தரத் தீர்வு (Permanent Solution) காணப்பட வேண்டும் என்று பாலி மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது. 2015இல் நைரோபியில் நடந்த மாநாட்டிலும் நிரந்தரத் தீர்வு எட்டப்படவில்லை. 2017இல் அர்ஜென்டைனா மாநாட்டிலும் இதுகுறித்து முடிவு எடுக்க முடியவில்லை.

அர்ஜென்டைனா மாநாட்டில் அமெரிக்கா, சீனாவும் இந்தியாவும் மொத்த உள்நாட்டு உற்பத்தியிலும் (GDP) பொருளாதார வளர்ச்சி விகிதத்திலும் உலகில் முன்னணியில் உள்ளன; அதனால் இடைக்காலத் தீர்வு விதி அவற்றுக்குப் பொருந்தாது என்று வாதிட்டது. மூன்றாம் உலக நாடுகளின் கோரிக்கைகளுக்கு இந்தியாவும் சீனாவும் தலைமை தாங்குவதால் இவ்விரு நாடுகளையும் தனிமைப்படுத்த வேண்டும் என்கிற பிரித்தாளும் ஏகாதிபத்திய சூழ்ச்சியே இது! உடனே, இந்தியாவில் 60 கோடி மக்கள் வறுமையில் இருப்பதாக இந்தியாவின் வணிக அமைச்சர் சுரேஷ் பிரபு அலறினார். உலக அரங்குகளில் அமெரிக்கா தொடர்ந்து இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டையே எடுத்து வருகிறது. ஆயினும் மோடி, அமெரிக்காவை இந்தியாவின் சிறந்த நட்பு நாடு என்று கூறிவருகிறார்.

வேளாண்மையில் விளைச்சல் என்பது மழை, தட்ப-வெப்ப நிலைகளையே பெரிதும் சார்ந்திருக்கிறது. அதனால் உழவர்களின் வருவாய் ஊசலாட்டமாகவே இருந்து வருகிறது. இந்தியாவில் உழவர்களில் 85 விழுக்காட்டினர் 5 ஏக்கருக்கும் குறைவாக நிலம் வைத்துள்ள சிறு, குறு உழவர்களாவர். இவர்கள் தங்கள் விளைபொருள்களை நல்ல விலை கிடைக்கும் வரையில் சேமித்து வைத்திருந்து விற்கமுடியாத நிலையில் இருப்பவர்கள். அறுவடை முடிந்ததும், பயிரிடுவதற்காக வாங்கிய கடனை அடைப்பதற்காக விளைபொருளை உடனடியாக விற்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பவர்கள். அறுவடைக்காலத்தில் தனியார் வியாபாரிகள் மிகக் குறைந்த விலையில் நெல், கோதுமையை வாங்கும் நிலையைத் தடுக்கவும், குறைந்த அளவு வருமானமேனும் உழவர்களுக்குக் கிடைப்பதை உறுதிப்படுத்தவும் நடுவண் அரசு ஆண்டுதோறும் நெல், கோதுமை, கரும்பு மற்றும் சில பயிர்களுக்குக் குறைந்தபட்ச ஆதரவு விலையை (Minimum Support Price - MSP) அறிவித்து வருகிறது.

அரசு அறிவிக்கின்ற விலையில் நெல், கோதுமை ஆகியவற்றை நடுவண் அரசு, இந்திய உணவுக் கழகம் (Food Corporation of India - FCI) மூலம் ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட அளவுக்குக் கொள்முதல் செய்து, கிடங்குகளில் சேமித்து வைக்கிறது. இது அறுவடைக் காலங்களில் நெல், கோதுமை ஆகியவற்றின் விலையைத் தனியார் வியாபாரிகள் மிகவும் குறைக்கவிடாமல் தடுக்கிறது. அதேசமயம் தனியார்தானிய விற்பனைச் சந்தையிலும் ஓரளவுக்குச் சீரான விலை இருக்குமாறு செய்கிறது. இது உழவர்கள் தங்கள் விளைபொருளைத் தனியார் சந்தையில் விற்பனை செய்தாலும் குறைந்த அளவு வருவாய் பெறும் நிலையை உறுதி செய்கிறது.

1943இல் வங்காளத்தில் ஏற்பட்ட கடும் பஞ்சத்தில் 20 இலட்சம் மக்கள் மாண்டனர். அப்போது போதிய உணவு தானியம் இருப்பு இருந்தும் அதை மக்களுக்கு வழங்குவதற்

கான கொள்முதல் ஏற்பாடோ, பொது விநியோக முறையோ இல்லாததால்தான் மக்கள் மாண்டனர் என்று பொருளியலுக் காக நோபல் பரிசு பெற்ற அமர்த்தியா சென் கூறுகிறார். எனவே மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யவும், உழவர்களுக்குக் குறைந்த அளவிலேனும் வருவாய் கிடைக்கவும் அரசு தானியங்களைக் கொள்முதல் செய்து, பொது விநியோக முறையில் வழங்கும் ஏற்பாடு மிகவும் இன்றியமையாததாக இருக்கின்றது. ஆனால் உலக வணிக அமைப்பின் மூலம் தொழில் வளர்ச்சி பெற்ற நாடுகள் இந்தியாவில் இந்த ஏற்பாட்டை அடியோடு ஒழித்து, பன் னாட்டு நிறுவனங்களின் ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவர முயல்கின்றன.

1956இல் இந்தியாவில் கடுமையான வறட்சியால் பெரும் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டது. அப்போது இதுகுறித்து ஆராய அமைக்கப்பட்ட அசோக் மேத்தா குழு, அரசு, அறுவடைக் காலங்களில் உழவர்களிடம் தானியங்களைக் கொள்முதல் செய்து, சேமித்து வைத்து, பற்றாக்குறைக் காலத்தில் அதைப் பொதுச் சந்தையில் விற்று, கேட்பு-வழங்கல் (Demand - Supply) சமநிலையைப் பேண வேண்டும் என்று பரிந்துரைத்தது. இதற்காக இந்திய உணவுக் கழகத்தை ஏற்படுத்தும் சட்டம் 1964இல்தான் இயற்றப்பட்டது. இந்திய உணவுக் கழகம் 1965 சனவரி முதல் நாள் தஞ்சை மாவட்டத்தில் முதன்முதலாகக் கொள் முதல் செய்யத் தொடங்கியது. இந்திய உணவுக் கழகம், கோதுமைக் கொள்முதலில் 90 விழுக்காடும் நெல் கொள் முதலில் 75 விழுக்காடும் பஞ்சாப், அரியானா, மேற்கு உத்தரப்பிரதேசம் ஆகிய பகுதிகளில் கொள்முதல் செய்கிறது. இந்த இருப்பிலிருந்துதான் இந்தியா முழுவதற்கும் பொது விநியோகத் திட்டத்திற்கான கோதுமையும் அரிசியும் வழங்கப் படுகிறது.

உலக வணிக அமைப்பின் மாநாடுகளில் இந்திய அரசு, நாட்டின் உணவுக் பாதுகாப்புக்காகக் கொள்முதல் செய்வ தையும், சேமிப்பதையும், பொது விநியோக முறையில் வழங்குவதையும் கைவிட முடியாது என்று கூறிவருகின்ற போதிலும், இந்த நடைமுறைகளைப் படிப்படியாகக் கைவிடு வதற்கான செயல்களைக் கடந்த இருபது ஆண்டுகளாக மேற்கொண்டு வருகிறது. நடுவண் அரசில் காங்கிரசு இருந்தாலும், பா.ச.க. இருந்தாலும் தாராள மயம், தனியார் மயம், உலக மயம் என்கிற கொள்கையைப் போட்டிப் போட்டுக் கொண்டு பின்பற்றுகின்றன.

1997இல் பொது விநியோகத் திட்டத்தில் வறுமைக் கோட்டுக்குமேல் (APL) இருப்பவர்களுக்கு அதிக விலையிலும் வறுமைக்கோட்டுக்குக்கீழ் (BPL) இருப்பவர்களுக்குக் குறைந்த விலையிலும் அரிசி அல்லது கோதுமையை வழங்கும் நிலை ஏற்படுத்தப்பட்டது. வறுமைக்கோட்டுக்கு மேல் இருப்பவர்கள் தரமற்ற தானியத்தை அதிக விலை கொடுத்து நியாய விலைக் கடையில் வாங்குவதைவிட, இன்னும் கூடுதல் விலை கொடுத்து தரமான அரிசியைத் தனியார் கடையில் வாங்கிக் கொள்ளும் நிலைக்குத் தள்ளப் பட்டனர். இதன்மூலம் பொது விநியோகத்தின்கீழ் வழங்கும் தானியத்தின் அளவைக் குறைக்கும் நோக்கம் நிறை வேறியது.

அதேபோல், நடுவண் அரசு, கொள்முதல் செய்யும் அளவைக் குறைத்து வருகிறது. அறுவடைக் காலங்களில் பெருமுதலாளிய நிறுவனங்கள் கொள்முதல் செய்வதை அனுமதிக்கிறது. அரசு கொள்முதல் நிலையங்கள் இல்லாத பகுதிகளில் இயங்கிவரும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் தனியார் வியாபாரிகளின் ஆதிக்கத்தில் சென்று விட்டதை அரசு தடுக்கவில்லை. இதனால் அரசு அறிவிக்கும் குறைந்தபட்ச ஆதரவு விலையை விடக் குறைந்த விலையில்தான் நெல்லை உழவர்கள் விற்று வருகின்றனர்.

2013இல் இந்திய அரசு உணவுப் பாதுகாப்புச் சட்டத்தை இயற்றியது. இதன்படி இந்திய அளவில் 67 விழுக்காட்டி னருக்கு- அதாவது கிராமப்புறங்களில் 75 விழுக்காட்டினருக் கும் நகர்ப்புறங்களில் 50 விழுக்காட்டினருக்கும் நியாய விலைக் கடைகளில் அரிசி கிலோ ரூ.3, கோதுமை ரூ.2, சிறுதானியங்கள் ரூ.1 விலையில் ஒருவருக்கு 5 கிலோ வீதம் வழங்கப்படும். 2016ஆம் ஆண்டில் எல்லா மாநிலங்களிலும் இது நடைமுறைக்கு வந்தது. இச்சட்டத்தின்படி, மூன்று ஆண்டுகளுக்கு மட்டுமே இந்த விலையில் தானியங்கள் வழங்கப்படும். அதன் பிறகு நடுவண் அரசு கொள்முதல் செய்யும் விலையில் வழங்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. அதாவது நியாய விலைக் கடையில் வாங்குவோர் வெளிச் சந்தையில் வாங்கும் நிலையை உருவாக்கும். அந்நிலையில் அரசு கொள்முதல் செய்வதோ, சேமித்து வைப்பதோ தேவை யற்றதாகிவிடும். குறைந்தபட்ச ஆதரவு விலை அறிவிப்பதும் நிறுத்தப்படும். உணவு தானியச் சந்தை தனியாரின் முழு ஆதிக்கத்திற்குச் சென்றுவிடும்.


அந்நிலையில், உலக அளவில் உணவு தானிய வணி கத்தில் 80 விழுக்காட்டைக் கொண்டுள்ள கார்கில், மான் சான்ட்டோ, டு-பாண்ட் போன்ற அமெரிக்க நிறுவனங்கள் குறைந்த விலையில் அரிசி, கோதுமையை இந்தியாவில் இறக்குமதி செய்யும். அமெரிக்காவில் உற்பத்திச் செலவு குறைவு, ஆனால் இந்தியாவில் உற்பத்திச் செலவு அதிகம். அதனால் இந்திய உழவர்கள் தங்கள் விளைபொருளை விற்க முடியாமல் தங்கள் நிலங்களைக் கார்ப்பரேட் நிறுவனங் களுக்கு விற்று, அதில் கூலிகளாக வேலை செய்யும் நிலை ஏற்படும். மோடி அரசு இந்த ஒப்பந்த வேளாண்மையை ஊக்குவிக்கிறது. வேளாண்மை முற்றிலும் தனியார் மயமா னதும், விளைபொருள்களின் விலை உயர்த்தப்படும். மக்க ளால் வாங்கி உண்ண முடியாத நிலை ஏற்படும். எனவே பொதுவிநியோகத் திட்டமும், அரசு கொள்முதலும், சேமிப்பும் அரசால் கைவிடப்படக்கூடிய எல்லா நடவடிக்கைகளையும் எதிர்க்க வேண்டியது உயிர் வாழ்தலுக்கான போராட்ட மாகும்.



தமிழ்மண் பதிப்பகம்
உழை உயர் உதவு
புதுப் பொலிவுடன்
தொல்காப்பிய உரைத்தொகை
எழில்மிகு வடிவமைப்பில் வருகிறது
தமிழர் வாழ்வியல் இலக்கணத்தை வரையறுத்துக்கூறும் தொல்காப்பியத்திற்கு வெளிவந்துள்ள ஆய்வுக்கட்டுரைகள் - நுட்பக் குறிப்புகள் - பொருள் விளக்கங்கள் முதலான அனைத்தையும் அரு முயற்சியோடு தொகுத்து வழங்கி உள்ளது இத் தொகுப்பு.
பதிப்பாசிரியர்
முதுமுனைவர் இரா. இளங்குமரனார்
இணைப் பதிப்பாசிரியர்
முனைவர் கல்பனா சேக்கிழார்
முன்பதிவுத் திட்டம்
09.01.2018 வரை
முந்தமிழ் நூல்பதிப்பு முன்னோடி
.வை.தாமோதரம்பிள்ளை
கப்பலோட்டிய தமிழன்
வ.உ.சிதம்பரனார்
தமிழ்ப் பாடத்திட்ட முன்னோடி
கா. நமச்சிவாய முதலியார்
இலக்கணக்கடல்
சி. கணேசையர்
கரந்தைக் கவியரசு
இரா.வேங்கடாசலம் பிள்ளை
பல்கலைச்செல்வர்
தெ.பொ.மீனாட்சிசுந்தரன
தொல்காப்பிய உரைத்தொகை
நூல்கள் 20
மொத்த விலை
9,030/-
முன்பதிவுத் திட்டம்
09.01.2018 வரை
சலுகை விலை
5,400/-

# அப்பாத்துரையம்

தொகுதிகள் 48



மொத்த விலை **17,300/-**

சலுகை விலை **8,650/-**


# செந்தமிழ்ச் சொற்பொருட் களஞ்சியம்

**(அ முதல் வௌ வரை)**

தொகுதிகள் 10



ஆசிரியர் :-
முதுமுனைவர்
**இரா. இளங்குமரனார்**



மொத்தவிலை **5,000/-**

சலுகை விலை **3,750/-**

அடுத்து வெளிவர இருப்பது... தமிழர் பண்பாட்டு அடையாளமாகத் திகழும்

# சங்க இலக்கியக் களஞ்சியம்





முன்புதை வுண்டளம்
முத்தமிழ்ச் சிறப்பினை !
மன்பதைக் குணர்த்தல்எம்
மன்னுயிர் வாழ்க்கை !

**நூல் வேண்டுவோர் :-**
தமிழ்மண் பதிப்பகம் பெயரில் வரைவோலை (D.D.) எடுத்துக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம்
அனுப்பும் செலவு தனி (காசோலை தவிர்க்கவும்)

**மின்வழிப் பணம் அனுப்பும் வழிமுறை**
THAMIZHMANN PATHIPPAGAM
Oriental Bank of Commerce,
T.Nagar, Chennai - 600 017
IFSC : ORBC 0100928.
Current A/c No.: 09281131000355.

2 சிங்காரவேலர் தெரு, தியாகராயர் நகர், சென்னை - 600 017. பேசி.044-24339030 - செல்.+91-94444 10654
மின்னஞ்சல்: elavazhagantm@gmail.com

# பார்ப்பனர்களில் நல்லவர்கள்?!

- இராமியா

"பார்ப்பனர்களில் நல்லவர்களே இல்லையா?" என்று கேட்பவர்கள் இருக்கிறார்கள். பார்ப்பனர்களை ஒட்டு மொத்தமாக எதிர்ப்பதன் / ஒதுக்குவதன் மூலம் அவர்களில் உள்ள நல்லவர்களின் சேவை கிடைக்காமல் போய் விடும் என்றும், அதனால் சமுதாயத்திற்குப் பேரிழப்பு ஏற்படும் என்றும் அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் இவ்வாறு கூறுபவர்கள் பார்ப்பன ஆதிக்கத்தை எதிர்த்து, ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களை அதிகாரப்படுத்தும் பணியைச் செய்த ஒரு பார்ப்பனரையும் வரலாற்றின் எந்தக் கால கட்டத்திலும் எடுத்துக் காட்டியது இல்லை.

பார்ப்பனர்களை / பார்ப்பன ஆதிக்கத்தை எதிர்த்து முதன் முதலாகப் போர்க் கொடி உயர்த்தி வரலாற்றில் முத்திரை பதித்தவர் புத்தரே. அப்படி அவர் போராடிய போது, அவர் பக்கம் நியாயம் இருக்கிறது என்று கூறி, அவருடன் சேர்ந்து, பார்ப்பன ஆதிக்கத்திற்கு எதிராக எந்த ஒரு பார்ப்பனரும் துணை நின்றது இல்லை. அவருடைய மறைவுக்குப் பின், புத்த மதத்தை ஆக்கிரமித்து, நாத்திகரான புத்தரைக் கடவுள் அவதாரம் ஆக்கி, அம் மதத்தின் புரட்சிகர அம்சங்களை எல்லாம் நீர்த்துப் போகச் செய்தனர்.

ஒரு பார்ப்பனர் கூட புத்தரின் மனித குலச் சமத்துவக் கொள்கையை ஏற்கவில்லை என்பது மட்டும் அல்ல; அதை எதிர்த்துப் பார்ப்பன அதிகாரத்தை நிலைகுலையாமல் பார்த்துக் கொள்வதிலேயே உறுதியாக இருந்தனர்.

கடவுள் மந்திரத்திற்குக் கட்டுப்பட்டவர்; மந்திரம் பார்ப்பனர்களுக்குக் கட்டுப்பட்டது; ஆகவே கடவுளைவிடப் பார்ப்பனர்களே உயர்நதவர்கள். ஆகவே, பார்ப்பனர்களுக்குத் தீங்கு இழைக்கக் கூடாது என்பது மட்டும் அல்ல; அவர்களுக்கு எந்த விதத்திலும் தீங்கு நேராமல் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளாமல் இருப்பதே கடவுளுக்கும் சமூகத்திற்கும் இழைக்கும் பெரும் பாவம் என்றும், அவ்வாறு செய்யாதவர்களைக் கடவுள் கடுமையாகத் தண்டிப்பார் என்றும் ஒரு மாய உருவை உருவாக்கி வைத்து இருந்தார்கள்.

கஜினி முகம்மது போன்ற இஸ்லாமியர்கள் படை எடுத்து வந்து இங்குள்ள செல்வங்களை எல்லாம் வாரிக் கொண்டு போனார்கள். செல்வங்கள் எல்லாம் பார்ப்பனர்களின் வசமே குவிந்து இருந்ததால், அவர்கள் பார்ப்பனர்களையே குறி வைத்துத் தாக்கி, துன்புறுத்தி, கவர்ந்து கொண்டு போனார்கள். பார்ப்பனர்களைத் தாக்குவதும், துன்புறுத்துவதும், அவர்களிடம் இருந்து செல்வங்களைக் கவர்வதுமான நிகழ்வுகள் தொடர்ந்து ஒவ்வொரு படை எடுப்பின் போதும் நடந்தன. அவ்வாறு பார்ப்பனர்களைத் துன்புறுத்திய இஸ்லாமியர்களுக்கு எந்தக் கேடும் நிகழவில்லை என்பது மட்டும் அல்ல; அவர்கள் மேலும் மேலும் வலிமையுடன் திரும்பத் திரும்பத் தாக்கியதையும் மக்கள் கண்டனர்.

பார்ப்பனர்களைத் துன்புறுத்தினால் அல்ல; அவர்களை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ளாமல் இருந்தாலே "சாமி கண்ணைக் குத்தி விடும்" என்று கட்டப்பட்டு வைத்து இருந்த மாய உரு (False Image) உடையத் தொடங்கி இருந்தது. இந் நிலை தொடர்ந்து இருந்தால் "பார்ப்பனர்கள் உயர்ந்தவர்கள்; அவர்கள் உயர்நிலை வேலைகளையே செய்ய வேண்டும்" என்ற வழக்கம் / எண்ணம் மறைந்து போயிருக்கும். அதிகாரம் கொண்ட வேலைகள் பார்ப்பனர்களுக்கு மட்டுமே தரப்பட வேண்டும் என்ற நிலை மாறி, அனைத்து வகுப்பு மக்களும் அனைத்து நிலை வேலைகளையும் செய்யும்படியான நிலை ஏற்பட்டு இருக்கும்.

ஆனால், இந்த நிகழ்ச்சிப் போக்கு நடந்து விடக் கூடாது என்று மிகத் தீவிரமாக யோசித்த இராமாநுஜர் வர்ணாசிரம அதர்மத்தைத் தளர விடாமல் காப்பதற்கு ஒரு உத்தியை வகுத்தார். அதன்படி பேச்சளவில் சாதி வேறுபாடு இல்லை என்றார். சில சூத்திரர்களைப் பார்ப்பனர்களாக ஏற்றுக் கொண்டார். ஆனால், திறமை இருக்கிறதோ இல்லையோ பார்ப்பனர்கள் உயர்நிலை வேலைகளில் அமர்த்தப்பட வேண்டும்; திறமை இருந்தாலும் சூத்திரர்கள் கீழ் நிலை வேலைகளையே செய்ய வேண்டும் என்ற வர்ணாசிரம அதர்மக் கோட்பாட்டில் சிறு கீறலும் விழுந்து விடக் கூடாது என்பதில் மிகவும் எச்சரிக்கையாக இருந்தார்; வெற்றியும் கண்டார்.

சரிந்துகொண்டு இருந்த வர்ணாசிரம அதர்மத்தைச் சரியாமல் தடுத்து மீண்டும் நிலை நிறுத்தியதால் இராமாநுஜரைப் புரட்சியாளர் என்றும் சீர்திருத்தவாதி என்றும் அவாள் சொல்வதில் வியப்பு ஏதும் இல்லை. ஆனால், பெரியாரின் வழியில் நடந்து கொள்வதாகச் சொல்லும் சிலர் அவரை "மதத்தில் புரட்சி செய்த மகான்" என்று கூறுவது விந்தையிலும் விந்தை.

இராமாநுஜர் ஒரு பக்கம் இருக்கட்டும். மனித நேயம் கொண்டவர்கள் பாராட்டாமல் இருக்கமுடியாதபடி செயல்பட்ட இராஜா ராம்மோகன் ராயை எடுத்துக் கொள்வோம். கணவன் இறந்தால் அவனை எரிக்கும் சிதையுடன் மனைவியையும் சேர்த்து உயிருடன் எரிக்கும் உடன் கட்டை (ஏறும் அல்ல) ஏற்றும் பழக்கத்தை ஒழித்தவர் அவர். அப்பேர்பட்ட அவரும், திறமை இல்லா விட்டாலும் பார்ப்பனர்களை உயர் நிலை வேலைகளில்தான் அமர்த்த வேண்டும்; திறமை இருந்தாலும் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் கீழ்நிலை வேலைகளைத்தான் செய்ய வேண்டும் என்ற வர்ணாசிரம அதர்மத்திற்கு எதிராக ஒன்றும் செய்யவில்லை.

பார்ப்பனர்களைப் பற்றிப் பெரியாருக்கும் காந்தியாருக்கும் நடந்த வாக்கு வாதத்தில் "பார்ப்பனர்களில் நல்லவர்கள் இருக்கிறார்களா?" என்ற வினாவிற்கு விடை தேடிய காந்தி

யார் நீண்ட நேரம் யோசித்த பின் கோபால கிருஷ்ண கோகலே இருப்பதாகக் கூறினார். அப்படிப்பட்ட கோபால கிருஷ்ண கோகலேயும், ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் துன்புறுத்தப்படக் கூடாது என்றுதான் போராடினாரே ஒழிய, வர்ணாசிரம அதர்மத்தைக் குலைத்து, ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களை அதிகாரப்படுத்தும் விதமாக, அனைத்து வகுப்பு மக்களும் அனைத்து நிலை வேலைகளையும் செய்ய வேண்டும் என்று கூறவே இல்லை.

சாதி ஒழிப்பு வீரராகத் தூக்கி நிறுத்திக் காட்டப்படும் பாரதியாரும் நீதிக் கட்சியினர் முன்வைத்த விகிதாச்சாரப் பிரதிநிதித்துவக் கொள்கையைக் கண்டு முகம் சுளித்தார். இதைப் பற்றிக் கருத்து சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்ட போது, அதை அப்புறம் பார்த்துக் கொள்ளலாம் என்று கூறி விட்டார். அது மட்டும் அல்லாமல் வர்ணாசிரம அதர்மத்தை வானளாவப் புகழ்ந்தும் உள்ளார். அவருடைய கருத்து ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களைத் துன்புறுத்தி வேலை வாங்கக் கூடாது என்பதுதான். திறமைக் குறைவான பார்ப்பனர்கள் உயர்நிலைகளில் அமர்த்தப்படக் கூடாது என்பதையே, திறமைமிகுந்த ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் உயர்நிலை வேலைகளில் அமர்த்தப்பட வேண்டும் என்பதையே அவர் விரும்பவில்லை. ஆனால், பார்ப்பனர் அல்லாத வ.உ.சி. முற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவராக இருந்தாலும், விகிதாச் சாரப் பிரதிநிதித்துவக் கொள்கையைத் தனது அரசியல் பெருஞ் சொல்லாகப் பிரகடனம் செய்தார்.

ஆங்கிலேயர்கள் இந்தியாவை விட்டு வெளியேறிய பின், பொதுவுடைமைக் கட்சியின் போராட்டங்கள் பலவற்றில் பார்ப்பனர்கள் பங்குகொண்டு பல ஈகங்களைப் புரிந்துள்ள னர். ஆனால், அவை யாவும் கூலி உயர்வுப் போராட்டங் களே ஒழிய, சமூக மாற்றப் போராட்டங்கள் அல்ல. முக்கிய மாக, திறமைக் குறைவான பார்ப்பனர்களைக் கீழ் நிலை வேலைகளைச் செய்வதில் இருந்து தப்ப வைக்கும், மற்றும் திறமை உள்ள ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களை உயர் நிலை வேலைகளுக்குச் செல்ல விடாமல் தடுக்கும் வர்ணாசிரம அதர்ம முறைக்கு எதிரான போராட்டங்கள் அல்லவே அல்ல. அப்படிப்பட்ட போராட்டங்களைப் பொதுவுடைமைக் கட்சிகள் முன் வைக்கவில்லை. அப்படி முன்வைத்தால் அப்பொழுது தான் அக்கட்சிகளில் உள்ள பார்ப்பனர்கள் நல்லவர்களா / புரட்சியாளர்களா என்று தெரிந்து கொள்ள முடியும்.

இன்னும் சில பார்ப்பனர்கள் இருக்கிறார்கள்; மருத்துவ மனைகளில் குருதிக்காகத் தவிப்போர்களுக்குக் குருதி கொடுத்து உயிர் காக்கும் பண்பாளர்கள். அப்படிப்பட்ட பண்பாளர்கள் பழகுவதற்கும் இனியவர்களாகவே இருப்பார் கள். ஆனால், வர்ணாசிரம அதர்மத்திற்கு எதிராகப் பேசி னால் அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியாது.

இப்படியாக எங்கெங்கு சுற்றினாலும், எப்படி எப்படிப் பார்த்தாலும் நல்லவர்கள், புரட்சியாளர்கள் என்று நினைக்கத் தோன்றும் பார்ப்பனர்கள் யாருமே வர்ணாசிரம அதர்மத் திற்கு எதிராக என்று வரும் போது பதுங்கிக் கொள்கிறார்கள்; குழப்புகிறார்கள்; முரண்டு பிடிக்கிறார்கள்; எதிர்த்துச் சீறு கிறார்கள்.

அனைத்து வகுப்பிலும் அனைத்து நிலைத் திறமை உடையவர்களும் இருக்கையில், உயர் நிலை வேலைகளில் பார்ப்பனர்களையும், அடுத்த நிலை வேலைகளில் ஒடுக்கப் பட்ட வகுப்பு மக்களையும் தேர்ந்தெடுப்பதால் பொதுப் போட்டி முறை திறமைசாலிகளைத் தேர்ந்தெடுக்கச் சற்றும் திற னற்றது என்பதை அவாளால் உள்வாங்க முடிவதே இல்லை.

இதை உள்வாங்கி விகிதாச்சாரப் பங்கீடு முறையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும், திறமைக் குறை வான பார்ப்பனர்கள் அதிகாரம் இல்லாத, ஊதியம் குறைந்த, உடல் உழைப்பு மிகுந்த வேலைகளைச் செய்வதில் இருந்து தப்ப முடியக் கூடாது என்பதிலும், திறமைசாலிகளான ஒடுக் கப்பட்ட வகுப்பு மக்கள் அதிகாரம் கொண்ட வேலைகளைப் பெறுவதில் உள்ள தடைகள் தகர்க்கப்பட வேண்டும் என்பதி லும் உறுதியாக நிற்கும் பார்ப்பனர்களைத் தான் நல்லவர்கள் என்று கூற முடியும். அப்படிப்பட்ட பார்ப்பனர்களுடன் சேர்ந்து பணியாற்ற முற்போக்கு உள்ளம் கொண்ட அனைவரும் ஆயத்தமாகவே உள்ளனர்.

## சென்னைப் பல்கலைக்கழக ஊடகவியல் துறை சார்பில் முற்றம் 9ஆம் ஆண்டு விழா



சென்னைப் பல்கலைக்கழக ஊடகவியல் துறை சார்பில் முற்றம் ஒன்பதாம் ஆண்டு விழா சென்னைப் பல்கலைக் கழக வளாகத்தில் 19.12.2017 செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்குத் தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கியது. பேராசிரியர் வீ. இரவீந்திரன் வரவேற்புரையாற்றினார். பறையிசை முதலில் இசைக்கப்பட்டது. சிறப்பு விருந்தினர் களாகக் கலந்து கொண்ட சென்னை உயர்நீதிமன்ற மேனாள் நீதிபதி அரி. பரந்தாமன், வே. ஆனைமுத்து, ஓவியர் ட்ராஸ்கி மருது ஆகியோருக்குச் சிறப்பு செய்யப்பட்டது. குழந்தைகளின் படைப்புகள் வெளியிடப்பட்டு அவர்களுக்குச் சிறப்பு செய்யப்பட்டது. மேனாள் அலுவலக ஊழியர்களுக்கு சிறப்பு செய்யப்பட்டது. கலைஞர்களுக்கு விருது வழங்கி மேனாள் நீதிபதி அரிபரந்தாமன் மற்றும் வே.ஆனைமுத்து, ஓவியர் ட்ராஸ்கி மருது ஆகியோர் சிறப்புரையற்றினர். காளிஸ்வரன் கலைக் குழுவினரின் பறை இசையும் சிலம்பாட்டமும் நடைபெற்றது. இரவு 8.30 மணிக்கு விழா இனிதே நிறைவடைந்தது.

# உடுமலை சங்கர் கொலை வழக்கின் தீர்ப்பு சாதி வெறியர்களுக்கு ஒரு எச்சரிக்கை

- க. முகிலன்

வன்கொடுமைத் தடுப்பு வழக்குகளுக்கான திருப்பூர் சிறப்பு நீதிமன்றம் 12.12.2017 அன்று, உடுமலை சங்கர் ஆணவப் படுகொலை வழக்கில், கவுசல்யாவின் தந்தை சின்னசாமி உள்ளிட்ட ஆறு பேருக்கு மரண தண்டனையும், ஒருவருக்கு ஆயுள் தண்டனையும், மற்றொருவருக்கு அய்ந் தாண்டுகள் கடுங்காவல் தண்டனையும் அளித்து, தீர்ப்பு வழங்கியுள்ளது. குற்றம் சாட்டப்பட்ட 11 பேரில் 8 பேருக்குத் தண்டனை வழங்கப்பட்டது. கவுசல்யாவின் தாய் அன்ன லட்சுமி உட்பட மூவர் குற்றமற்றவர்கள் என்று விடுதலை செய்யப்பட்டனர்.

தமிழகத்தைவிட வடஇந்தியாவில் சாதி ஆணவப் படுகொலைகள் அதிக அளவில் நடக்கின்றன. இந்தியாவி லேயே ஆணவப் படுகொலை வழக்கில் குற்றவாளிகளுக்கு இப்போதுதான் முதன்முறையாக மரண தண்டனை வழங் கப்பட்டுள்ளது. எத்தகைய கொடிய குற்றத்துக்கும் மரணத் தண்டனை விதிக்கக்கூடாது என்பதே நம் நிலைப்பாடாகும். தமிழகத்தில் கடந்த சில ஆண்டுகளில் நாற்பதுக்கும் மேற்பட்ட சாதி ஆணவப் படுகொலைகள் நடந்திருப்பதாகச் சமூக ஆர்வலர்கள் கூறுகின்றனர். இவற்றுள் தமிழக அளவில் முதன்முதலாகப் பேசப்பட்டது முருகன்-கண்ணகி இருவரின் ஆணவப் படுகொலையாகும். இருவரும் விருத்தாசலத்தைச் சேர்ந்தவர்கள். தலித் வகுப்பைச் சேர்ந்த முருகன், வன்னியர் சாதியைச் சேர்ந்த கண்ணகியைத் திருமணம் செய்துகொண் டார். சாதி ஆதிக்க வெறியர்கள் இருவரையும் வெட்டிக் கொன்றனர். இது 2003ஆம் ஆண்டில் நடந்தது. இந்த வழக்கு கிணற்றில் போட்ட கல்லாக இருக்கிறது.

2012இல் தருமபுரி மாவட்டம், நாயக்கன்கொட்டாய் காலனியைச் சேர்ந்த தலித் இளைஞரான இளவரசன், அதே ஊரின் வன்னியர் சாதியைச் சேர்ந்த திவ்யாவைத் திருமணம் செய்து கொண்டார். இதனால் மூண்ட சாதிப் பகையால், தாழ்த்தப்பட்டவர்களின் வீடுகள் கொளுத்தப்பட்டன. உடை மைகள் சூறையாடப்பட்டன. 2013 சூலை 4 அன்று தருமபுரி தொடர்வண்டி நிலையம் அருகில் இளவரசன் இறந்து கிடந்தார். இளவரசனுக்கும் எனக்கும் எந்த உறவும் இல்லை என்று திவ்யாவிடம் வாக்குமூலம் பெறப்பட்டு. இளவரசன் சாவு தற்கொலையே என்று காவல்துறையினர் இந்த வழக்கை முடித்து வைத்தனர். ஆயினும் இளவரசன் கொலை செய்யப் பட்டார் என்று பலர் கூறினர்.

சேலத்தைச் சேர்ந்த பொறியியல் மாணவர் கோகுல்ராஜ் என்ற தலித் இளைஞரும் ஒரு பெண்ணும் காதலித்து வந்தனர். 2015 சூன் 24 அன்று ஈரோடு அருகில் இரயில் தண்டவாளத்தின் பக்கத்தில் தலைத் துண்டிக்கப்பட்ட நிலை யில் கோகுல்ராஜ் உடல் கிடந்தது. கோகுல்ராஜ் கொலை தொடர்பாக, கொங்கு இளைஞர் பேரவையின் தலைவர் யுவராஜ் என்பவர் நீண்ட தேடுதலுக்குப்பின் கைது செய்யப் பட்டார். கோகுல்ராஜ் கொலை வழக்கை விசாரித்துவந்த தலித் வகுப்பைச் சேர்ந்த, காவல் துறைத் துணைக் கண் காணிப்பாளர் விஷ்ணுப்பிரியா தற்கொலை செய்துகொண் டார். ஆதிக்கச் சாதிவெறியர்கள் அவருக்குக் கொடுத்த நெருக்குதல் காரணமாகவே விஷ்ணுப்பிரியா தற்கொலை செய்துகொண்டிருப்பார் என்று கருதப்படுகிறது.



இந்தப் பின்னணியில் சங்கர் கொலை செய்யப்பட்ட 19 மாதங்களுக்குள் இந்த வழக்கில் குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கப்பட்டிருப்பது வரவேற்கப்பட வேண்டிய தாகும். திருப்பூர் மாவட்டம், உடுலைப்பேட்டை அருகில் உள்ள குமரலிங்கம் ஊரைச் சேர்ந்த பொறியியல் மாணவ ரான சங்கரும் பழனியைச் சேர்ந்த கவுசல்யாவும் எதிர்ப்பு களை மீறி 2015 சூலை 11 அன்று சாதிமறுப்புத் திருமணம் செய்து கொண்டனர். சங்கர் தாழ்த்தப்பட்ட பள்ளர் சாதியினர். கவுசல்யா தேவர் சாதியில் ஒரு பிரிவான அகமுடையவர் சாதியைச் சேர்ந்தவர். திருமணத்துக்குப்பின் கவுசல்யா, சங்கர் வீட்டில் வாழ்ந்து வந்தார். கவுசல்யாவின் பெற்றோர் வழியாக சங்கர் - கவுசல்யா இணையருக்குப் பலவகையான அச்சுறுத்தல்கள் விடப்பட்டன.

சங்கருக்குச் சென்னையில் வேலை கிடைத்து, அங்குச் செல்லவிருந்த நிலையில், 2016 மார்ச்சு 13 அன்று உடுமலைப் பேட்டையில் பேருந்து நிலையம் அருகில் நடந்து சென்று கொண்டிருந்த சங்கரைச் சாதிவெறிக் கும்பல் தாக்கியது. தடுத்திட முயன்ற கவுசல்யாவும் அரிவாளால் தாக்கப்பட்டார். சங்கர் அங்கேயே இறந்தார். கவுசல்யாவின் தலையில் 18 தையல்கள் போடப்பட்டன. இவர்கள் தாக்கப்பட்ட நிகழ்ச்சி அருகில் இருந்த கடையின் கண்காணிப்புப் படக்கருவியில் பதிவானது. மக்கள் நடமாட்டம் மிகுந்த இடத்தில் பட்டப் பகலில் இக்கொலைவெறித் தாக்குதலை நடத்தும் அளவுக்குச் சாதிவெறி அவர்களை ஆட்டிப் படைத்தது. படக்கருவியில்




*சாதி ஆணவப் படுகொலைகளுக்குக்கெதிராகப் போராடும் கவுசல்யா*

பதிவாகியிருந்த இக்கொலையின் கொடிய காட்சிகள் கைப் பேசிகள் வாயிலாகத் தமிழகம் முழுவதும் பரவி பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.


2015ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்ட வன்கொடு மைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் சங்கர் கொலை வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கில் வாதாட தமிழக அரசு நான்கு மூத்த வழக்குரைஞர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத் தது. காவல் துறையும் நெகிழ்வுப் போக்கிற்கு இடந்தராத வகையில் செயல்பட்டது. அதனால் குற்றவாளிகள் தங்களைப் பிணையில் விடுவிக்குமாறு திருப்பூர் நீதிமன்றத்திலும். உயர்நீதிமன்றத்திலும் 58 தடவைகள் விண்ணப்பித்த போதிலும், வெளிவர முடியவில்லை.

கண்ணெதிரிலேயே தன் கணவன் கொல்லப்பட்டதால் கவுசல்யா நீதிமன்றத்தில் தன் பெற்றோருக்கு எதிராக உறுதியுடன் வாதாடினார். சமூக ஆர்வலர்களும் அமைப்பு களும் கவுசல்யா அதிர்ச்சியிலிருந்து மீண்டு வரவும், துணிவுடன் வாழ்க்கையை எதிர்கொள்ளவும் உறுதுணை யாக இருந்தனர். குறிப்பாக மதுரையில் உள்ள 'எவிடன்ஸ்' (Evidence) என்ற அமைப்பு, கவுசல்யாவுக்கு அரசு மாதந் தோறும் ரூ.11,500 வழங்கிட ஏற்பாடு செய்தது. சங்கர் கொலைக்கு எதிராகச் சமூகத்தில் ஏற்பட்ட எழுச்சியால், அரசு சங்கர் தம்பியின் படிப்புச் செலவை ஏற்றுக்கொள்வதாக அறிவித்தது. ஒரு அறை மட்டும் கொண்டதான சங்கரின் வீட்டைப் புதுப்பித்து விரிவுபடுத்திக் கொடுத்துள்ளது.

முற்போக்கு இயக்கங்களும், தோழர்களும் அளித்த ஊக்கத்தால் கவுசல்யா, பெரியாரின் அம்பேத்கரின் கருத்து களை உள்வாங்கி, தீண்டாமைக்கும் சாதி அமைப்புக்கும் எதிரான போராளியாகச் செயல்பட்டு வருகிறார். கவுசல்யா வின் துணிவும் முயற்சியும் போற்றத்தக்கனவாகும்.

தீண்டாமைக்கும் சாதி ஆதிக்கத்திற்கும் எதிரான போராட் டங்களை வலிமையாக முன்னெடுப்பதன் மூலமே சாதி ஆணவக் கொலைகளைத் தடுக்க முடியும்.

## சிதம்பரம் நகர தி.க.முன்னாள் தலைவர்
# புலவர் சி.இராசாங்கம் மறைந்தார்



நான் 1946 சூன் முதல் 1948 ஏப்ரல் வரையில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இடைநிலை வகுப்பில் படித்தேன். அதே காலத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தில் இளைநிலைப் புலவர் வகுப்பில் தோழர் சி. இராசாங்கம் என்பவர் தமிழ்ப்புலவர் பட்டத்துக்காகப் படித்தார்.

அவரும் நானும் தன்மானக் கொள் கையாளர்கள் என்பதால், மிக நெருக்கமாகப் பழகினோம். அவர் படிப்பு முடிந்தவுடன் சிதம்பரம் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசியராகப் பணியாற்றினார்.

அப்பெருமகனார், தம் 93-ஆம் அகவையில் 27.11.2017 திங்கட்கிழமை அன்று மறைவுற்றார் என்பதை அறிவிக்க மிகவும் வருந்துகிறேன்.

**அவருக்கும் பிச்சையம்மாள் என்பவருக்கும். சிதம்பரத்தில் புலவர் சி.இராசாங்கம் இல்லத்தில் 11.6.1948இல், வே.ஆனைமுத்து ஆகிய நான் தலை மையேற்றுத் திருமணத்தை நடத்தி வைத்தேன்.**

ஏறக்குறைய கடந்த ஏழு ஆண்டுகளாக உடல் நலக் குறைவால், அவர்தம் வீட்டோடு தங்கியிருந்தார் என்பதை அறிந்தேன். அய்ந்து ஆண்டுகளுக்கு முன் அவருடைய இல்லத்திற்குச் சென்று, அவருடனும் பிச்சையம்மாள் அவர்களுடனும் நீண்டநேரம் பேசி, அவர்கள் நலமாக இருப்பதை அறிந்து திரும்பினேன்.

தோழர் புலவர். சி.இராசாங்கம் ஆண்டிமடம் அருகி லுள்ள வடுகப்பாளையம் என்ற சிற்றூரில் சின்னதம்பி-பாக்கியம் ஆகிய இணையருக்கு 05.10.1925இல் மகனாகப் பிறந்தவர் ஆவார்.

அவருடைய பொதுவாழ்வு மிகவும் பாராட்டுக்குரியது. அன்னாரின் மறைவு கருதி மா.பெ.பொ.க. சார்பில் மாவட்டச் செயலாளர் வடக்கு மாங்குடி பா.மோகன், சிதம்பரம் நகர முனைவர் சி.இரா.இளங்கோவன், ஆறு.கலைச்செல்வன் ஆகியோர் அன்னாரின் உடலுக்கு மாலை அணிவித்தனர். 28.11.2017, மாலை 4 மணிக்கு நடைபெற்ற இராசாங்கம் இறுதி ஊர்வலத்திலும் பங்கேற்றனர். தி.க. பொதுச் செயலாளர் துரை.சந்திரசேகரனும் இறுதி ஊர்வலத்தில் பங்கேற்றார்.

மறைந்த புலவர் சி.இராசாங்கம் அடக்கமே வடிவான வர். எப்போதும் புன்சிப்போடு விளங்கியவர்; ஓயாத உழைப்பாளர்.

அப்பெருமகனாரை இழந்து துன்பத்துக்கு ஆளாகி இருக்கும். அவருடைய இணையர் பிச்சையம்மாள் மகன் கள் அன்பரசன். பொய்யாமொழி, நச்சினார்க்கினியன், மகள் செல்வகுமாரி மற்றும் குடும்பத்தார், உறவினர்கள், தி.க. தோழர்கள் ஆகியோருக்கு என் சார்பிலும் என் குடும் பத்தார் சார்பிலும், மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடை மைக் கட்சியின் சார்பிலும் ஆழ்ந்த வருத்தத்தையும் மனங்கசிந்த இரங்கலையும் உரித்தாக்குகிறேன்.

**வாழ்க புலவர் சி.இராசாங்கம் புகழ்!**

**கட்டுரைத் தொடர்-56**

# திராவிடர் இயக்கங்கள்; தமிழ்த் தேசியத்திற்குத் தடைக்கல்லா? படிக்கல்லா?

- வாலாசா வல்லவன்

1940 ஆகஸ்டு 24, 25 தேதிகளில் திருவாரூரில் நடைபெற்ற நீதிக்கட்சி மாநாட்டில் பெரியார் ஆற்றிய தலைமையுரை - சென்ற இதழ் தொடர்ச்சி.

**ஆரிய திராவிட நாட்டுப் பிரிவினை**

இனி நம் கட்சி நோக்கங்கள், திட்டங்கள் ஆகியவை நிறைவேற்றப்படுவதற்கு ஆகவும் நம் மக்கள் உண்மையான விடுதலையும் சுதந்தரமும் பெறுவதற்கு ஆகவும் நாம் செய்ய வேண்டிய, வேலைகளில் முக்கியமானது ஆரியப் பிணைப்பில் இருந்து அதாவது இந்தியா, இந்தியர் என்ற பிணைப்பிலிருந்து திராவிட நாட்டையும் திராவிட மக்களையும் பிரித்துக் கொள்ள வேண்டியது அவசியமான காரியமாகும். இதைப்பற்றி சென்ற மகாநாட்டின் எனது தலைமை உரையில் விவரித்துக் கூறியிருக்கிறேன். இந்த ஒன்றரை வருஷ காலமாகவும் ஒவ்வொரு கூட்டங்களிலும் எடுத்துப் பேசி மக்களினது ஆதரவு பெற்றும் வந்திருக்கிறேன். இதுவரை இந்த எனது அபிப்பிராயத்திற்கு மாறாக யாரும் சரியான காரணங்காட்டி எவ்வித மறுப்போ ஆக்ஷேபணையோ சொன்னது கிடையாது என்றாலும் மக்களுடைய ஒழுக்கத்துக்கும் பகுத்தறிவு ஆராய்ச்சிக்கும் மாறுபாடு இல்லாவிட்டாலும், மத சம்பந்தமான உணர்ச்சியின் பயனாய் ‘‘ஹா! பறையனைத் தொடுவதா’’ என்பது போல எப்படி சில காரியங்களில் திடீரென்று வெறுப்புகொண்டுவிடுகிறார்களோ அதுபோலவே இவ்விஷயத்தில் ‘‘ஹா! பிரிப்பதா’’ என்று மக்கள் ஒரு திகில் அடையும்படி எதிரிகள் விஷமப் பிரச்சாரம் செய்கிறார்கள். அப்படிப்பட்ட பிரச்சாரங்களுக்கு ஆதரவெல்லாம் ‘‘தாயை வெட்டுவதா?’’, ‘‘பிள்ளையை அறுப்பதா?’’, ‘‘பசுவைக் கொல்வதா?’’, ‘‘கூரையைப் பிரிப்பதா?’’ என்பன போன்ற திடுக்கிடத்தகுந்த பொருத்தமற்ற வார்த்தைகளைப் பயன்படுத்திக் கொள்வதல்லாமல் பிரிப்பதால் என்ன நஷ்டமென்றோ, பிரிக்கப்பட்ட நாடுகள் என்ன கேடு அடைந்தனவென்றோ, ஒரு சிறு ஆதாரத்தையும் எடுத்துக்காட்டினார்களில்லை. நாம் திராவிட நாடு பிரிக்கப்பட வேண்டுமென்று சொல்லுவதற்குள்ள காரணங்களெல்லாம் ஒரு நாட்டு மக்களுக்கும் ஒரு சமுதாய மக்களுக்கும் முன்னேற்ற உணர்ச்சி ஏற்பட வேண்டுமானால் அந்த மக்களுக்கு முதலில் தாங்கள் யார் என்ற உணர்ச்சி பிறந்து தங்களைப் பற்றித் தெளிவாய் தெரிந்துகொண்டு அதன் பயனாக, நாட்டுப் பற்றும் சமுதாயப் பற்றும் ஏற்பட்டாக வேண்டும். அது இல்லாத நாடோ மக்களோ முன்னேற்றமடைந்ததாக சரித்திரச் சான்றுகளே கிடையாது. உலகிலுள்ள மற்ற நாடுகளெல்லாம் ஒவ்வோர் அளவுக்காவது முன்னேற்றம் அடைந்து வரவும் நம் நாடும் மக்களும் மாத்திரம் எவ்வித முன்னேற்றமில்லாமல் தேங்கி இருப்பதற்கு இதுவே காரணமாகும். மற்றும் வெளிநாட்டு மக்கள் ஏராளமாய் இந்நாட்டிற்கு வந்து நம்மை அடிமைப்படுத்தியும் நம் செல்வங்களைச் சுரண்டிக் கொண்டும் போகவும் நம்மக்கள் இங்கு பிழைப்பும் போதிய வரும்படியும் இல்லாமல் வெளிநாடுகளுக்குப் போய் கூலியாயும் அடிமையாயும் இருந்து இழிவுபடவும் இதுவே காரணமாகும். இங்கு நம் நாட்டு மக்கள் 100க்கு 97 பேர்களாக உள்ள பெருமித எண்ணிக்கை உள்ளவர்களாக இருந்தும் 100க்கு 3 பேர்களாக உள்ளவர்களும் வெளிநாட்டிலிருந்து வந்து குடியேறினவர்களுமான ஆரியர்கள் மிக சிறுபான்மையினராக இருந்தும் அரசியலில், பதவிகளில், உத்தியோகங்களில், சமுதாய உயர்வுகளில் அவர்கள் மெஜாரிட்டிகளாகவும் மேன்மையானவர்களாகவும் இருப்பதற்கும், நாம் மைனாரிட்டிகளாகவும் கீழ்மையாகவும் இருப்பதற்கும், அரசாங்கத்தார் அரசியல் அபிப்பிராயங்களுக்கு இந்நாட்டு பழம்பெரும் மக்களாகிய நம்மை லட்சியம் செய்யாமல் போவதற்கும் ஆரியர்களை லட்சியம் செய்வதற்கும் நம் நாட்டு பொது ஸ்தாபனங்கள் என்பவைகள் யாவற்றிலும் தொழில், பொருளாதாரம் யாவற்றிலும் ஆரியர்களே தலைமையும் ஆதிக்கமும் செலுத்துவதற்கும், நாம் அவர்களைப் பின்பற்றுவோராக இருப்பதற்கும் காரணம் இந்த ஆரிய திராவிட நாட்டுப் பிணைப்பே யாகும். நாம் இனியும் கவனித்துத் தக்கது செய்துகொள்ளாவிட்டால், ஆரீயர்களால் தமிழ்நாட்டில் சிறிதாவது மீதியுள்ள எல்லாத் துறைகளும் கைப்பற்றப்பட்டு நாம் அடிமைகளாகவே ஆக்கப்பட்டுவிடுவோம் என்பது உறுதி.



**கேவல நிலைக்குக் காரணம்**

ஆகவே திராவிட நாடானது ஒரு ஐம்பது வருஷ காலத்துக்கு முன்னாவது ஆரியத்தினிடம் இருந்து பிரிந்து தனி நாடாக இருந்திருக்குமானால் இன்று அதன் செழிப்பும் மேன்மையும் திராவிட மக்களின் உயர்வும் உலகம் மெச்சக் கூடியதான நிலை அடைந்திருக்கும். அப்படி பிரிக்கப்படாததானால் முன்னேற்றம் அடைவது தடைப்பட்டது என்பது மாத்திரமல்லாமல் இந்தியா என்ற உபகண்டத்தில் உள்ள மற்ற நாடுகள் சுரண்டுவதற்கு ஓர் சந்தை போலவும் மற்ற நாடுகள் ஆதிக்கம் செலுத்தி, தங்கள் வாழ்வுக்குப் பயன்படுத்தி கொள்வதற்கு ஒரு கருவியாகவும் இது இருந்து வருகிறது. திராவிட நாடும் திராவிட சமுதாயமும் சரித்திரங்களுக்கு முற்பட்டவை என்பதை நான் எடுத்துக்காட்ட வேண்டிய

தில்லை. அதுமாத்திரமல்லாமல் சமீபகாலம் வரை இந்த உபகண்டத்திலுள்ள மற்ற எல்லா நாடுகளுக்கும் சமுதாயங்களுக்கும் மேம்பட்டதும் வழிகாட்டியானதுமான சமுதாயமாய் இருந்து வந்திருக்கிறது. இவை மாத்திரமல்லாமல் திராவிடர்களின் பழங்கால நிலைமையைப் பார்த்தோமானால் திராவிடர்கள் சிறந்ததும் மேலானதுமான செழிப்பும் நாகரிகமும் உள்ளவர்களாக விளங்கி இருப்பதும் தெரியவரும். இப்படிப்பட்ட நாட்டு மக்கள் இன்று இருக்கும் கேவல நிலைக்குக் காரணம் ஆரிய நாட்டோடு திராவிட நாடு பிணைக்கப்பட்டிருப்பது என்பதல்லாமல் வேறு என்ன சொல்லக்கூடும்?

பிரிட்டிஷ் அரசாட்சி காரணமாகத் திராவிடர்களாகிய நாம் இந்நிலையில் இருக்கிறோமென்று சொல்லப்படுமேயானால், இந்நாட்டிலுள்ள திராவிடரல்லாத ஆரிய மக்கள், மேலே குறிப்பிட்டபடி உயர்நிலையில் இருப்பதற்குக் காரணம் என்ன? அரசியல் காரணமாக இந்நாட்டு மக்கள், கல்வி அறிவு இல்லாமல் கீழ் மக்களாய் இருக்க நேரிட்டது என்று சொல்லப்படுமானால் இந்நாட்டிலுள்ள ஆரியர்கள் 100க்கு 100 பேரும் கல்வி பெற்றவர்களாகவும் மேன் மக்கள் என்பவர்களாகவும் இருப்பதற்குக் காரணம் என்ன? அரசியல் காரணத்தால் இந்நாட்டு மக்கள் உடல் உழைப்பாளிகளாகவும் வறியோர்களாகவும் தினம் ஒருவேளைக் கஞ்சி கூட வயிறு நிறைய சாப்பிடுவதற்கு இல்லாமல் இருக்கிறார்கள் என்று சொல்லப்படுமானால் இந்நாட்டு ஆரியர்கள் உடல் உழைப்பு இல்லாமலும் போக போக்கியத்தோடும் தினம் 4 வேளை ஆகாரத்தோடும் வாழுவதற்குக் காரணம் என்ன? ஆகவே இவைகளை எல்லாம் கவனத்தோடு ஆழ்ந்து பார்ப்போமேயானால் நமது நாடு, உள்நாட்டிலுள்ள மற்றொரு வர்க்கத்தாராலேயே ஏய்க்கப்பட்டு, சுரண்டப்பட்டு மற்ற அன்னிய நாட்டார்களுக்கும் சுரண்ட இடங்கொடுத்து வரும் காரியங்களாலேயே, இப்படி இருக்கிறதென்பதும் இவற்றிற்கு பிரிட்டிஷ் ஆட்சியே காரணம் அல்ல என்பதும் விளங்கும். இந்தக் கொடுமையிலிருந்து விலகி மனிதத் தன்மை பெற வேண்டுமென்பதற்காகத்தான் திராவிட நாடு தனியாகப் பிரிக்கப்பட வேண்டுமேயொழிய மற்றபடி வேறு எவ்வித குரோத புத்தியாலோ, நாட்டுப்பற்று, சமுதாயப்பற்று இல்லாததாலோ அல்ல.

வர்க்க உணர்ச்சியே இல்லாத மக்களுக்குத் தங்கள் நாட்டில் கூட அவரவர் தனிப்பட்ட நலம் தவிர வேறு எவ்வித பொதுநல உணர்ச்சியும் இருப்பதற்கு இடமிருக்காது. ஆரியர்கள் முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள் என்றால் அவர்களுக்கென்று ஒரு தனி நாடு இல்லாவிட்டாலும் அவர்களது இன (வர்க்க) உணர்ச்சியானது அவர்களை இவ்வளவு உயர்வாழ்க்கை நிலைமைக்குக் கொண்டு வந்திருக்கிறது. இப்போதும், நமது நாட்டில் சமீபகாலம் வரை மிக பின்னணியில் இருந்த வகுப்பார் என்பவர்கள் யாராவது ஏதாவது முற்போக்கு உணர்ச்சி பெற்றிருக்கிறார்கள் என்றால் அது வகுப்பு உணர்ச்சி ஏற்பட்டு, அவர்கள் "வகுப்புவாதம்" பேசமுன்வந்த காரணமேயாகும். ஆதலால் சுமார் 4½ கோடி ஜனத்தொகை கொண்ட சென்னை மாகாணமாகிய திராவிட நாடு தனி அரசியல் நாடாகப் பிரிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதை எனது 20, 30 வருஷத்திய அனுபோகத்தைக் கொண்டே சொல்லுகிறேன்.

இந்தப் பிரிவினைத் திட்டத்துக்கும் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்தோ சம்பந்தத்திலிருந்தோ விடுவித்துக் கொள்வதா என்பதற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது. இந்தப் பிரிவினைத் திட்டமானது உண்மையான நாட்டுப் பற்றும் நாட்டு மக்கள் நலப்பற்றும் ஏற்பட்டதால் உண்டான உணர்ச்சியே தவிர மற்றபடி எதிரிகள் சொல்லுவது போல் தேசாபிமானம், சுதந்தர உணர்ச்சி இல்லாததால் ஏற்பட்டது அல்ல. ஆகவே பிரிவினை வேண்டுமென்பது பிரிவினை அடைந்து அதன் மூலம் பொருளாதாரம், கல்வி, சமுதாயம், தொழில் முதலிய துறைகளில் முன்னேற்றமடைந்து அன்னியர் சுரண்டலுக்கும் ஆதிக்கத்துக்கும் ஆளாகாமல் தன் காலிலேயே தான் நிற்கும்படியான சுயநிர்ணயத்தையும் பூரண சுதந்தரத்தையும் அடைய வேண்டுமென்பதற்கேயாகும். இக்காரியத்துக்கு பிரிட்டிஷ் ஆட்சி நமக்குப் பயன்பட்டால் நாம் அதில் இருக்க வேண்டியதும் பயன்படாவிட்டால் வேறு மார்க்கம் பார்க்க வேண்டியதும் இயற்கையேயாகும்.

- (தொடரும்)

## ஓவியர் சாமி கங்காதரன் எட்டாம் ஆண்டு நினைவு நாள்



ஒரு நிகழ்ச்சிக்குப் பங்குகொள்ள வந்த பெரியாரை அவர் மேடையை விட்டு இறங்குவதற்குள் நேரிடையாகப் பார்த்துக் கொண்டே பெரியாரைத் தத்ரூபமாக ஓவியமாக வரைந்து அவரிடம் காண்பித்துக் கையெழுத்து வாங்கியவர் ஓவியர் சாமி கங்காதரன் அவர்கள் (பெரியார் படம் வரைவது அவ்வளவு சுலபம் அல்ல).

06.01.1974இல் திருச்சியில் தந்தை பெரியாரின் இரங்கல் கூட்டத்திற்காக ஒரே இரவில் பெரியாரின் படத்தை வரைந்தவர்.

1979இல் டெல்லியில் நடைபெற்ற பெரியார் நூற்றாண்டு விழாவிற்குப் பெரியாரின் உருவப் படங்களை உயிரோட்டமாக வரைந்தவரும் இவரே.

சாமி கங்காதரன்-சரோசா இணையர்களின் திருமணத்தை தி.பொ. வேதாச்சலனார் முன்னின்று நடத்தி வைத்தார்.

மறைந்த சாமி கங்காதரன் அவர்களின் எட்டாம் ஆண்டு (01.12.2017) நினைவு நாளை முன்னிட்டு அவரது வாழ்விணையர் சரோசா சாமி கங்காதரன் மற்றும் அவரது பேரக்குழந்தைகள் சிந்தனையாளன் வளர்ச்சி நிதியாக உருபா 500/- அளித்தனர்.

செய்தி : **இரா. கலியபெருமாள்,** திருச்சி.

# புரட்சியாளர் அம்பேத்கர்

மரு.க.சோமாஸ்கந்தன்

**சொக்க மேளருக்கு கோயில்**

1928 சனவரி மாதத்தில் நாசிக் அருகில் உள்ள இந்துக்களின் புண்ணிய ஸ்தலமான திரைம்பாக்கில் அம்பேத்கர் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் தீண்டப் படாதவகுப்பினரைச் சார்ந்த பெருந்துறவி சொக்க மேளருக்கு கோயில் கட்ட ஆலோசிக்கப்பட்டது. இதனை அம்பேத்கர் ஆதரிக்கவில்லை.. கோயில் கட்டி சிலையை வழிபடுவதைவிட தீண்டாமையை ஒழித்து மக்கள் வாழ்வினை உயர்த்திட உழைப்பதே அவருக்கு நாம் எழுப்பும் பொருத்தமான நினைவுச் சின்னம் என்று அறிவுறுத்தினார். சிலை வழிபாட்டினை அம்பேத்கர் எதிர்த்தார்.

**ஒடுக்கப்பட்ட வகுப்புகள் கல்விக் கழகம்**

அம்பேத்கர், 1928 சூன் மாதம் 14 ஆம் நாள் ஒடுக்கப்பட்ட வகுப்புகள் கல்விக் கழகம் என்ற அமைப்பை நிறுவினார். வலுவான அடித்தளத்தின் மீது அவருடைய மக்களுக்குப் பள்ளிக் கல்வியை வழங்கவேண்டும் என்பது அக்கழகத்தின் குறிக்கோள். ஒடுக்கப்பட்ட மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கான 2 விடுதிகளை ஏற்படுத்தினார்:. பம்பாய் அரசின் சொற்ப நிதி உதவியையும் பெற்றார், பொருளாதார நெருக்கடி தீரவில்லை. ஆதலால் சாதி மத வேறுபாடின்றி எல்லா நிறுவனங்களிடமும் நிதி உதவி கோரினார். ஆனால் எந்த நிறுவனமும் அவரது கோரிக்கைக்குச் செவிசாய்க்கவில்லை. ஒடுக்கப்பட்ட மக்களின் நிலையை உயர்த்த அம்பேத்கர் எடுத்த முயற்சிகளுக்கு அளவே இல்லை; பட்ட இன்னல்களுக்கும் எல்லையே இல்லை.

1929 ஏப்ரலில் சிப்ளனில் நடைபெற்ற இரத்தினகிரி மாவட்ட மாநாட்டில் அம்பேத்கர் தலைமையேற்றார். உங்களுடைய அடிமைத் தளையை நீங்களேதான் அறுத்தெறிய வேண்டும். தன்மானத்துடன். தலைநிமிர்ந்து வாழ்வதற்கு ஏற்படும் தடைகளைத் தீரத்துடன் எதிர்த்துப் போரிடவேண்டும்.. கடுமையாக அயராது போராடுவதன் மூலமே நாம் நமது உரிமைகளைப் பெறமுடியும். நாம் அடிமைகளல்லர்; வீரஞ்செறிந்த பரம்பரையினர். சுயமரியாதையின்றி நாட்டுப்பற்று இன்றி வாழ்வதைக் காட்டிலும் இழிவானது வேறொன்றுமில்லை என்று உணர்வூட்டினார்.

சிப்ளன் மாநாட்டின் முடிவில் அனைவர்க்கும் பூணூல் கொடுக்கப்பட்டது. அம்பேத்கரின் நண்பர் தியோராவ் நாயக் என்ற பிராமணர், புரோகிதராக இருந்து 6000 தீண்டப்படாத பிரதிநிதிகளுக்கு வேத மந்திரங்களுடன் பூணூல் அணிவித்தார்..

1929 மே 29 ஆம் நாளில் ஜல்கான் நகரில் நடைபெற்ற மாநாட்டில் அம்பேத்கர் தாழ்த்தப்பட்ட மக்களைப் பற்றி சாதி இந்துக்கள் கவலைப்படவில்லை என்ற நிலை நீடித்தால், தாழ்த்தப்பட்டமக்கள் அனைவரும் வேறு எந்த மதத்திலாவது இணைவதில் தவறேதும் இல்லை என்று ஆணித்தரமாக எடுத்துரைத்தார். மாநாடு முழுமையாக இதனை ஏற்றுக்கொண்டது.

**நாசிக் அறவழிப் போர்**

அம்பேத்கர் நாசிக்கில் அமைந்துள்ள காலாராம் கோயில் நுழைவுப் போராட்டத்தைத் தொடங்குவதற்கான முன்னேற்பாடுகளை மூன்று மாதங்களாகக் கவனித்தார்.

இந்திய வரலாற்றில் 1930 ஆம் ஆண்டு போராட்ட ஆண்டாகும். 1930 மார்ச் 12 ஆம் நாள் மகாத்மா காந்தி உப்பு சத்தியாகிரகத்தைத் (தண்டி யாத்திரையைத்) தொடங்கினார். அதற்கு 10 நாள்கள் முன்னதாக-மார்ச் 2ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு தொடங்கப்பட்ட சத்தியாக்கிரகத்துக்கு அம்பேத்கர் தலைமையேற்றார். சுமார் 15,000 தொண்டர்கள் காலாராம் கோயில் சத்தியாகிரகத்தில் ஒன்று திரண்டனர். பின்னர் மாலை 3 மணிக்கு தொண்டர்கள் அனைவரும் ஊர்வலமாக சென்றனர். இந்த ஊர்வலம் நாசிக்கில் நடைபெற்ற மிகப்பெரிய ஊர்வலம் ஆகும். இந்த ஊர்வலம் ஒரு இராணுவ இசைக்குழு தலைமையின் கீழ் நடைபெற்றது. சாரணர்களும், பெண்களும், ஆண்களும் கட்டுப்பாட்டுடன் ஊர்வலத்தில் நடந்து சென்றனர் அவர்கள் முதல் முறையாகக் கடவுளைக் காணப்போகிறோம் என்று ஒழுக்கத்துடனும் உறுதியுடனும் நடந்து கெண்டிருந்தனர் அவர்கள் கோயிலின் நுழைவாயிலுக்கு வந்தபேது, அதிகாரிகளால் கோயில் வாயில்கள் மூடப்பட்டன. அதனால் ஊர்வலத்தினர் கோதாவரி ஆற்றுப் படித்துறை நோக்கிச் சென்றனர். அங்கே பொதுக்கூட்டம் நடைபெற்றது. அன்று இரவு தலைவர்கள் கூடி அறவழியில் கோயில் வாயிலில் அமைதியாகப் போராட முடிவு செய்தனர். தொடர்ந்து ஒரு மாதம் அமைதியாக அறப்போர் நடைபெற்றது. கோயில் வாயில்கள் மூடப்பட்டிருந்தன. காவலர்கள் கோயிலைச் சுற்றி நிறுத்தப்பட்டிருந்தனர் மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் தன் அலுவலகத்தைக் கோயில் முன் மாற்றிக் கொண்டிருந்தார்.

கடவுள் இராமனே நேரில் வந்து கதவுகளைத் திறக்கும்படிச் சொல்லியிருந்தாலும் சனாதன இந்துக்கள் அந்த இராமனையே தூக்கி எறிந்திருப்பார்கள். ஏப்ரல் 9ஆம் நாள் இராமன் சிலையைத் தேரில் வைத்து ஊர்வலமாக இழுத்துச் செல்லும் நாள். இருசாராரும் இணைந்து தேரினை இழுப்பது என்று ஏற்பாடு செய்யப் பட்டிருந்தபோதிலும், தேரினை இழுக்கும் நேரத்தில் கூடியிருந்த இந்துக்கள் தீண்டப்படாத மக்க

ளைத் தடிகளாலும் கற்களாலும் தாக்கினர், அம்பேத் கரும் காயமடைந்தார்.. இதனால் கோயில் ஓராண்டுக் காலம் மூடிக்கிடந்தது. மாவட்ட ஆட்சியர் உயர் சாதி யினருக்கு ஆதராகவே செயல்பட்டார். இந்தப் போராட் டத்தில் இந்து மேல் சாதியினருக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் தலைமையேற்றிருந்தார்.

இப் போராட்டத்திற்குப் பின் மாவட்டம் முழுதும் தாழ்த்தப்பட்ட மக்கள் மிக மோசமாக நடத்தப்பட்டனர். பள்ளிகளில் தாழ்த்தப்பட்ட குழந்தைகளுக்கு இடம் கிடையாது. அவர்களுக்கு இழைக்கப்பட்ட துன்பத்திற்கு எல்லையே இல்லை. இந்நிலையில் 1930 மே மாதத் தில் சைமன் குழு அறிக்கை வெளியிடப்பட்டது. அதன் பின், 1930 ஆகஸ்டு 8,9 நாள்களில் நாகபுரியில் அம்பேத்கர் தலைமையில் அனைத்திந்தியத் தீண்டப் படாத வகுப்பினரின் மாநாடு நடை பெற்றது. அம்மா நாட்டில் அம்பேத்கர் தலைமை உரையாற்றினார்: இந்தியாவில் மத்திய மாநில சட்ட அவைகளில் தீண்டப் படாத வகுப்பினருக்குப் போதிய பிரதிநிதித்துவம் வழுங்கப்பட வேண்டும் என்றும், அரசுப் பணிகளில் போதிய இட ஒதிக்கீடு வழுங்கவேண்டும் என்றும், நாட்டின் அரசியல் சிக்கலைத் தீர்ப்பதற்கு வட்டமேசை மாநாடு நடத்தப்படவேண்டும் என்றும் அம்பேத்கர் தன் தலைமை உரையில் வலியுறுத்தினார்.

**முதல் வட்ட மேசை மா நாடு**

முன்னரே அறிவித்திருந்தவாறு பிரிட்டிஷ் அரசு இலண்டனில் வட்டமேசைமாநாட்டைக் கூட்டியது.

வட்டமேசை மாநாட்டில் அம்பேத்கர் கலந்து கொள்ள வேண்டும் என்று வைஸ்ராய் 1930 செப்டம்பர் 6 ஆம் நாளன்று அழைப்பு விடுத்தார். இதன் மூலம் காலம் காலமாக ஒதுக்கப்பட்ட தீண்டப்படாத தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் குரல் அரசியல் ரீதியாக அதிகாரம் பெற்று ஒலிக்கத் தொடங்கியது.

வட்டமேசை மாநாட்டில் 89 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர் அவர்களில்.16 பேர் மூன்று பிரிட்டிஷ் அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள். 53 பேர் இந்தியப் பிரதிநிதிகள்-இந்துமகாசபையினர், இந்தியக் கிறித்த வர்கள், முஸ்லிம் தலைவர்கள், சீக்கியர்கள், இந்திய சிற்றரசின் பிரதிநிதிகள் முதலானோர் கலந்து கொண் டனர். இவர்களோடு தாழ்த்தப்பட்டவர்கள் சார்பாக டாக்டர். அம்பேத்கரும், இராவ்பகதூர். இரட்டைமலை சீனிவாசனும் கலந்து கொண்டார்கள்.

இந்தியத் தேசிய காங்கிரஸ் இந்த மாநாட்டை புறக்கணித்தது. காங்கிரஸ் உறுப்பினர்கள் மட்டுமே தேசப்பக்தர்கள் என்று நம்பியும் பேசியும் வந்த காலம் அது. எனவே, வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்ளும் கருத்துடையவர்கள் பிரிட்டிஷ் அடிமைகள் என்று குற்றம் சாட்டினர்

ஆனால், இந்து மகா சபையைச் சார்ந்த டாக்டர் பி.எஸ். மூஞ்சே குறித்து விமர்சனம் செய்யவில்லை. மிதவாதக் கட்சியைச் சேர்ந்த சர்.டேஜ் பகதூர் சாப்ரு, எம். ஆர் ஜெயகர், ஆகியோர் குறித்து விமர்சனங்கள் கிடையாது. ஆனால் அவர்கள் அம்பேத்கருக்கு எதிராக விமர்சனங்கள் செய்தனர்.

பிரிட்டிஷாருக்கு எதிரி என்பதால் ஜெர்மனியோடு இணைந்து போராடுவேன் என்ற சுபாஷ் சந்திர போஸ் கூட, தேசியத் தலைவர்களைச் சிறுமைப் படுத்துவதற் காக அம்பேத்கர் தலைவராக்கப் பட்டுள்ளார், என்று விமர்சித்தனர், எனில் அம்பேத்கர் இந்த நாட்டைச் சேர்ந்தவரில்லையா? புரியவில்லை!

இதே தொனி இன்றைய இந்திய அரசியலிலும் உள்ளதே!! அவர்களின் காழ்ப்புணர்வுக்குக் காரணம் என்ன?

முதல் வட்ட மேசை மாநாட்டில் கலந்து கொண்ட வர்களில் பிரதமர் ராம்சே மக்டொனால்டையும், என். எம். ஜோசியையும் தவிர்த்து மற்ற அனைவரையும் விட அதிகக் கல்வித் தகுதியைப் பெற்றிருந்தவர் அம் பேத்கர். எனினும் அவர் விமர்சனக் கணையால் தாக்கப்பட்டார். காரணம் அவர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த தலைவர் என்பதால்! இந்துத்வா குரல் அன்றும் ஓங்கி ஒலித்தது. இன்றும் பெரியாரின் காலத்திற்குப் பின் தமிழகத்தில் இந்துத்வா குரல் ஓங்கி ஒலிக்கிறது.

1930 அக்டோபர் 4ஆம் நாள் டாக்டர் அம்பேத்கர் இங்கிலாந்துக்குப் புறப்பட்டார். 1930 அக்டோபர் 2 ஆம் நாள் அன்று அம்பேத்கருக்கு, தாழ்த்தப்பட்டோர் மிகச் சிறப்பான வழியனுப்புவிழாவினை நடத்தினர். அதில் உரையாற்றிய அம்பேத்கர் தான் பெற்ற சிறிய வெற்றிகள் அனைத்தும் தாழ்த்தப்பட்ட தொண்டுள்ளம் கொண்ட தொண்டர்களின் ஒத்துழைப்பால் ஈட்டப்பட்ட வையாகும் என்று கூறி அவர்களுக்குத் தன் நன்றியை தெரிவித்துக் கொண்டார். பம்பாய் மாநில சட்டமன்றத் தில் சிறப்பாகப் பணியாற்றினார் என்று டாக்டர் சோலங்கி யைப் பாராட்டினார். தான் இந்தியாவில் இல்லாத நிலையில், தனது வலது கையாக வலம் வந்த தியோராவ் நாயக் அவர்கள், இயக்கத்தை வழி நடத்திச் செல்வார் என்றும் கூறினார் .தனது திங்கள் இருமுறை வெளி வந்த பகிஷ்கிரித் பாரத் என்ற இதழுக்குப் பதிலாக விரைவில் ஜனதா என்ற மாதமிருமுறை இதழ் வர விருக்கிறது என்றறிவித்தார். இந்த இதழ்கள் வெளிவர நிதி உதவி செய்த சங்கர் ராவ் எஸ். பர்ஷாவிற்கு நன்றி கூறினார்.

வட்டமேசை மாநாடு தீண்டப்படாத மக்களுக்கு அரசியலில் ஆக்கம் தரும் நடவடிக்கை என்று குறிப் பிட்டார். இறுதியாக, என் மக்களுக்கு என்ன நியாய மாகக் கிடைக்கவேண்டுமோ அதற்காகப் போராடு வேன். ஆனால் அதே நேரத்தில் விடுதலை கோரிக் கையை ஆழ்ந்த உணர்வுடன் ஆதரிப்பேன் என்று கூறி விடை பெற்றுச் சென்றார்.

வட்டமேசை மாநாடு 1930 நவம்பர் 12 ஆம் நாள் தொடங்கியது. மேன்மைமிகு பிரிட்டிஷ் பேரரசர்

மாநாட்டைத் தொடங்கி வைத்து உரையாற்றினார்: இந்தியாவின் எதிர்கால அரசமைப்பு முறை குறித்து விவாதிப்பதும், உடன்பாடு காண்பதும் இம்மாநாட்டின் நோக்கம். நீங்கள் எடுக்கின்ற முடிவு எனது நாடாளு மன்றத்திற்கு வழிகாட்டியாக அமையும்: இந்திய அரசு அமைப்புச் சட்டம் உருவாக்குதற்கு அடித்தளமாக அமையும் என்றார். பேரரசர் அவையிலிருந்து சென்ற பின், பிரிட்டிஷ் பிரதமர் இராம்சே மாக்டொனால்டு மாநாட்டின் தலைமைப் பொறுப்பேற்றார். இந்தியா வின் பிரச்சினையைத் தீர்த்திட பிரிட்டன் உறுதி பூண்டுள்ளது என்று கூறினார். பின் பல் வேறு கட்சியின் தலைவர்கள் பேசினர். இறுதியாக டாக்டர் அம்பேத்கர் உரையாற்றினார். இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பகுதியினராக உள்ள தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதி நிதியாகப் பேசுகிறேன் என அறிவித்தார். இந்தியாவிலுள்ள தீண்டப்படாத மக்கள் இப்போது இருக்கின்ற அரசை மாற்றி, அதற்குப் பதிலாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட, மக்களுக்காக நடத்தப் படுகின்ற., மக்களால் ஆளப்படுகின்ற அரசு அமையவேண்டும் என்று விரும்புகின்றனர். என அறிவித்தார். மேலும், இப்போதுள்ள எங்கள் நிலை யையும், ஆங்கிலேயர் ஆட்சிக்கு முந்தைய எங்களின் அவல நிலையையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது எங்கள் நிலையில் எந்த முன்னேற்றமும் ஏற்பட வில்லை என்பதை அறியமுடிகிறது. தீண்டமை காரணமாக வெறுத்து ஒதுக்கப்பட்ட நிலையில் இருக்கி றோம்.. இந்த நிலையை அகற்றிட இந்த ஆட்சி ஏதேனும் செய்ததா? பொதுக் கிணறுகளில் தண்ணீர் எடுக்கமுடி யாது. கோயிலுக்குள் நுழையமுடியாது. இந்நிலை களில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா இந்த ஆட்சியால்? இதற்கு முன் நாங்கள் காவல் துறையில் பணிசெய்திட வும், இராணுவத்தில் பணிபுரிந்திடவும் தடைகள் இருந்தன. அத்தடைகள் நீக்கப்பட்டனவா? இல்லையே! ஆறாத புண்ணாகவே எங்கள் நிலை நீடிக்கிறது. ஆனால் 150 ஆண்டுகள் பிரிட்டிஷ் ஆட்சி உருண் டோடிவிட்டது. இந்த ஆட்சியால் யாருக்கு என்ன நன்மை என்று அம்பேத்கர் வட்டமேசை மாநாட்டி னரை நோக்கிக் கேட்டார். இந்தியாவில் உயர் சாதி யினரே அரசியலியக்கத்தை நடத்திக்கொண்டிருக்கின் றனர். அவர்கள் குறுகிய சாதிக் கண்ணோட்டத்தைக் கைவிடவில்லை. ஆகவே எங்களுடைய துன்பங் களை எங்களைப் போன்று செம்மையாக எவராலும் துடைத்திட முடியாது. அரசியல் அதிகாரம் எங்களுக்கு வராத வரையில் அவற்றை எங்களால் அகற்றிட முடியாது

அம்பேத்கரின் உரை நாடாளுமன்றத்தில் அதிர்வலை களை எழுப்பியது; பிரதமர் இராம்செ மாக்டொனால்டு, அவர்களையும். பரோடா மன்னரையும் வெகுவாகக் கவர்ந்தது. பரோடா மன்னர் அம்பேத்கருக்கு சிறப்பான விருந்து தந்து சிறப்பித்தார். மாநாட்டு உரைகளி லேயே மிகவும் சிறப்பான உரை அம்பேத்கரின் உரை என்று இந்தியன் டெய்லி மெயில் ஏடு எழுதியது. ஆனால் இந்திய ஏடுகள் பாராட்டவில்லை.

வட்டமேசை மாநாட்டில் பொதுவிவாதம் முடிந்தபின் 9 துணைக்குழுக்கள் அமைக்கப்பட்டன. 8 துணைக் குழுக்களில் அம்பேத்கர் இடம்பெற்றார்..

அம்பேத்கர் அவருடைய குறிக்கோளை அடைவதற் காக ஒரு முக்கியப் பணியைச் செய்தார். தீண்டப்படாத மக்களின் நலன்களை பாதுகாப்பதற்கான ஓர் அரசியல் காப்புத் திட்டத்தினை கடும் உழைப்பினை நல்கித் தேர்ந்த மதி நுட்பத்துடன் தயாரித்து இந்தியாவின் எதிர்கால அரசமைப்புச் சட்டத்தில் சேர்ப்பதற்காகச் சிறுபான்மைக் குழுவிடம் சமர்ப்பித்தார். அந்தத் திட்டத்தில் மற்ற மக்களுக்கு வழங்கியதைப் போன்றே தீண்டப்படாத மக்களுக்கும் குடியுரிமை வழங்க வேண்டும்; தீண்டாமை, அடிமைத்தனம் நீக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார். சட்டசபை களில் தீண்டப்படாதவர்களுக்குப் போதிய பிரதி நிதித்துவம் வழங்கப்படவேண்டும். தனி வாக்காளர் தொகுதி மூலம் தங்கள் பிரதிநிதிகளைத் தாங்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும். அரசு ஊழியத்தில் மக்கள் தொகைக்கு ஏற்பப் பிரதிநிதித்துவம் தரப்பட வேண்டும்.. அரசுத் தேர்வாணைக் குழுவில் போதிய பிரதி நிதித்துவம் வழங்கவேண்டும் என்றும் கோரி யிருந்தார்.

அம்பேத்கர் தீண்டப்படாதார் பிரச்சினைகள் குறித்து அரசியல் பிரமுகர்களிடம் விளக்கினார் பத்திரிக்கை களில் எழுதினார்; கூட்டங்களில் பேசினார், தன் கோரிக்கைகளுக்கு ஆதரவைத் திரட்டினார். அதன் விளை வாகப் பிரிட்டிஷ் நாடாளுமான்றத்தில் அம்பேத்கரின் கோரிக்கைகளுக்கு நிறைய ஆதரவுக் குரல்கள் எழுந்தன..

அமைக்கப்படவுள்ள சட்டசபைகளில் பல்வேறு வகுப்பினரும் கோரிய இடஒதுக்கீடு தேர்தல் முறை யில் தனிவாக்காளர் தொகுதியை அளிப்பதா அல்லது கூட்டு வாக்காளர்கள் தொகுதி அடிப்படையில் இட ஒதுக்கிடு அளிப்பதா என்பவற்றில் எழுந்த கருத்து வேற்றுமை காரணமாக வட்டமேசை மாநாடு ஒத்தி வைக்கப்பட முடிவானது. பின் பல்வேறு துணைக்குழுக் களின் அறிக்கையை பதிவு செய்தபின் வட்டமேசை மாநாடு 1931 சனவரி 31 ஆம் நாள் ஒத்திவைக்கப் பட்டது.

லண்டனில் இருந்தபோது, மகத் துணை நீதிமன்றத் தில் நடைபெற்ற சௌதார் குள உரிமைப் போராட்ட வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு வைதிகர்களுக்கு எதிராக அமைந்தது என்ற செய்தியை அம்பேத்கர் அறிந்தார். பம்பாய் மாநிலச் சட்டசபை உறுப்பினராக அம்பேத்கர் நியமிக்கப்பட்டார் என்ற செய்தியையும் அறிந்தார். 1931 பிப்ரவரி 13 ஆம் நாள் அம்பேத்கர் இந்தியாவிற் குப் பயணமானார். பிப்ரவரி 27 ஆம் நாள் பம்பாய்

வந்து சேர்ந்தார். அம்பேத்கருக்கு, பம்பாயில் அம்பேத்கர் சேவாதளத் தொண்டர்கள், சங்கர்ராவ் வத்வல்கர் தலைமையில் உற்சாகமான வரவேற்பளித்தனர். அந்த வரவேற்பில், அம்பேத்கர், தீண்டப்படாதவர்கள் உரிமைகளைப் பொறுத்தவரையில் வட்டமேசை மாநாடு மாபெரும் வெற்றிதான் என்று கூறினார்.

மகாத்மா காந்தி முதல் வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை. காந்தி 1930 மார்ச் 12 அன்று உப்புமீது சுமத்தியவரியை எதிர்த்து தண்டி யாத்திரையைத் தொடங்கினார் 1930 ஏப்ரல் 6 அன்று தண்டியில் உப்பு காய்ச்சி எடுத்தார். ஆயிரக்கணக்கில் மக்கள் இந்தச் சட்டமறுப்பு இயக்கத்தில் ஈடுபட்டு சிறை புகுந்தனர். காந்தியை 5, மே 1930 இல் கைது செய்தனர். அதனால் முதல் வட்டமேசை மாநாட்டில் காங்கிரஸின் பிரதிநிதிகளாக எவரும் பங்கேற்கவில்லை..

1931 மார்ச் 5ஆம் நாள் காந்தி - இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டது. காந்தி சட்டமறுப்பு இயக்கத்தைக் கைவிட ஒப்புதல் அளித்த பின்னரே காந்தியும் மற்ற வன்முறையில் ஈடுபடாத அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட்டனர். இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் காந்தி பங்கேற்கவும் இசைந்தார்.

*- தொடரும்*

## வையவன் சொல்வெளி நூல் வெளியீடு



திருவண்ணாமலையில் 16.12.17 சனிக்கிழமையன்று ஆண்டாள் சிங்காரவேலு திருமண மண்டபத்தில் பாவலர் வையவனின் 'சொல்வெளி' கவிதைநூல் வெளியீட்டுவிழா முருகையன் நினைவு மாதிரி மேல்நிலைப் பள்ளியின் தாளாளர் திரு.சீனி கார்த்திகேயன் தலைமையில் நடைபெற்றது. திருவண்ணாமலை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திரு வெ.ஜெயக்குமார் நூலை வெளியிட , மாவட்ட வருவாய் அலுவலர் திரு சு.செல்வ அரசு, தொழிலதிபர் சி.சி.துரை ஆகியோர் பெற்றுக் கொண்டனர். தோழர்கள் மா.முருகேசன், இரா.ப.அண்ணாதுரை, மா.இராசன்பாபு, சா.பாலமுருகன், செஞ்சி தமிழினியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். ஓவியர் இராமச்சந்திரன் நிறைவுரையாற்ற வையவன் ஏற்புரை வழங்கினார். பேராசிரியர் ஆ. ஏகாம்பரம் வரவேற்றார். ஆசிரியர் அ.லீ.ரெக்ஸ் வெண்மணி நன்றி கூறினார். ஆசிரியர் அ.நாராயணன் நிகழ்ச்சியை சிறப்பாகத் தொகுத்து வழங்கினார்.

## காஞ்சி அரங்க. சானகிராமன் நினைவேந்தல் - படத்திறப்பு நிகழ்வு



திராவிடர் கழகத்தில் 45 ஆண்டுகள் பணியாற்றியவரும், பல்லவன் நகர அரிமா சங்கத்தில் மக்கள் நலப் பணிகள் செய்தவரும் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியில் வேளாண் அணிச் செயலாளருமான காஞ்சி அரிமா அரங்க. சானகிராமன் 27.11.2017ல் மறைந்தார்.

அன்னாரது படத்திறப்பு நிகழ்வு-10.12.2017 ஞாயிறன்று காலை 10.00 மணியளவில் மேற்கு ராசவீதி, காஞ்சிபுரம் மௌஷிகா பார்ட்டி அரங்கில் நடைபெற்றது.

படத்திறப்பு நிகழ்வுக்கு தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் சி.வி.எம்.அ.சேகரன் தலைமை ஏற்றார். மா.பெ.பொ.க. பொதுச் செயலாளர் தோழர் வே.ஆனைமுத்து, மறைந்த அரங்க.சானகிராமன் படத்தினைத் திறந்து வைத்தார்.

திருவாளர்கள், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் சென்னை உ.பலராமன், திராவிடர்கழக மாவட்டத் தலைவர் டி.ஏ.ஜி.அசோகன், தி.மு.க. தலைமைக் கழகப் பேச்சாளர் நாத்திகம் நாகராசன், சி.எல்.ஆனந்தன், புஞ்சை வில்லவன், பேராசிரியர் மணிமேகலை தி.க.சுந்தர், முற்போக்கு சமூகநீதிப் பேரவைத் தலைவர் க.கோதண்டன், எம்.ஜனதா சம்பத், தானிய வியாபாரிகள் சங்கம், ஆர்.வி.குப்பன், காஞ்சி பெருநகரத் தலைவர், அ.இ.காங்கிரஸ், வி.பன்னீர் செல்வம், அ.இ.காங்கிரஸ், வேதாச்சல நாயகர் (வன்னியர் சங்கம்) குறளமிழ்தன் (திருக்குறள் பேரவை), சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் சக்தி கமலாம்பாள் (பா.ம.க) மா.பெ.பொ.க. துணைப் பொதுச் செயலாளர் தோழர் சி.பெரியசாமி, மா.பெ.பொ.க. மாவட்டச் செயலாளர் சி.நடராசன் மற்றும் டி.ஏ.ஜி.அன்பழகன், அன்புமணி ஆகியோர் சானகிராமனின் பொதுத்தொண்டினைப் பாராட்டி உரையாற்றினர்.

இந்நிகழ்வில் தோழர்கள் தாம்பரம் மா.சுப்பிரமணி குடும்பத்தினர், ப.வடிவேலு குடும்பத்தினர், தாம்பரம் கு.கிருட்டிணமூர்த்தி, இரா.பச்சைமலை, மா.பெ.பொ.க. துணைப் பொதுச் செயலாளர் துரை சித்தார்த்தன், கீழம்பி வ.வேதகிரி, சி.பழனி, சீமான், ஆரியம்பெரும்பாக்கம் வ.கிருஷ்ணன், கவிஞர் காவிரிநாடன், மா.பெ.பொ.க. நாகை மாவட்டச் செயலாளர் சீர்காழி முத்து அன்பழகன், காஞ்சி மு.செயப்பிரகாசு, தீ.கோபாலா கிருஷ்ணன், மா.துணைச் செயலாளர் இரா. நாராயணமூர்த்தி, மா.கோதண்டபாணி, சிவகுமார், சா.கிருட்டிணன் ஆகியோர் பங்கேற்றனர். நிகழ்வு 1.45 மணியளவில் முடிவுற்றது.

தோழர்கள் அனைவருக்கும் அ.சா.கௌதமன், அ.சா.அன்பழகன் உணவளித்தனர்.

## வாழ்க்கை ஒப்பந்த விழா

**இளவெயினி - உமாசங்கர்**

**பல்லடம் திருமேனி (ஈசுவரமூர்த்தி) இல்லத் திருமணம்**



நெடுநாளையத் தென்மொழி அன்பரும், தென் மொழி தமிழ்ச்சிட்டு முகவருமாகிய பல்லடம் செ. திருமேனி-சாந்தி இணையரின் மூத்தமகள் இளவெயினி, திருப்பூர் அக்கணம் பாளையம் இரா. சாமிநாதன் - வளர்மதி இணையரின் மூத்த மகன் உமாசங்கர் ஆகியோர் திருமணம் திருப்பூர், ஆர்.பி. எசு அலமேலு திருமண மண்டபத்தில் தி.பி.2048 துலாம் 13 (30.10.2017) திங்கட்கிழமையன்று இனிதே நடந்தேறியது.

சிவநெறிச் செல்வர் ஆறுமுகம் அவர்களால் தீந்தமிழ் நெறிப்படி நடைபெற்ற இத்திருமணத்தில் மணவிழா மகிழ்ச்சி வெளியீடாகப் புதுவை அறிஞர் பெரும்பாவலர் ம.இலெ. தங்கப்பா அவர்களின் வாழ் வியல் கட்டுரைகளின் சாரத் திரட்டான 'மணக்கும் வாழ்வு' நூல் வெளியிடப்பெற்று விருந்தி னர்களுக்கு வழங்கப் பெற்றது. முன்னதாக தங்கப்பா அவர் களின் சிறப்பியல்களை மெய்யறிவின்பனார் (பல்லடம் ந. முத்துக்குமரன்) எடுத்துரைத்தார். திருமேனியின் பள்ளித் தோழர்களான திரு. க. ஈசுவரமூர்த்தி (தொழில் முனை வோர், சென்னை) அவர்கள் வெளியிட திரு. ஆ. செல்வ துரை (அமெரிக்கா) அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

விழாவில் திரளான தமிழன்பர்களும், உறவினர்களும், பெரியாரியல் தோழர்களும் கலந்து கொண்டனர். இத்திருமண மகிழ்வாக ரூ.1000/- மணமகளின் தந்தை வழங்கினார்.

செய்தி : செந்தேவன்


❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

## உவமைக்கவிஞர் சுரதா அவர்களின் இல்லத் திருமண வரவேற்பு விழா

உவமைக் கவிஞர் சுரதா-சுலோச்சனா இணையர் களின் பெயரன், சுரதா கல்லாடன் - இராஜேஸ்வரி இணையரின் மகன் இளங்கோவனுக்கும், சுப்புராயன் - தேவகியம்மாள் பெயர்த்தி, என்.எஸ். சேகர் - சித்திரா இணையர்களின் மகள் திவ்வியாவிற்கும் திருமண வரவேற்பு நிகழ்ச்சி 01.12.2017 வெள்ளிக் கிழமை மாலை 6.30 மணிக்கு சென்னை அசோக் நகர் நூறடி சாலையில் லட்சுமி ஹாலில், நல்லக்கண்ணு தலைமையில் நடைபெற்றது. ராஜேஸ்வரி வரவேற்புரை யாற்றினார். தொல். திருமாவளவன், நல்லிகுப்புசாமி, முன் னாள் அமைச்சர் துரைமுருகன் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினர். உவமைக் கவிஞர் சுரதா மங்கையர் திலகம் சுலோச்சனா விருதினை தொல். திருமாவளவன் அவர்களுக்கு நல்லக்கண்ணு வழங்கினார்.

சுரதாவின் தேன்மழை நூலின் 100ஆவது பதிப்பை நல்லிகுப்புசாமி வெளியிட்டார். வி.ஜி. சந்தோசம், கவிஞர் அறிவுமதி ஆகியோர் பெற்றுக் கொண்டனர். சுரதா கல்லாடன் நன்றி கூறினார்.

## வாரியங்காவல் கு. இராமசாமி மறைந்தார்



அரியலூர் மாவட்டம், ஆண்டி மடம் வட்டம் தாலுக்கா, வாரியங் காவல் கிராமத்தில் 29.4.1924இல் வா.கு. இராமசாமி (94 வயது) பிறந்தார். திருச்சி அருகில் உள்ள லால்குடி அரசு மேல்நிலைப்பள்ளி விடுதியில் தங்கிப் பயின்றார். தான் படிக்கும் காலத்திலேயே தந்தை பெரியார், அறிஞர் அண்ணாவின் பகுத்தறிவுக் கொள்கையால் ஈர்க் கப்பட்டு, திராவிட இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டார்.

1945ஆம் ஆண்டில் அரியலூர் பகுதியில் முதன்முத லாகச் சீர்திருத்தத் திருமணம் செய்துகொண்டவர். வருவாய்த் துறையில் ஆய்வாளராகத் தன் பணியைத் தொடங்கி, செயங்கொண்டம், அரியலூர், செந்துறை, கரூர், துறையூர் போன்ற ஊர்களில் பணியாற்றி, பின்னர் வட்டாட்சியராகப் பணிபுரிந்து ஓய்வுபெற்றார்.

தமிழ்மேல் கொண்டுள்ள பற்றுதலால் தன் மனைவி யின் காமாட்சி என்னும் பெயரை இன்பவல்லி என்றும், தன் மகளுக்கு இளவரசி, மகன்களுக்கு பன்னீர்செல்வம், நெடுஞ்செழியன், அண்ணாதுரை, அறிவழகன் எனப் பெயர் சூட்டி மகிழ்ந்தார். மகன்களை நன்கு படிக்க வைத்து பொறியாளராகவும், மருத்துவராகவும் உயர்த்தியவர்.

முதுபெரும் பகுத்தறிவாளரும் திராவிட இயக்க முன் னோடியுமான தோழர் வி.கே. இராமசாமி அவர்கள் 9.12.2017இல் மறைவுற்றார்.

செய்தி : திருச்சி **ந. கருணாகரன்**

**இரஷ்யப் புரட்சி நூற்றாண்டுக் கட்டுரை**

# மார்க்சியத் தத்துவ உருவாக்கத்தில் மார்க்சும் ஏங்கல்சும் சில சந்திப்புகள்

- ந. முத்துமோகன்

மார்க்சு, ஏங்கெல்சு ஆகிய இருவருக்கும் இடையில் ஓர் அற்புதமான வேலைப் பிரிவினை நிலவியது. பொதுவான பல வேலைகளை அவர்கள் இணைந்து செய்தது போக, அவர்கள் தனித்தனியாகவும் பல வேலைகளைச் செய்து முடித்தனர். மார்க்சைப் பொறுத்தமட்டில், அவரது கவனம் பெருமளவில் மார்க்சியக் கோபாட்டு உருவாக்கத்திலும் அடுத்த கட்டத்தில் "மூலதனம்" நூலிலும் குவிந்திருந்தது. வரலாறு குறித்த பொருள் முதல்வாதப் புரிதலும், உபரிமதிப்பு குறித்த அரசியல் பொருளாதாரக் கோட்பாடும் மார்க்சின் இரண்டு மேதமை கொண்ட கண்டுபிடிப்புகள் என்று ஏங்கெல்சு எடுத்துக்காட்டுவார்,

வரலாறு குறித்த பொருள்முதல்வாதப் புரிதல் மார்க்சின் காத்திரமான தத்துவ உழைப்பை அடிப்படையாகக் கொண்டது. "கம்யூனிஸ்ட் அறிக்கை" வெளிவந்த 1848ஆம் ஆண்டிற்கு முன்னதும் பின்னதுமான ஆண்டுகளில் மார்க்சு இந்தத் தத்துவப் பணியைச் செய்து முடித்தார். மார்க்சின் வாழ்க்கைக் காலத்தில் நடுப்பகுதியிலிருந்து இறுதிக் காலம் வரையிலான அவரது உழைப்பு. சமகாலச் சமுதாயமான முதலாளித்துவம், அதன் பொருளாதார உற்பத்தி முறை ஆகியவை தொடர்பானது. அவைதாம் உபரி மதிப்பு குறித்த கோட்பாட்டின் எல்லைகளையும் குறித்தன. மார்க்சின் வாழ்க்கை முழுவதையும் மேற்குறித்த இரண்டு கண்டுபிடிப்பு களும் அவற்றுக்கான உழைப்பும் ஆக்கிரமித்திருந்தன என ஒரு வசதிக்காகச் சொல்லலாம்.

ஏங்கெல்சைப் பொறுத்தமட்டில், அவர் மார்க்சின் இணைபிரியாத நண்பர். மார்க்சு என்ன செய்து கொண்டி ருந்தார்; அவருக்கு என்ன தேவைகள் இருந்தன; வேலை களுக்கு நடுவில் இட்டு நிரப்ப வேண்டிய இடைவெளிகள் யாவை என்பவற்றை அவர் நன்கு அறிந்திருந்தார். மார்க்சை ஏங்கெல்சு எப்போதுமே அணைத்து நின்றார். மார்க்சு என்ற இளம் தத்துவ அறிஞரில் முதலாளியப் பொருளாதாரம் குறித்த ஆர்வங்களை ஏற்படுத்தியவர் ஏங்கெல்சு என்று ஒரு சித்தரிப்பு உண்டு. வரலாற்றுப் பொருள்முதல்வாதப் புரிதலை உருவாக்கிக் கொள்ள மார்க்சு போராடிக் கொண்டிருந்த காலங்களில், 1843இல் "அரசியல் பொருளாதார விமர்சனம் குறித்த பொது வரையறைகள்" என்று ஒரு கட்டுரையை ஏங்கெல்சு எழுதினார். இன்னும் சில ஆண்டுகளில், 1845இல் ஏங்கெல்சு "இங்கிலாந்தில் தொழிலாளர் வர்க்கத்தின் வாழ்க்கைச் சூழல்கள்" என்றொரு நூலை எழுதி வெளி யிட்டார். இந்த இரண்டு படைப்புகளும் அவை சார்ந்த கலந்துரையாடல்களுமே மார்க்சிடம் அரசியல் பொருளாதார ஆர்வங்களை ஏற்படுத்தின என்று ஆய்வாளர்கள் குறிப்பிடு கின்றனர். இது மார்க்சு ஏங்கெல்சு உறவுகளில் ஒரு பரிணாமம். இதுபோலப் பல வேளைகளில் அவர்கள் இருவரும் ஒருவருக்



கொருவர் அறிவுப்புல வட்டாரங்களில் புதிய ஆர்வங்களை ஏற்படுத்திக் கொண்டனர். நூல்களைச் செய்திகளைப் பகிர்ந்து கொண்டனர்.

1848ஐ ஒட்டிய ஆண்டுகள் மார்க்சு ஏங்கெல்சுக்கு மிக நெருக்கடியான ஆண்டுகள். ஹெகல், ஃபாயர்பாக் ஆகியோரின் செல்வாக்கிலிருந்து விடுபட்டு புதிய சிந்தனை அவர்களிடத்தில் உருவான ஆண்டுகள் அவை. இளம் ஹெகலியர் போன்ற அமைப்புகளில் இணைந்து வேலை செய்த நண்பர்களையும் தோழர்களையும் மார்க்சும் ஏங்கெல்சும் கடந்து நடந்த காலங்கள் அவை. புதிய நிலைகளை எட்டிய போது பலருடன் அவர்களுக்கு மோதல்கள் ஏற்பட்டதுண்டு. மார்க்சு ஆக்ரோஷத் துடன் வாதப் பிரதிவாதங்களில் ஈடுபடுவார் என்ற தகவலை அவரது வாழ்க்கை வரலாற்றை எழுதிய ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். புதிதாக உருவான "மார்க்சிய"த்தை மார்க்சின் நண்பர்களே அங்கீகரித்துவிடவில்லை. "மார்க்சியம்" ஓரளவு அங்கீகரிக்கப்பட்டு பரவிய நாள்களில், முதலாம் கம்யூனிஸ்ட் அகிலம் உருவான போது, அதனுள் நிகழ்ந்த கருத்துப் போராட்டங்களும் காத்திரமானவை. இத்தகைய சூழல்களில்தான் ஏங்கெல்சு என்ற மார்க்சின் நண்பரின் மற்றுமொரு பரிமாணம் வெளிப்பட்டது. புரூனோ பௌவர், டூரிங்க், ப்ரௌதன், மாக்ஸ் ஸ்டனர், மிகயில் பகூனின் போன்ற பலருடன் மார்க்சு ஏங்கெல்சுக்கு கருத்து வேறு பாடுகள் திரண்டன. அது உக்கிரமான ஒரு விவாதச் சூழல், உரையாடற் சூழல், மோதல் சூழல், மார்க்சை அத்தகைய சூழல்களில் வியூகம் கட்டிப் பாதுகாப்பது போன்ற ஒரு பணியை ஏங்கெல்சு செய்துவந்தார். ஏங்கெல்சு இராணுவ உத்திகள் தெரிந்தவர். எனவே போராட்ட வியூகங்கள் வகுப்ப திலும் அவர் திறன்கொண்டவராக இருந்தார். இது அவரது இரண்டாவது முக்கியமான பரிமாணம் என்று கொள்ள வேண்டும்.

1848-50களில் செர்மனியிலும் இன்னும் சில ஐரோப்பிய நாடுகளிலும் ஒரு தொழிலாளர் எழுச்சியை மார்க்சும் ஏங்கெல்சும் எதிர்நோக்கினர். ஐரோப்பியத் தொழிலாளர் எழுச்சி திரளும் போது, பூர்ஷ்வா வர்க்கம் எத்தகைய நிலைப் பாட்டை எடுக்கும்? பூர்ஷ்வா வர்க்கம் ஐரோப்பிய நாடுகளின் நில உடைமை வர்க்கத்தோடு எத்தகைய உறவினைக் கொண்டிருக்கும்? பூர்ஷ்வா வர்க்கம் மாற்றங்களை விரும்பும் ஒரு வர்க்கம் என்ற முறையில் பழமைவாத நில உடைமைச் சக்திகளைப் புறந்தள்ளும் என்றும் மார்க்சு எதிர்பார்த்தார். ஆயின் 1848-50ஆம் ஆண்டுகள் மார்க்சுக்கு அதிர்ச்சிகளை ஏற்படுத்தின. செர்மனியிலும் பிரான்சிலும் பூர்ஷ்வா வர்க்கம் நில உடைமையாளர்களோடு உடன்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டது. இரண்டு ஆளும் வர்க்கங்களும் சேர்ந்து விவசாயிகளையும் தம்பக்கம் சேர்த்துக் கொண்டன. தொழிலாளர் வர்க்கம் தனிமைப்பட்டது. எழுச்சிகள் தோற்கடிக்கப்பட்டன.

நவீன பூர்ஷ்வா வர்க்கத்தின் வரலாற்று ரீதியான முற்போக்குப் பாத்திரம் மிகக் குறைந்த ஓர் எல்லைக்குட்பட்டது என்பதை மார்க்சும் ஏங்கெல்சும் உணர்ந்து கொண்ட சந்தர்ப்பம் என அதனைக் கொள்ள வேண்டும். மார்க்சும் ஏங்கெல்சும் விவசாயிகளைப் பற்றிய தமது சிந்தனைகளை விரிவுபடுத்த முடிவு செய்தனர். மார்க்சு, சமகால உடனடி அரசியலில் ஆளும் வர்க்கங்களின் சூதாட்டங்களைப் பற்றிக் கோபத்தோடு எழுதினார். நகர்ப்புறத் தொழிலாளர் வர்க்கம் மற்றொரு பிரதான உழைக்கும் வர்க்கமான விவசாயிகளோடு நிரந்தரமான சமூக அரசியல் கூட்டணியை அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற முடிவுக்கு மார்ச்சு வந்து சேர்ந்தார். மற்றொருபுறம், ஏங்கெல்சு, செர்மானிய வரலாற்றில் விவசாயிகளின் பாத்திரம் பற்றிய ஆய்வுகளில் அக்கறை காட்டினார். வரலாறு முழுவதிலும் விவசாயிகள் நில உடைமைக்கு எதிரான கலகங்களிலும் எழுச்சிகளிலும் இரகசிய சங்கங்களை உருவாக்குவதிலும் ஈடுபட்டு வந்திருப்பதை அவரால் இப்போது காணமுடிந்தது. நில உடைமையை ஆதரித்து நின்ற அரசாங்கத்தையும் கத்தோலிக்க கிறித்தவ சமயத்தையும் விவசாயிகள் விட்டு வைக்கவில்லை. ஆயுதமேந்திய போராட்டங்களையும் அவர்கள் முன்னெடுத்தனர். விவசாயிகளின் எழுச்சிகள்தாம் வரலாற்றின் மிகப்பெரும் நிறுவனமான கிறித்தவ சமயத்தை இரண்டாகப் பிளந்தன. கத்தோலிக்கம், சீர்திருத்தக் கிறித்தவம் என்ற இரண்டு சமயங்கள் உருவாயின. இதுகுறித்த ஆய்வுகளைக் கொண்டுதான் ஏங்கெல்சு "செர்மனியில் விவசாயிகளின் போர்" என்ற நூலை எழுதி வெளியிட்டார். ஒரு முக்கியமான அரசியல் வேலைத் திட்டத்தைத் தன்னுள் கொண்டுள்ள நூல் அது. விவசாயிகளால் முடியுமா? என்ற கேள்விக்கு இந்நூல் பதில் சொல்லியது. இந்நூல் உருவாக்கம் ஏங்கெல்சின் மூன்றாவது பரிமாணத்தைக் குறித்து நிற்கிறது. முக்கியமான சந்தர்ப்பங்களில் இது போன்ற நூல்களை ஏங்கெல்சு எழுதி வழங்கினார் என்பதைக் கவனத்தில் கொள்வோம்.

மார்க்சு, "மூலதனம்" நூலின் உருவாக்கத்தில் இயங்கியல் தத்துவத்தின் முழு ஆற்றலையும் பயன்படுத்தியிருந்தார். இயங்கியலைப் பற்றித் தனியாகவே - ஒரு நூலை எழுத அவர் நினைத்திருந்தார். ஆயின் அவரது முடிவுறா வேலைகளுக்கு இடையில் அது சாத்தியப்படவில்லை. இத்தகைய சூழல்களில் ஏங்கெல்சு இயங்கியல் பற்றிய தகவல்களைத் திரட்டத் தொடங்கினார். குறிப்பாக, நவீன விஞ்ஞானங்கள் இயங்கியல் குறித்து வழங்கும் ஆதாரங்களில் அவர் கவனம் செலுத்தினார். "இயற்கையின் இயங்கியல்" என்ற தலைப்பில் இன்று கிடைக்கும் நூல் அத்தகைய முயற்சியில் உருவான நூலே. அது முழு வடிவம் பெறாமல் பல இடங்களில் குறிப்புகளாகவே உள்ளது. மார்க்சியத்திற்கு விஞ்ஞானங்களின் ஆதரவை இந்நூல் கோரி நின்றது. இந்நூலின் உருவாக்க முயற்சி ஏங்கெல்சின் நான்காவது பரிமாணத்தைக் குறித்து நிற்கிறது எனலாம்.

இந்நூலுக்கு "இயற்கையின் இயங்கியல்" எனத் தலைப்பிட்டிருப்பது பொருத்தம் தானா? என்ற கேள்வியில் நியாயம் உண்டு. இந்நூலுக்கு, "இயற்கை விஞ்ஞானங்களின் இயங்கியல்" என்ற தலைப்பிட்டிருக்கலாம். ஏனெனில், மொத்த இயற்கையின் இயங்கியலை இந்நூல் பேசிவிடவில்லை. மாறாக, நவீன விஞ்ஞானங்கள் வழங்கும் தகவல்கள், வகைப்படுத்தல்கள், விஞ்ஞானக் கோட்பாடுகள் முதலானவற்றில், விஞ்ஞானிகள் தம்மை அறியாமலேயே வெளிப்படுத்தும் இயங்கியல் உண்மைகளை ஏங்கெல்சு இந்நூலில் பதிவு செய்துள்ளார். விஞ்ஞான அறிஞர்கள் தன்னிச்சையாகப் பயன்படுத்தும் இயங்கியல் முறைமைகளை ஏங்கெல்சு எடுத்துக்காட்டுகிறார்.

மார்க்சின் மறைவுக்குப் பிறகு, "மூலதனம்" நூலின் பிற்பகுதி எழுத்துக்களைப் பதிப்பித்து வெளியிடும் ஏங்கெல்சின் மீதொரு மிகப்பெரிய பரிமாணத்தைச் சந்திக்கிறோம். மார்க்சின் வாழ்நாள் முழுவதும் அவருக்குப் பொருளாதார உதவிகள் செய்து, அவருடன் நின்ற ஏங்கெல்சு பற்றிய தகவல்களையும் இங்கு மற்றுமொரு பரிமாணமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும். மார்க்சை எப்போதுமே அணைத்து நின்று ஏங்கெல்சு மேலெடுத்துச் செய்துவந்த மேற்குறித்த வேலைகளின் தொடர்ச்சியாகத்தான் "குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்" என்ற இந்நூலையும் காண வேண்டும்.

அமெரிக்க மானுடவியல் அறிஞரான மோர்கனின் "பண்டைய சமூகம்" என்ற நூலைப் (1877) படித்து மார்க்சு எழுதி வைத்திருந்த குறிப்புகள் இப்போது "இனவியல் நோட்டுப் புத்தகங்கள்" என்ற தலைப்பில் நமக்குக் கிடைக்கின்றன. மோர்கனின் நூலின் முக்கியத்துவத்தை உணர்ந்து மார்க்சும் ஏங்கெல்சும் அதுகுறித்து எழுதவேண்டும் என ஏற்கெனவே திட்டமிட்டிருந்தனர் என்பதை உணர முடிகிறது. ஆயின் மார்க்சின் பிற பணிகளும் பின்னர் அவரது மரணமும் அத்தகைய ஒரு நூலை வரவிடாமல் ஆக்கிவிட்டன. எனவே அப்பணியைத் தான் ஒருவரேயாயினும் செய்துமுடிக்க வேண்டும் என்ற முனைப்பிலேயே ஏங்கெல்சு அதனை மார்க்சின் மறைவுக்குப்பின் செய்து முடித்துள்ளார். மார்க்சு தனது கையெழுத்துப் பிரதிகளில் எழுதி வைத்திருந்த

குறிப்புகளைக் கொண்டே ஏங்கெல்சு இந்நூலை உருவாக்கி யுள்ளார் என்பதையும் தனது முன்னுரையில் குறிப்பிடுகிறார்.

ஏங்கெல்சு எந்தத் தயக்கமும் இன்றி, மார்க்சிய சிந்தனை உருவாக்கத்தில் மார்க்சு வகிக்கும் இடம் குறித்துத் தெளிவாகச் சொல்லுகிறார்: மார்க்சு ஒரு மேதை. நாங்கள் திறமைசாலிகள். நாங்கள் இல்லாமலே கூட நாங்கள் செய்துள்ளவற்றை மார்க்சால் செய்திருக்க முடியும்; ஆயின் அவரின்றி எங்களில் எவரும் அவர் செய்துள்ளவற்றைச் செய்திருக்க முடியாது என்று அவர் குறிப்பிடுகிறார்.

மார்க்சைப் பற்றி ஏங்கெல்சு நட்புணர்வுடனும் உண் மையுடனும் கூறியுள்ளவற்றை ஏங்கெல்சுக்கு எதிராகவே பயன்படுத்துபவர்கள் இருக்கின்றனர். மார்க்சிய உருவாக்கத் தில் ஏங்கெல்சின் பங்களிப்பைப் பின்னுக்குத் தள்ளி அவர் மீது குற்றச்சாட்டுகளை அவர்கள் சுமத்துகின்றனர். அவற்றில் சிலவற்றை இங்கு வரிசைப்படுத்துவோம்.

மார்க்சியத்தில் பொருளாதார நிர்ணயவாதம் உருவாவ தற்குக் காரணமாக அமைந்தவர் ஏங்கெல்சு. பொதுவாகவே மார்க்சியத்தைச் சில சூத்திரங்களாகச் சுருக்கிக் காட்டியவர் அவர். ஏங்கெல்சின் எழுத்துக்களில் மார்க்சியம் அதன் படைப்புத் தன்மையை இழந்து வாய்ப்பாடாக மாறிவிட்டது. சமூக வாழ்க்கைக்குச் சொந்தமான இயங்கியலை ஏங்கெல்சு இயற்கைக்குச் சொந்தமானதாகச் சித்தரித்தார். மனிதப் பங்கேற்பின்றி இயங்கியல் கிடையாது. ஏங்கெல்சு ஒரு புறவயவாதி. ஏங்கெல்சு ஒரு விஞ்ஞானவாதி. மார்க்ஸ் மனிதநேயவாதி. கிட்டத்தட்ட சோவியத் அறிஞர்கள் ''எளிமைப் படுத்தி'' வழங்கிய ஸ்டாலினிய மார்க்சியத்திற்கு முன்மாதிரி யாக ஏங்கெல்சின் மார்க்சியம் அமைந்தது. இவையெல்லாம் ஏங்கெல்சின் மீது சொல்லப்படும் குற்றச்சாட்டுகள்.

ஏங்கெல்சு மீதான இந்தக் குற்றச்சாட்டுகளை மீறி நிற்கும் நூல் ''குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்'' எனும் இந்நூல். இந்த நூலின் மிகப்பெரிய சிறப்பு, இது மார்க்சு தனது முழுக் கவனத்தையும் செலுத்திய நவீன முதலாளிய யுகத்திற்கு முந்திய (Pre-Capitals) மிக நீண்ட வரலாற்றுக் காலக்கட்டத்தைப் பரவி நிற்கிறது. ஏடறியா வரலாற்றுக் காலம் என அழைக்கப்படும் புராதன சமூக அமைப்பில் தொடங்கி சில அபூர்வமான தொடர்ச்சிகளின் காரணமாக மத்திய காலத்தின் பிற்பகுதி வரை நீடிக்கும் வரலாற்றுக் காலத்தை ஏங்கெல்சின் நூல் தழுவி நிற்கிறது. முதலாளியத்திற்கு முந்திய யுகம் பற்றிய இந்நூலின்றி உண்மையில் இன்றைய மார்க்சியத்தை முழுவடிவில் உருவகிப்பதே சாத்தியமில்லாத ஒன்றாகும். பண்டைய வரலாறு சார்ந்த ஒரு மிகப்பெரிய இடைவெளியை இட்டு நிரப்பும் நூலாக இது அமைந்துள்ளது.

மோர்கன் எனப்படும் மானுடவியல் அறிஞரின் நூலில் தரப்பட்டுள்ள புராதன குடும்பம், ஆண்-பெண் பாலியல் உறவுகள், அரசு நிறுவனம் ஆகியன குறித்து கள ஆய்வு களின் அடிப்படையில் சேகரிக்கப்பட்ட தகவல்கள், விளக்கங்கள் ஆகியவற்றை மார்க்சிய வரலாற்றுப் பொருள் முதல்வாதப் புரிதல் அடிப்படையில் மறு வாசிப்பு செய்து எழுதப்பட்ட நூல் இது, பலவகை மண உறவுகள், குலம், குடும்பம் சார்ந்த இரத்த உறவுகள், தாய்வழிச் சமுதாயம், அது உடைந்து சிதறுதல், தனிச் சொத்துரிமையின் தோற்றம், குலம் சார்ந்த தன்னாட்சி முறை, வர்க்கங்களின் தோற்றமும் மோதல் களும், அரசு எனும் அடக்குமுறை எந்திரத்தின் தோற்றம் எனப் பலவகையான பழம் வரலாற்று நிகழ்வுகளை இந்நூல் விரிவாகப் பேசுகிறது. கிரேக்க, ரோமானிய, செர்மானிய மற்றும் அமெரிக்கச் செவ்விந்தியப் பழங்குடிகளின் வாழ்க்கைத் தரவுகளை இந்நூலில் மோர்கனைப் பின்பற்றி ஏங்கெல்சு எடுத்தாளுகிறார்.

ஏங்கெல்சை சில விமர்சகர்கள் பொருளாதார நிர்ணய வாதியாகச் சித்தரிக்கின்றனர் என்று மேலே குறிப்பிட்டோம். இந்நூலில் அப்படிப்பட்ட பொருளாதார நிர்ணயவாதத்தைக் காணமுடியாது. **மாறாக, 1884ஆம் ஆண்டு இந்நூலுக்கு ஏங்கெல்சு எழுதிய முன்னுரையில், இரண்டு வகையான உற்பத்தி வடிவங்களைச் சுட்டிக்காட்டுகிறார். அவை பொருளாதார உற்பத்தி மற்றும் மனித இனம் தன்னைத் தானே உற்பத்தி செய்து கொள்ளுதல். பொருளாதார உற்பத்தி மிகக்குறை வாகவே இருந்த பண்டைக்காலத்தில் குலமரபு உறவுகள் ஆதிக்கம் செலுத்தின. ஆயின் படிப்படியாக உற்பத்தி வளர்ந்த போது, பொருளுற்பத்தி உறவுகள் அவற்றை மீறி வளர்ந்து, குல மரபு உறவுகள் இரண்டாம் நிலைக்குச் செல்லுகின்றன. இவ்விரண்டு வகையான உறவுகளுக்கும் பொருந்தாநிலை ஏற்பட்டு அவை ஒரு புரட்சிக்கே இட்டுச் சென்றன என ஏங்கெல்சு எழுதுகிறார்.** ஏங்கெல்சின் நூல், குலமரபு உறவுகள் நிலவிய காலத்திய சமூக நிறுவனங்களையும் அவற்றிலிருந்து பொருள் உற்பத்தி உறவுகள் மீறி வளர்ந்த காலத்தையும் சித்தரிக் கின்றது. பொருளாதார அமைப்பு இன்னும் வலுப்படாத, வெளிப்படையாகத் தன்னை அறிவித்துக் கொள்ளாத காலத் தின் சமூக உறவுகளை, அச்சமூக உறவுகளின் இயங்கியலை இந்நூல் பேசுகிறது. பண்பாடு, அரசியல், பொருளாதாரம், வரலாறு ஆகிய பல பரிமாணங்களை மிக நுட்பமாக ஏங்கெல்சு இந்நூலில் ஒன்றிணைக்கிறார். இது வேறு எந்த ஒரு மார்க்சு-ஏங்கெல்சு நூலிலும் காணக்கிடைக்காத சித்திரம்.

வரலாறு என்ற துறையும் மானுடவியல் என்றதொரு துறையும் இந்நூலில் சங்கமமாகின்றன. வரலாறு, பழங்கால மக்கள் கூட்டங்களின் வாழ்க்கையைப் பேசத் தொடங்கும் போது, அது மானுடவியலுடன் இணைவது தவிர்க்க முடியாது என்பது உண்மைதான். இருப்பினும், மார்க்சியத்தின் முதலா சிரியர்களில் ஒருவரான ஏங்கெல்சே நேரடியாக இப்பணியை முன்னெடுத்துச் செய்துள்ளார் எனும் போது இந்நூலின் சிறப்பு பலமடங்கு உயர்கிறது.

மானுடவியல் என்ற ஒரு துறை ஐரோப்பாவில் தோற்றம் பெற்ற பல்வேறு சூழல்களுக்கு இடையில், குறிப்பிடத்தக்க அதன் ஒரு பங்களிப்பினைப் பற்றி இங்கு சொல்ல வேண்டும், 18-19ஆம் நூற்றாண்டுகளின் அறிவு முதல்வாதத்தின் (Rationalism) ஒற்றை நேர்கோட்டுப் போக்கைத் திசைதிருப்பி ஆய்வுலகின் கவனத்தைப் பண்பாட்டு ஆய்வுகளை நோக்கி

இட்டு வந்ததில் மானுடவியலுக்கு ஒரு முக்கிய இடம் உண்டு. அறிவு முதல்வாதிகள் முன்வைத்த அறிவுக்குப் பொருந்தாத பழம் சரக்குகளைப் புறம் தள்ளுங்கள் என்ற கோஷத்தை மௌனமாக மறுதலித்து நாட்டார் சமயங்கள், சடங்குகள், பழக்கவழக்கங்கள், வாய்மொழி வழக்காறுகள் ஆகியவற்றைப் பண்பாடு, சமூக உறவியல் மற்றும் பண்பாடு சார்ந்து விளக்கமளிக்கும் ஒரு துறையாக மானுடவியல் பரிணமித்தது. இந்த வகையில் அறிவு முதல்வாதத்தின் ஒற்றை நேர் கோட்டுப் போக்கிலிருந்து விலகிய ஒரு செழுமையான அணுகுமுறை மானுடவியலில் காணப்பட்டது. அறிவு முதல்வாதத்தை நெகிழ்வாக்கும் ஓர் இயங்கியல் மானுடவியலுக்கு அமைந்திருந்தது.

மூன்றாம் உலக நாடுகளைச் சேர்ந்த நம்மைப் பொறுத்த மட்டில் மானுடவியலின் ஆய்வுப் பரப்பு, பெருமளவில் ஆசிய, ஆப்பிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகளைச் சார்ந்தது என்பது கவனிக்கத்தக்கது, அதாவது, ஐரோப்பிய அறிஞர்களால் அநாகரிகமானவை, வளர்ச்சி அடையாதவை. மூடத்தனமானவை, அழுக்கானவை என்றெல்லாம் புறம் தள்ளப்பட்ட வாழ்க்கைக் கூறுகள் மானுடவியலின் மறுமதிப்பீட்டுக்கு ஆட்படுகின்றன. மானுடவியலும் மார்க்சியமும் சந்தித்துக் கொள்ளும் இவ் அணுகுமுறையை "குடும்பம், தனிச்சாத்து..." நூலில் ஏங்கெல்சு தொடங்கி வைத்தார் என்று கூறவேண்டும். பல ஐரோப்பிய அறிஞர்கள் மார்க்சிய ஆதரவு நிலைப்பாடுகளுடன் மானுடவியல் ஆய்வுகளில் ஈடுபட்டனர். மூன்றாம் உலக நாடுகளின் பல்கலைக்கழகங்களில் மானுடவியல், நாட்டார் வழக்காற்றியல் துறைகள் விருப்புடன் பயிலப்படுகின்றன. பேராசிரியர்கள் தேவி பிரசாத் சட்டோபாத்யாயா, நா. வானமாமலை, ஆ. சிவசுப்பிரமணியன் போன்றோர் இந்தியச் சூழல்களில் தமது மார்க்சிய நிலைப்பாடுகளுடன் ஊடும் பாவுமாக மானுடவியலின் பயன்பாட்டை உணர்ந்திருந்தனர். இன்றுவரை சமூக மானுடவியல், பண்பாட்டு மானுடவியல், பொருளாதார மானுடவியல், சூழல்சார் மானுடவியல், பெண்ணிய மானுடவியல் போன்ற துறைகள் இவ்வட்டாரத்தில் செழித்து வளர்ந்துள்ளன என்று கூறமுடியும்.

"மூலதனம்" நூலின் கறாரான பொருளாதார அணுகுமுறையைக் கொண்டு, மூன்றாம் உலக நாடுகளின் பொருளாதார அரசியலைப் புரிந்துகொள்ளுதல் ஒருவிதமான மார்க்சியம். ஆயின், "குடும்பம், தனிச்சொத்து..." நூலில் பேசப்பட்டுள்ள விடயங்களைக் கொண்டு மூன்றாம் உலக நாடுகளின் கலாச்சார அரசியல், அடையாள அரசியல், மத அரசியல், சாதியம், அரசு எந்திரத்தின் வட்டாரச் செயல்பாடுகள் போன்றவற்றைப் பயில்வது இன்னொரு வகையான மார்க்சியம். மூன்றாம் உலக அரசியலில் இவை கூட்டாகப் பயணிக்க முடியும்.

ஏங்கெல்சின் நூலிலிருந்து ஒரு மார்க்சியப் பெண்ணியத்தை உருவாக்க முடியும்; அது உருவாக்கப்பட்டுள்ளது. வரலாற்றின் முதல் வேலைப்பிரிவினையாக ஆண்-பெண் பிரிவினை அமைந்த போது, பாலியல் மண உறவுகள் புராதனச் சமூகத்தின் ஒழுங்கமைப்பை நிர்ணயித்த காலங்களில் அவற்றின் மொழியிலேயே ஆணாதிக்கமும் உருவான நிகழ்வை ஏங்கெல்சின் இந்நூலிலிருந்து வருவிக்க முடியும். வேலைப்பிரிவினைகளுக்கும் மண உறவு முறைகளுக்கும் பின்னால் ஆணாதிக்கச் சமூகத்தின் தனிச்சொத்துரிமை நலன்கள் அமைந்திருந்ததையும் ஏங்கெல்சு எழுதுகிறார். எனவே ஏங்கெல்சின் இந்நூலை சோசலிசப் பெண்ணியத்தின் முதல் நூலாகக் கொள்ளுவோர்கள் உண்டு, ஏங்கெல்சு குடும்ப அமைப்பின் பல்வேறு வரலாற்று வடிவங்களைப் பெண்-நலன்களின் நோக்கிலிருந்து அணுகியுள்ளார் என்ற கருத்து நிறுவப்பட்டுள்ளது. புராதனக் குடும்பம், நில உடைமைக் குடும்பம், பூர்ஷ்வா குடும்பம், உழைப்பாளிக் குடும்பம் எனக் குடும்ப அமைப்புகளை வித்தியாசப்படுத்திப் பார்க்கும் முறையியலை ஏங்கெல்சின் நூல் வழங்குகிறது. உடைமைச் சமுதாயம் பெண்ணின் வரலாற்றுத் தோல்வியை நிர்ணயித்தது. பாலியல் உறவுகள் மற்றொரு சமூக ஏற்றத்தாழ்வின் காரணியாக மாறியது என்று ஏங்கெல்சு எழுதுகிறார். இந்திய, தமிழ்ச் சூழல்களில் கம்யூனிஸ்டுகள், கம்யூனிஸ்ட் அறிவாளிகள் குடும்பங்களை அவற்றின் வர்க்கப் பண்புகளைக் கொண்டு பகுத்து ஆய்வு செய்துள்ளார்களா? முதலாளியக் குடும்பம் என்பது இன்னும் கூடுதலாகச் சிக்கல் நிறைந்த ஓர் அமைப்பு. தனி உடைமையால், பண உறவுகளால் குடும்பம் சீரழிக்கப்படுவது முதலாளியச் சூழல்களில் உச்சக்கட்டத்தை எட்டுகிறது.

ஏங்கெல்சு இந்நூலின் முதற்பதிப்புக்கு 1884இல் எழுதிய முன்னுரையையும் நான்காம் பதிப்புக்கு 1891இல் எழுதிய முன்னுரையையும் மொழிபெயர்ப்பாளர்கள் தமிழ்ப் பதிப்போடு சேர்த்துத் தந்துள்ளார்கள். இம் முன்னுரைகள் சில குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளைக் கொண்டுள்ளன. மோர்கன் பற்றிய மதிப்பீடு முதன்மையானது. "நாற்பது ஆண்டுகளுக்கு முன் மார்க்சு கண்டுபடித்திருந்த வரலாற்றுப் பொருள்முதல் வாதக் கருத்தோட்டத்தைத்தான் மார்கன் தன்னுடைய வழியில் அமெரிக்காவில் மறுபடியும் கண்டுபிடித்தார்." இது மோர்கனின் நூல் குறித்து ஏங்கெல்சு வழக்கும் அற்புதமான, பெருந்தன்மையான மதிப்பீடு. இதே கருத்தை மார்க்சும் கொண்டிருந்தார் என்பதையும் ஏங்கெல்சு உறுதிப்படுத்துகிறார். மோர்கன் பற்றிய மதிப்பீட்டை மார்க்சு "மக்கள் முன்பாக வைத்து, அதன் மூலம் அவற்றின் முக்கியத்துவம் முழுவதையும் தெளிவாக்க வேண்டும் என்று திட்டமிட்டிருந்தார்." மார்க்சு, ஏங்கெல்சு ஆகியோரின் அறிவுப்புல நேர்மைக்கு இவ்வரிகளெல்லாம் சான்றாக நிற்கின்றன. இன்னும் கூடுதலாக, மோர்கன் பண்டைய உலகின் கூறுகளைக் கொண்டு, தற்கால முதலாளிய சமூகத்தின் அடிப்படையான பண்ட உற்பத்தி முறையை விமர்சனம் செய்துள்ளார் என்பதை எடுத்துக்காட்டுகிறார். "மட்டுமின்றி, கார்ல்மார்க்சு உபயோகப்படுத்தியிருக்கக் கூடிய சொற்களில் சமூகத்தின் எதிர்கால மாற்றத்தைப் பற்றிப் பேசியுள்ளார்." நேரில் சந்தித்துக் கொள்ளாத ஓர் அறிஞரோடு, அவரது கண்டுபிடிப்புகளுக்காகவும் கருத்துக்களுக்காகவும் மார்க்சும் ஏங்கெல்சும் தோழமை பாராட்டும் பண்பை இங்கு காணுகிறோம்.

நன்றி : உங்கள் நூலகம், 2017 நவம்பர்,

# வேழம் மணப்பேன்

- வையவன்

நல்லாய் தோழி! நான்சொல் வதைக்கேள்
பொல்லா நினைவில் புதைகின் றேன்நான்
சொல்லிப் புலம்பிட நீதா னுண்டு
ஆடியும் சுவரும் அறியா தென்வலி
எல்லா உயிர்க்கும் ஏதோ ஆசை
உள்ளே யிருந்து உருக்குலைத் திடுமோ?
எனக்கோர் ஆசை; எப்படிச் சொல்வேன்?
மனத்துள் திணித்து மலைப்புறு கின்றேன்
அன்னையும் தந்தையும் மணமகன் தேடி
அலைகின் றார்கள் ஜாதகத் தோடு
கண்ணுயிர் கலந்து வாழும் வாழ்வை
கைரே கைகளில் தேடுகின் றார்கள்
என்னுள் இருக்கும் விருப்பம் ஒன்றை
ஏனோ கேட்க மறுக்கின் றார்கள்
பெண்ணுள் தோன்றும் விருப்பம் யாவும்
மண்ணைத் தோண்டிப் புதைக்கத் தானா?
கண்ணெனப் போற்றும் நம்தமிழ் நாட்டுள்
இன்னல் எத்தனை எண்ணிப் பார்நீ
மண்ணை விற்றுத் தின்னும் ஒருவனை
மாப்பிளை யென்று காட்டு கிறார்கள்
ஈழம் காவிரி கூடங் குளமொடு
கதிரா மங்கல உரிமைப் போரில்
வேழம் போலும் ஒருவனை
நானும் மணப்பேன் நவில்வாய் தாய்க்கே!



# மக்கள் விரோதிகளை விரட்டுவோம்

இனிவரும் காலங்களில் மக்கள் விரோதிகளே ஆட்சி செய்வார்கள். எந்தத் துறையை எடுத்தாலும் கையூட்டு இல்லாமல் வேலைகள் நடப்பதில்லை. நீர் நிலைகளைச் சரி செய்ததாகத் திட்டம் போட்டுப் பணத்தை முழுமையாகக் கொள்ளையடித்துள்ளனர். 90 சதவீதம் நீர்நிலைகள் அப் படியே உள்ளன. அனைத்து நீர்நிலைகளும் அரசியல் கட்சியின் தொண்டர்கள் கையில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. ஆக்கிரமிப்பில் ஏற்படும் போட்டியில் தினமும் வெட்டு, குத்து, கொலைகள் நடக்கின்றன.

நிலங்களை மனைபோட்டு கடந்த 40 ஆண்டுகளாக வீடு கட்டாமல் விவசாயம் செய்யாமல் காலி மனைகளாகவே உள்ளன. 40 ஆண்டுகளில் தானிய உற்பத்தி மிகவும் கணிச மாகப் பாதிக்கப்பட்டுள்ளது. மற்ற தொழில்களில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கு விலை, உற்பத்தி செய்யுமிடத் திலேயே நிர்ணயம் செய்யப்படுகின்றது. ஆனால் விவசாய உற்பத்திக்கு விலையே இடைத்தரகர்கள் தான் நிர்ணயம் செய்கின்றனர். விவசாயக் கூலியும் இடுபொருட்களும் உயர்ந்து விட்டன. உற்பத்திப் பொருள்கள் விலை மட்டும் தரகர்கள் நிர்ணயித்தபடி நடக்கின்றது.

மருத்துவமும் கல்வியும் நம்மை ஆட்சி செய்யும் அரசுகள் சரியாகக் கொடுக்கவில்லை. இமயம் முதல் குமரி வரை சமச்சீர் கல்வி இல்லை. கல்வி வியாபாரத்தை ஒழிக்க, எந்த அரசும் முன்வரவில்லை. வாக்கை விற்று வாழ்நாள் முழுவதும் வாழமுடியாது. வாழ்க்கைத் தரம் உயர கல்வித் தரம் உயர வேண்டும். மக்களுக்குத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அரசியல் அமைப்பை உருவாக்குவோம்! மக்கள் விரோதிகளை விரட்டுவோம்!

**- உழவர் மகன் ப.வ.**

**சிந்தனையாளன் இதழுக்கு நேரடியாக வங்கிக் கணக்கு மூலம் பணம் கட்ட விரும்புவோர்**

**TAMILNADU STATE APEX CO-OPERATIVE BANK LTD.**
**Triplicane Branch, Chennai - 600 005.**

**A/c. No. : 232007660**
**IFSC Code : TNSC00001**

பணம் அனுப்பியபின் அதற்கு உரிய தகவலை மடல் வழியாகச் சிந்தனையாளன் அலுவலகத்திற்குத் தெரிவிக்கு மாறு கேட்டுக் கொள்கிறோம். *- ஆசிரியர்*

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி சனவரி-2018

| | | |
|---|---|---|
| **இரா.சின்னசாமி** | திருச்சி | 5000/- |
| **கோ. பார்த்தசாரதி** | திருச்சி | 3000/- |
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| **காஞ்சி அரங்க. சானகிராமன் குடும்பத்தினர்** | | 1000/- |
| **க.ஆறுமுகம்** | குன்னத்தூர், ஆரணி | 600/- |
| **வைஷ்ணவி** | காஞ்சிபுரம் | 500/- |
| **எழில் பொன்மகள்-எழில் பூமகள்** | காஞ்சிபுரம் | 500/- |
| **சு.லோகநாதன்** | காஞ்சிபுரம் | 500/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 500/- |
| **தமிழேந்தி** | அரக்கோணம் | 500/- |
| **இரா.பச்சமலை** | சென்னை | 500/- |
| பாவலர் **வையவன்** | திருவண்ணாமலை | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| **பகுத்தறிவாளன்** | திருப்பத்தூர் | 250/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| **மரு. வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **இளவரசன்,** தமிழ்க்களம் | அரியலூர் | 200/- |
| **கே.எம்.இராசேந்திரன்** | துரைமங்கலம் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| திருமதி. **சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **நா. மதனகவி** | வாணியம்பாடி | 100/- |
| **இ. கபிலன்** | சிதம்பரம் | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **கோ.நக்கீரன்** | சோளிங்கபுரம் | 100/- |
| **க.பிரபாகரன்** | தஞ்சாவூர் | 100/- |
| **இரா.காந்தி** | வடக்கு மாங்குடி | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - சனவரி-2018

| | | |
|---|---|---|
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் .... | 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பென்னாத்தூர் .... | 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி .... | 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி .... | 100/- |
| **அறிவுக்கடல் ராஜ்குமார்** | சிதம்பரம் .... | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி .... | 100/- |


**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர், எம்.டபிள்யூ.பி. 2ஆம் குறுக்குத் தெரு, அம்பத்தூர், சென்னை - 53.
அச்சிட்டோர் : **பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம்,** சென்னை-53. ☎ : 044-2625 2119

Printed by **V. ANAIMUTHU** and Published by V. Anaimuthu on behalf of Marxist Periyarist Community Party, and printed at Periyar Printers & Publishers Place of Printing No.2B/85, K.S.R.Nagar, M.W.P. 2nd Cross Street, Ambattur, Chennai-53. Editor : **V. ANAIMUTHU**